# மல்லிகை வாசகம்

( ஏழாம் புத்தகம் )

ஏழாம் வகுப்பு

ஆசிரியர் :

டாக்டர் மா. இராசமாணிக்கனுர்

M.A., L.T., M.O.L. Ph.D.

நேஷனல் பப்ளிஷிங் கம்பெனி, பெங்களூர்-1.

# மல்லிகை வாசகம்

(ஏழாம் புத்தகம்)

ஏழாம் வகுப்பு

ஆசிரியர் :

டாக்டர் மா. இராசமாணிக்கனார்,

M.A., L.T., M.O.L., Ph.D.

நேஷனல் பப்ளிஷிங் கம்பெனி

60, விஸ்வநாத ராவ் ரோடு, பெங்களூர்-1

காப்பிரைட்] 1961 [விலை ரூ. 2.

முதற்பதிப்பு—1961

[Paper used: 34 lbs. D/D White Printing.]

*Printed at Sree Ramaprasad Press, 56, Broadway, Madras-1.*

# முகவுரை

இத்தமிழ்ப் பாட நூல் ஏழாம் வகுப்பு மாண வர்க்கு உரியது. இது மைசூர் நாட்டுக் கல்வித் துறையினர் ஏழாம் வகுப்புக்கு வெளியிட்டுள்ள (G. O. No. ED 8 DEI 60 of April 12, 1960) பாட இயலின்படி தயாரிக்கப்பெற்றது.

இதன்கண் 21 உரைப்பாடங்களும் 9 செய்யுட் பாடங்களும் தரப்பெற்றுள்ளன. பிள்ளைகள் சுவைக் கும், ஆசிரியர் சுவைக்கும் பொருந்தும்படி 200 வரி களைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளும் வகையில் ஏறத் தாழ 300 வரிகளைக்கொண்ட செய்யுட் பாடங்கள் தரப்பெற்றுள்ளன. பாடமாக நடத்தப்பெறும் 200 வரிகளுள் 100 வரிகள் மனப்பாடத்திற்கு உரியன என்பது விதியாகும்.

ஒவ்வொரு பாடத்தின் ஈற்றிலும் அருஞ்சொற் பொருள், கேள்விகள், பயிற்சி, இலக்கணம் தரப் பட்டுள்ளன. மாணவர் இவற்றில் கருத்தூன்று வராயின், மிக்க பயன் பெறுவர்.

ஆசிரியர்

# நன்றியுரை

1. பழியர் என்னும் பாடம் ஆசிரியர் திரு. C. அன்னகாமு அவர்கள் எழுதியுள்ள "மேல்மலை மக்கள்" என்னும் நூலின் துணையைக்கொண்டு எழுதப்பெற்றது. இதற்கு இசைவுதந்த ஆசிரியர்க்கு எமது நன்றி உரியது.

2. "சிறுவர் குற்றம்" என்னும் பாடத்தை இந்நூலில் வெளியிட இசைவுதந்த தென்னார்க்காடு மாவட்டக் காவல்துறை அதிகாரி திரு. பொ. பரமகுரு, எம். ஏ., பி. எல். அவர்களுக்கு எமது நன்றி உரியது.

# உள்ளுறை


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| | **உரைநடை** | | |
| 1. | பாண்டியர் ஒழுக்கம் | ... | 1 |
| 2. | ஊருணி நீர் | ... | 7 |
| 3. | வாழைப் பயிர் | ... | 13 |
| 4. | சங்ககாலப் புலவர்கள் | ... | 18 |
| 5. | நன்னனது மலைநாடு | ... | 23 |
| 6. | கலை | ... | 30 |
| 7. | வள்ளுவர் வாய்மொழி | ... | 35 |
| 8. | எங்கள் சுற்றுலா | ... | 41 |
| 9. | மணிமேகலை ஆசிரியர் | ... | 48 |
| 10. | பழியர் | ... | 53 |
| 11. | பல்லவ மல்லன் | ... | 59 |
| 12. | சிறிய கைத்தொழில்கள் | ... | 65 |
| 13. | மைசூர் நாடு | ... | 71 |
| 14. | அறிவியல் அறிஞர் மார்க்கோனி | ... | 80 |
| 15. | இளைஞர் இயக்கங்கள் | ... | 86 |
| 16. | ஆதித்த சோழன் | ... | 92 |
| 17. | கிழக்கு ஆப்பிரிக்கா | ... | 99 |
| 18. | மேனாட்டுத் தமிழ்த் தொண்டர் | ... | 105 |
| 19. | டாக்டர் ஆல்பெர்ட் சுவெட்சர் | ... | 112 |
| 20. | சிறுவர் குற்றம் | ... | 118 |
| 21. | நள்ளியின் கொடைத்தன்மை | ... | 123 |

| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|

## செய்யுள்

### I. வாழ்த்து


1. தேவாரம் ... 129
2. நாலாயிர திவ்வியப் பிரபந்தம் ... 129
3. திருமதீனக் கலம்பகம் ... 129
4. தேம்பாவணி ... 129


### II. அறவுரை


1. திரிகடுகம் ... 132
2. பழமொழி நானூறு ... 134
3. நாலடியார் ... 136
4. திருக்குறள் ... 138


### III. கதை


1. பெரிய புராணம் ... 142
2. கம்பராமாயணம் ... 148
3. நளவெண்பா ... 153


### IV. பலசுவை


1. மாரிவாயில் ... 157
2. தஞ்சைப் பெருவுடையார் உலா ... 157
3. திருக்குற்ருலக் குறவஞ்சி ... 158

## தேசீய கீதம்

ஜன கண மன அதி நாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல வங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவசுப நாமே ஜாகே
தவசுப ஆசிஷ மாங்கே
காயே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
ஜயஹே! ஜயஹே! ஜயஹே!
ஜய ஜய ஜய ஜயஹே!

## நாட்டு வணக்கம்

இந்தியாவின் சுக துக்கங்களை நிர்ணயிக்கிற நீதான்
மக்கள் எல்லோருடைய மனத்திலும் ஆட்சி செலுத்துகிறாய்;

நின் திருநாமம், பஞ்சாப்பையும் சிந்துவையும்
குஜராத்தையும் மஹாராஷ்டிரத்தையும்
திராவிடத்தையும் ஒரிஸ்ஸாவையும் வங்காளத்தையும்
உள்ளக் கிளர்ச்சியடையச் செய்கிறது.

அது விந்திய, ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது.
யமுனை, கங்கை நதிகளின் இன்ப நாதத்தில் கலக்கிறது;
இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது.
அவை நின் ஆசியை வேண்டுகின்றன; நின் புகழைப் பாடுகின்றன;
இந்தியாவின் சுக துக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு

**வெற்றி! வெற்றி! வெற்றி!**

# 1. பாண்டியர் ஒழுக்கம்

1. ஏறத்தாழ ஆயிரத்து எழுநூறு ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாடு வடக்கில் வேங்கடத்தையும், தெற்கில் கன்னியாகுமரியையும், கிழக்கில் வங்கக் கடலையும், மேற்கில் அரபிக் கடலையும் எல்லைகளாகப் பெற்றிருந்தது. அக்காலத் தமிழகத்தில் சேர சோழ பாண்டியர் என்னும் முடியுடை வேந்தரும் சிற்றரசர் பலரும் இருந்தனர்.

2. *சேரநாடு* என்பது இன்றைய திருவாங்கூர் கொச்சி நாடுகளும் மலையாள மாவட்டமும் சேர்ந்த நிலப் பகுதியாகும். *சோழநாடு* என்பது இன்றைய தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களும் தென் ஆர்க்காடு மாவட்டத்தின் தென்பகுதியும் சேர்ந்த நிலப்பரப்பாகும். இன்றுள்ள மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்கள் பழைய *பாண்டியநாடாகும்*. தமிழகத்தில் இந்த மூன்று நாடுகள் நீங்கலாக உள்ள நிலப்பகுதியில் சிற்றரசர் பலர் சிறு நாடுகளை அமைத்துக் கொண்டு ஆண்டுவந்தனர்.

3. சேர சோழ பாண்டியர் முடியுடை மன்னர் எனப்பட்டனர். ஏனையோர்க்கு முடியில்லை. பேரரசரும் சிற்றரசரும் தமிழைத் தம் உயிர்போலக் கருதினர்; இயற்றமிழில் வல்ல புலவரையும், இசைத் தமிழில் வல்ல பாணரையும், நாடகத்தமிழில் வல்ல கூத்தரையும் நன்முறையில் வரவேற்றனர்; இனிய உணவும் பலவகைப் பரிசில்களும் ஈந்து மகிழ்ந்தனர். இங்ஙனம் பேரரசர்களிடமும் சிற்றரசர்களிடமும் மதிப்புப்பெற்ற ஆண்பாற் புலவரும் பெண்பாற் புலவரும் பலராவர்.

4. பொதுவாகத் தமிழ்வேந்தர் அனைவரும் தமிழ் வல்லாரைப் போற்றிப் பாதுகாத்தனர். எனினும் சிறப்பு முறையில் தமிழை வளர்த்தவர் பாண்டியரே யாவர். பாண்டியர் தம் தலைநகரில் ஒரு *தமிழ்ச்சங்கத்தை* நிறுவினர்; தமிழகப் புலவர்களை ஒன்று சேர்த்தனர்; அவர்தம் பாக்களையும் நூல்களையும் சங்கத்தில் அரங்

கேற்றம் செய்தனர். தாங்களும் தமிழ்ப் புலவர்களாய்த் திகழ்ந்தனர்; தம் குடும்பப் பெண்மணிகளையும் புலமை பெறச்செய்தனர்; நாட்டில் பொதுக்கல்வியை வற்புறுத்தினர்; கைத்தொழிலையும் வாணிகத்தையும் வளம்பெறச் செய்தனர்.

5. இங்ஙனம் பல துறைகளில் வளத்தை உண்டாக்கிய பாண்டிய மன்னர்கள் கடமை உணர்ச்சி மிக்கவராய் விளங்கினர்; கண்களை இமைகள் காப்பதுபோலக் குடிமக்களைக் காத்துவந்தனர்; குடிகளுக்குத் தெரியாமல் இரவில் மாறுவேடம் அணிந்து நகரை வலம் வந்தனர்; அங்ஙனம் வந்து குடிகளின் குறைகளை அகற்றினர்.

6. பாண்டியன் ஒருவன் சில இரவுகளில் இங்ஙனம் மாறுவேடத்துடன் வேதியர் வாழ்ந்த தெருவழியே வந்துகொண்டிருந்தான். அப்போது ஒரு வீட்டில் ஓர் ஆடவனும் ஒரு பெண்மணியும் பேசுவதைக் கேட்டான்; அவ்வீட்டுத் திண்ணையில் அமர்ந்தான்; வீட்டுக்குரிய வேதியன் தான் மறுநாள் காசியாத்திரை செல்ல இருப்பதைத் தன் மனைவியிடம் அறிவித்தான். மனைவி அவனைப் பார்த்து, "தாங்கள் காசியாத்திரை செல்லின், நான் எவ்வாறு இவ்வீட்டில் தங்கியிருப்பேன்!" என்று கூறிக் கவலைப்பட்டாள். வேதியன் நகைத்து, "நீ இதற்காக கவலைப்படுகிறாய்? ***அறநெறி தவறாத பாண்டியன் ஆட்சியில் நீ தனித்திருக்கலாம். அவனது செங்கோல் உன்னைக் காக்கும்,***" என்று மொழிந்தான்.

7. வேதியன் கூற்றைக் கேட்ட பாண்டியன் உள்ளம் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தது. வேதியன் தனது ஆட்சியின்மீது கொண்ட அழுத்தமான நம்பிக்கையை எண்ணியெண்ணிப் பாண்டியன் உள்ளம் மகிழ்ந்தான். அவன் மறுநாள் முதல் ஒவ்வோர் இரவிலும் ஒருவரும் அறியாமல் அவ்வீட்டைக் காவல் காத்து வந்தான். இங்ஙனம் ஆறு மாதங்கள் கடந்தன. ஒரு நாள் இரவு அவ்வீட்டில் ஆடவன் குரல் கேட்டது. காசிக்குச் சென்ற மறையவன் திரும்பி வந்துவிட்டான்.

ஆயின், அவனது குரல் மாறுபட்டிருந்தது. உண்மை யறியாத அரசன் விழித்தான்; "நாம் வீட்டுக் கதவைத் தட்டுவோம். உள் இருப்பவன் வீட்டுக்கு உரிய வனுயின் உரத்தகுரலில் நம்மை அதட்டுவான்," என்று தன்னுள் எண்ணி, உடனே கதவைத் தட்டினுன். மறையவன், "யாரடா அவன்?" என்று உரத்த குரலில் அதட்டினுன். பாண்டியன், "வீட்டிற்குரியவன் வந்து விட்டான். நாம் கதவு தட்டியதைக் கொண்டு தன் மனைவியைத் தவருக எண்ணுவானே?" என்று எண்ணி ஐயுற்ருன். உடனே அவன் அத்தெருவில் இருந்த எல்லா வீட்டுக் கதவுகளையும் தடதடவென்று தட்டிவிட்டு மறைந்தான்.

8. அந்த நள்ளிரவில் ஒவ்வொரு வீட்டாரும் வெளியில் வந்தனர்; எவனே ஒரு பித்தன் எல்லா வீட்டுக் கதவுகளையும் தட்டிவிட்டு மறைந்தான் என்று பேசிக்கொண்டனர். ஆயினும் அவர்கள் மறுநாள் மன்னனிடம் சென்று இந்த நிகழ்ச்சியை உரைத்தனர்; அப்பித்தனது கையைக் குறைக்கவேண்டும் என்று



கூறினர். பாண்டியன் தனது இடக் கையில் வாளைத் தாங்கி, "இந்தக் கைதான் உங்கள் வீட்டுக் கதவுகளைத் தட்டியது," என்று சொல்லிக்கொண்டே தன் வலக் கையை வெட்டிவிட்டான். பின்பு நடந்தவற்றை

நவின்ருன். வேதியர் வேந்தனது ஒழுக்கத்தை எண்ணி யெண்ணி வியந்தனர். வேந்தன் வெட்டப்பட்ட கைக்குப் பதிலாகப் பொற்கையைப் பொருத்திக்கொண்டான்; அன்று முதல் ***பொற்கைப் பாண்டியன்*** என்று அழைக்கப்பட்டான்.

9. ***நெடுஞ்செழியன்*** என்பவன் இளம் பருவத்தில் அரியணை ஏறினன். அவனை உடனே போரில் முறியடித்து நாட்டைக் கைப்பற்றவேண்டும் என்று சேரனும் சோழனும் விரும்பினர். அவ்விருவருக்கும் உதவியாகச் சிற்றரசர் ஐவர் சேர்ந்தனர். அந்த எழுவரும் பெரும் படையுடன் பாண்டிய நாட்டின்மீது படையெடுத்தனர். இளைஞனை நெடுஞ்செழியன் இதனை ஒற்றர் வாயிலாக அறிந்தான்; மிக்க சினம் கொண்டான். அவன் தன் அவையோரைப் பார்த்து, "பெரியோர்களே, இருபெரு வேந்தரும் சிற்றரசர் ஐவரும் யான் இளைஞன் என்றும், என்னை எளிதில் வெல்லலாம் என்றும் பேசிக்கொண்டனராம். யான் இந்த எழுவரையும் போரில் வெல்லேனுயின், மாங்குடி மருதனைத் தலைவனகக் கொண்ட புலவர் கூட்டம் எனது நாட்டைப் பாடாது ஒழிவதாக! 'எம் அரசன் கொடியவன்' என்று குடிமக்கள் என்னைப் பழி தூற்றுவாராக!" என்று வெஞ்சினம் கூறினன். அவ்வீர இளைஞன் தன் பகைவர் எழுவரையும் தலையாலங்கானம் என்னுமிடத்தில் நடந்த போரில் முற்றிலும் முறியடித்தான்; அதனுல் அவன் 'தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்' என்று அழைக்கப்பட்டான்.

10. ***பூதப்பாண்டியன்*** என்பவன் கல்வி கேள்விகளில் சிறந்தவன். நாஞ்சில் நாட்டில் 'பூதபாண்டி' என்னும் பெயரில் ஓர் ஊர் இன்றும் இருந்துவருகிறது. அப்பாண்டியன் மனைவி சிறந்த கவிபாடும் ஆற்றல் பெற்றவள். கணவனும் மனைவியும் மலரும் மணமும் போலவும் உடலும் உயிரும் போலவும் வாழ்ந்தனர். ஒருமுறை பாண்டிய நாட்டின்மீது வேந்தர் சிலர் படையெடுத்து வந்தனர். பாண்டியன் கடுஞ்சினம் கொண்டான்; "என்மீது போருக்கு வரும் பகைவரை

யான் வெல்லேனாயின், என் உயிரனைய மனைவியை விட்டு யான் நீங்குவேனாகுக; என் சிறந்த நண்பர்களைப் பிரிந்தவனாகுக; குடிமக்களைக் காக்கும் பாண்டிய மரபில் யான் பிறவேனாகுக," என்று சூளுரைத்தான்.

11. கோவலன் மனைவியான கண்ணகியின் காற்சிலம்பில் மாணிக்கப் பரலைக் கண்ட பாண்டியன் **நெடுஞ்செழியன்**, "எங்கள் சிலம்பு முத்துப்பரலை உடையது; உனது சிலம்பு மாணிக்கப்பரலை உடையது; யான் பொற்கொல்லன் பேச்சை நம்பி உனது கணவனைக் கொல்வித்தேன்; யான் செய்தது பொறுக்க முடியாத குற்றம்; என் ஆயுள் கெடுவதாக," என்று கூறிக்கொண்டே அரியணையிலிருந்து வீழ்ந்தான். அவ்வளவில் அவன் உயிர் பிரிந்தது.

12. இதுகாறும் கூறப்பெற்ற நிகழ்ச்சிகள் உணர்த்துபவை யாவை? பாண்டியர் அறநெறி தவறாதவர், குடிகளைக் கண்ணும் கருத்துமாய் ஆண்டுவந்தவர், புலவர் பெருமக்களைப் போற்றியவர், உண்மை நட்புக்கு மதிப்பளிப்பவர், சிறந்த ஒழுக்கமுடையவர் என்பன மேலே கூறப்பெற்ற நிகழ்ச்சிகளிலிருந்து புலனாகின்றன அல்லவா?

## அருஞ்சொற்பொருள்

வேங்கடம் – திருவேங்கடமலை, திருப்பதி மலை. முடி - கிரீடம். இயற்றமிழ் - செய்யுளும் உரைநடையும். இசைத்தமிழ்-பண்ணோடு பாடப்படும் தமிழ். புலமை – அறிவு. புலவர் - அறிஞர். அரங்கேற்றம் – புலவர் அவையில் படித்துக்காட்டி ஒப்புதல் பெறுதல். அகற்றினர் – நீக்கினர். வேதியர் - வேதங்களில் வல்லவர், பிராமணர். மட்டு – அளவு. மறையவன் - வேதியன், பிராமணன். தடதட-இது பிரிக்க முடியாத இரண்டு சொற்களால் அமைந்தது; இரட்டைக் கிளவி எனப்படும். நள்ளிரவு - நடு இரவு. பித்தன் - பைத்தியம் பிடித்தவன். குறைக்க – வெட்ட. நவின்றான் – சொன்னான். ஒற்றர்-உளவு அறிபவர். மாங்குடிமருதன் – இவர் சங்ககாலப் புலவர்; மதுரைக் காஞ்சி என்னும் பலநூறு அடிகளைக் கொண்ட நீண்ட பாடலைப் பாடியவர். வஞ்சினம் - சபதம். நாஞ்சில் நாடு – கன்னியாகுமரி மாவட்டம். பிறப்பேன் × பிறவேன். சூள் - சபதம்.

## கேள்விகள்

1. பழைய தமிழ் நாட்டின் எல்லைகள் எவை?
2. பேரரசரும் சிற்றரசரும் தமிழை எங்ஙனம் வளர்த்தனர்?
3. பாண்டியர் எவ்வாறு சிறப்பு முறையில் தமிழை வளர்த்தனர்?
4. பொற்கைப் பாண்டியன் வரலாறு யாது?
5. நெடுஞ்செழியன் கூறிய வஞ்சினம் யாது?
6. பூதப்பாண்டியன் சூளுரை யாது?

## பயிற்சி

1. பிரித்துக்காட்டுக :—நாடகத்தமிழ், திருச்சிராப்பள்ளி, சிற்றரசர், பேரரசர், தனித்திருக்கலாம்.

2. சேர்த்துக் கூறுக :—தமிழகம் + புலவர், மக்களை + காத்து, எண்ணி + எண்ணி, வீடு + கதவு, அ + பித்தன்.

3. கீழ்வருவனவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறுக :—தடதட, மலரும் மணமும்போல, செங்கோல், அறநெறி, ஒற்றர்.

4. பாண்டியரும் தமிழும், பொற்கைப்பாண்டியன், தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், பூதப்பாண்டியன், கோவலன் காலத்து நெடுஞ்செழியன்—இக்குறிப்புக்களைத் துணையாகக்கொண்டு இப்பாடப் பொருளை ஒரு கட்டுரையாக எழுதுக.

5. உயிரெழுத்துக்கள் பன்னிரண்டில் அ, இ, உ, எ, ஒ என்னும் ஐந்தும் குறுகிய ஓசை உடையவை. (ஒரு மாத்திரை ஓசை உடையன.) இவற்றுள் உகரம் மட்டும் சில இடங்களில் அரை மாத்திரை ஓசை பெறும்.

1. மடு — ட் + உ
↓ ஒரு மாத்திரை ஓசை உடையது.

2. மாடு — ட் + உ
↓ அரைமாத்திரை ஓசை உடையது.

ஒரு மாத்திரை ஓசை உடைய உகரம் முற்றியலுகரம் (முழு ஓசை பெற்று இயலும் உகரம்) எனப்படும்.

அரை மாத்திரை ஓசைபெற்று ஒலிக்கும் உகரம் குற்றியலுகரம் (குறைந்த ஓசைபெற்று இயலும் உகரம்) எனப்படும்.

தனி நெடிலுக்குப் பின்னும், இரண்டு முதலிய எழுத்துக்களுக்குப் பின்னும் வல்லின மெய்களின்மேல் ஏறிவரும் உகரம் குற்றியலுகரம் எனப்படும்.

## 2. ஊருணி நீர்

1. *நக்கீரர்* என்பவர் முல்லையூர் பெருநிலக்கிழார். அவரது மனைவியார் ***அழகம்மையார்*** என்பவர். ***புலவர் அழகப்பர்*** என்பவர் முல்லையூரைச் சேர்ந்தவர். அவர் பல ஆண்டுகள் நக்கீரருடன் பழகிவந்தார். புலவரது பழக்கத்தால் நக்கீரர் சங்ககாலத் தமிழ் நூல்களை நன் கறிந்தார்; பழந்தமிழ் மக்கள் வாழ்க்கையையும் உயர்ந்த கொள்கைகளையும் உணர்ந்திருந்தார். அவர் திருக்குறளை நன்கு கற்றவர்; வள்ளுவர் பொன்மொழிகளைத் தம்மால் இயன்றவரையில் கடைப்பிடித்தார்.

2. அழகம்மையாரும் தமிழறிவில் சிறந்து விளங் கினார்; சிற்றூர் மக்களிடம் நன்கு பழகினார்; தம் பண்ணை ஆட்களிடம் பேரன்பு காட்டினார்; அடிக்கடி அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தார். அழகப்பருக்கு ஓர் ஆண்மகனும் ஒரு பெண்மகளும் இருந்தனர். அவருடைய மனைவியார் சில ஆண்டுகளுக்கு முன்னரே காலமானார். அழகம்மையாரே அப்பிள்ளைகள் இருவரையும் தம் வள மனையில் வைத்து வளர்த்துவந்தார். நக்கீரர் வேண்டு கோள்மீது அழகப்பரும் அவருடன் தங்கி வாழலானார்.

3. நக்கீரருக்கும் அழகம்மையாருக்கும் ஒரு மகள் இருந்தாள். அவள் பெயர் ***தமிழரசி***. அழகப்பர் தமிழரசிக் கும் தம் மக்களான நெடுஞ்செழியனுக்கும் மாதவிக்கும் நாளும் பாடம் கற்பிக்கலானார். பிள்ளைகளின் கல்வி அறிவு வளர்பிறைபோல வளர்ந்துவந்தது. அவர்கள் இறைப் பற்றிலும் நல்ல ஒழுக்கத்திலும் சிறக்கத் தொடங்கினர்.

"இறைவனால் படைக்கப்பட்ட மக்கள் ஒரே இனத் தவர். சமுதாயத்தில் முதலில் தொழில் கருதியும் நிலம் கருதியும், பண்பு கருதியும் மக்கள் பெயர் பெற்றனர். செக்கு ஆட்டி எண்ணெய் எடுப்பவன் 'செக்கான்' எனப்பட்டான். வாணிகம் செய்தவன் வாணிகன் அல்லது வணிகன் எனப்பட்டான். இவை தொழில்பற்றி வந்த பெயர்கள். கடற்கரையில் வாழ்ந்து மீன் பிடித்தவர் '***கரையார்***'

எனப்பட்டனர். இது நிலம்பற்றி வந்த பெயராகும். 'மறம்' என்பதற்கு 'வீரம்' என்பது பொருள். மறத்தை உடையவர் 'மறவர்' எனப்பட்டனர். இது பண்புபற்றி வந்த பெயராகும். ஆயின், இவை நாளடைவில் சாதிபற்றிய பெயர்களாக மாறிவிட்டன. அறிவுடையோர் இச்சாதிகளை எண்ணி வேறுபாட்டு உணர்ச்சி கொள்ளார்," என்று புலவர் அழகப்பர் பிள்ளைகளிடம் அடிக்கடி கூறிவந்தார். அவர் அவ்வப்பொழுது கூறிவந்த அறிவுரைகள் பிள்ளைகளின் உள்ளங்களில் பசுமரத்தாணிபோலப் பதிந்தன. அப்பிள்ளைகள் எத்தகைய வேறுபாடும் காட்டாமல் எல்லாப் பிள்ளைகளுடனும் மனம் கலந்து பழகிவந்தனர்.

4. தமிழரசியும் புலவர் பிள்ளைகளும் அடிக்கடி பண்ணையாட்களின் தெருக்களுக்குச் சென்றனர்; அங்கிருந்த பிள்ளைகளுக்குப் படிக்கப் பள்ளி இல்லை என்பதை உணர்ந்தனர். தமிழரசி தன் தந்தையிடம் கூறி ஒரு பள்ளியைத் தோற்றுவித்தாள். அப்பள்ளியில் பண்ணையாட்களின் பிள்ளைகளும் பிற ஏழைப் பிள்ளைகளும் சேர்க்கப்பட்டனர். அழகம்மையார் அப்பிள்ளைகளுக்கு வேண்டிய புத்தகங்கள், எழுதுகோல்கள், கரும்பலகைகள், நோட்டுப் புத்தகங்கள் ஆகியவற்றை வழங்கினர். நக்கீரர் உடைகளை அளித்தார். பண்ணையாட்களும் பிற ஏழை மக்களும் நிலக்கிழாரையும் அவர் குடும்பத்தாரையும் உளமாரப் பாராட்டினர்.

5. தமிழரசி, தன் தந்தையிடம் பயிர் வேலை செய்யும் பண்ணையாட்களின் நலத்தில் மிகுந்த கவலை கொண்டாள். ஒருமுறை பண்ணையாட்களின் ஓலைக் குடிசைகள் தீப்பிடித்துச் சாம்பலாயின. பாவம்! அவ்வேழை மக்கள் இருக்க வீடின்றித் தவித்தனர். தமிழரசி அவர்களது அவல நிலையைக் கண்டு உள்ளம் உருகினள்; தன் தந்தையார் கட்டியிருந்த விருந்தினர் மாளிகையிலும் பள்ளியிலும் வேறு இடங்களிலும் சிறிது காலம் அவர்களைத் தங்கியிருக்கும்படி ஏற்பாடு செய்தாள். பெற்றோரும் தம் மகளைப்போலவே இரக்க உள்ளம் வாய்ந்தவர்.

ஆதலால் அவ்விருவரும் தமக்குச் சொந்தமான ஓரிடத்தில் ஒவ்வொரு பண்ணையாளுக்கும் ஓட்டு வீடு ஒன்று கட்டிக் கொடுத்தனர்; அவர்கள் அனைவருக்கும் பயன் படத்தக்க முறையில் இரண்டு பெரிய கிணறுகளையும் வெட்டுவித்தனர்; குளிப்பதற்கு அறைகளும் கட்டிக் கொடுத்தனர்.

6. நிலக்கிழார் பண்ணையாட்களுக்குச் செய்த நலன்களைக் கண்டு ஊராரும் வியந்து பாராட்டினர். இச்செய்தி அயலூர்களில் பரவியது. ஆங்காங்கு இருந்த நல்ல உள்ளம் படைத்த நிலக்கிழார்கள் தத்தம் பண்ணையாட்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்ய முற்பட்டனர். சில ஊர்களில் இருந்த பீடித் தொழிலாளர் போன்றவர் தத்தம் முதலாளிகளுக்குத் தம் தேவைகளைக் குறிப்பிட்டு வேண்டுகோள் விடுத்தனர். 'ஊருடன் ஒப்ப வாழ்' என்பது முதுமொழி. ஆதலால் அம்முதலாளிகள் தமக்கு விருப்பம் இல்லாவிடினும் தொழிலாளர் கிளர்ச்சிக்கு அஞ்சி, அவர்களுக்குச் சில வசதிகளைச் செய்ய முன் வந்தனர். நக்கீரர் செய்த நற்செயல் பல ஊர் ஏழைகளுக்கும் நலம் விளைத்ததைப் பாருங்கள்.

7. முல்லையூரில் நெசவாளர் குடும்பங்கள் நூறு இருந்தன. முதலாளிகள் சிலர் அவர்களுக்குக் குறைந்த கூலி கொடுத்துவந்தனர். அதனால் நெசவாளர் துன்புற்றனர். தமிழரசி அவர்களது துன்ப நிலையைப் போக்க எண்ணினாள்; தன் பெற்றோரிடமும் புலவரிடமும் நெசவாளரது அவல நிலையை எடுத்துக் கூறினாள். புலவர், "கூட்டுறவுச் சங்கத்தை அமைத்து, அரசாங்க உதவி பெற்றுச் சங்கத்தின் வாயிலாகவே நெசவுக்குரிய நூலைத் தருவிக்க வேண்டும்; சங்கத்திலிருந்தே எல்லோருக்கும் நூலை வழங்க வேண்டும்; நெய்யப்படும் ஆடைகளைச் சங்கமே வாங்கி விற்பனை செய்ய வேண்டும். அப்போதுதான் நெசவாளர் உயர்ந்த கூலியைப் பெறுவர்," என்று கூறினர்.

8. அழகம்மையார் தமது சொத்திலிருந்து ஐயாயிரம் வெண்பொற்காசுகளை உதவினர். நக்கீரரும் அதே

தொகையை வழங்கினர். புலவர், நிலக்கிழார் மாளிகையில் நெசவாளரை ஒன்றுகூட்டினர்; அவர்களிடம் ஒவ்வொருவருக்கும் பத்து வெண்பொற் காசுகள் கொடுத்தார்; அப்பணத்தைக்கொண்டு ஒவ்வொருவரையும் சங்கத்தின் உறுப்பினராகச் சேர்த்தார். சில மாதங்களில் அரசாங்க உதவியும் கிடைத்தது. புலவர் மகனை நெடுஞ்செழியன் அச்சங்கத்தின் கணக்கனுக நியமனம் பெற்றுன். நெசவாளருக்குத் தேவையான நூல் திங்கள்தோறும் தருவிக்கப்பட்டது. நெசவாளர் ஊக்கத்தோடு உழைத்தனர்; உயர்ந்த கூலியைப் பெற்றனர்; "**ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு**" என்னும் உண்மையை உணர்ந்தனர்.

9. நக்கீரர் தோற்றுவித்த பள்ளியில் ஊர்ப்பிள்ளைகள் அனைவரும் படித்தனர். தொடக்கத்தில் முதல் ஐந்து வகுப்புக்களைக் கொண்டிருந்த அப்பள்ளி, ஐந்து ஆண்டுகளுக்குப் பின்பு நடுத்தரப் பள்ளியாக மாறியது; மேலும் மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் உயர்நிலைப் பள்ளியாக மாறியது. ஊர்ப்பிள்ளைகள் அப்பள்ளியில் இலவசக் கல்வி கற்றனர். எல்லாப் பிள்ளைகளும் கல்வியில் ஈடுபட்டதால், முல்லையூரில் மக்களிடையே அறிவு வளர்ந்தது; தீய பழக்கங்கள் ஒழிந்தன. அவரவர் தத்தம் தொழில்களில் கருத்தைச் செலுத்தினர். புலவர் அழகப்பர் வாரத்திற்கு ஒரு முறை திருக்குறள்பற்றிச் சொற்பொழிவுகள் ஆற்றி வந்தார்; மக்கள் நல்வாழ்வு வாழ்வதற்குரிய வழிகளை எடுத்துரைத்தார்.

10. இங்ஙனம் பெருஞ் செல்வராகிய நக்கீரரும் அவர் குடும்பத்தாரும் புலவரும் மேற்கொண்ட நன் முயற்சியால் முல்லையூர் மக்கள் நல்வாழ்வு பெற்றனர். ஒவ்வோர் ஊரிலுமுள்ள பெருஞ் செல்வர்கள் ஒன்று சேர்ந்து நக்கீரரைப்போலப் பொதுப்பணியில் ஈடுபடின், நாட்டில் கல்வி வளரும்; தொழில்கள் வளரும்; ஏழை மக்கள் இன்பமாக வாழ வழி உண்டாகும். நல்ல உள்ளம் படைத்த செல்வனது செல்வம் ஊர் நடுவிலுள்ள **ஊருணி நீரைப்** போன்றது. நக்கீரர் செல்வம் ஊருணிநீரைப்போல

ஊரார்க்குப் பயன்பட்டது. அங்ஙனம் பிறர்க்குப் பயன்பட வாழ்தலே வாழ்வாகும். அத்தகைய வாழ்வைப் பெறுவதே பெருஞ்செல்வர்க்குப் புகழைத் தரும்.

## அருஞ்சொற்பொருள்

நக்கீரர் - இது சங்ககாலப் புலவரின் பெயர். அப்பெயரைப் பிற்காலத்தவர் தம் பிள்ளைகளுக்கு இட்டு வழங்குகின்றனர். சங்ககாலத் தமிழ்நூல்கள் - எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, திருக்குறள், தொல்காப்பியம், சிலப்பதிகாரம், மணிமேகலை என்பன. பண்ணையாட்கள்- வயல்வேலை செய்பவர். இறைப்பற்று - கடவுள்பற்று. பண்பு-குணம். வளர்பிறைபோல, பசுமரத்தாணிபோல - உவமைகள். அளித்தார், வழங்கினர் - கொடுத்தார். அவலம் - துன்பம். வெண்பொற்காசு - ரூபாய். ஊருணி - ஊர் + உண்ணி, ஊராரால் உண்ணப்படும் நீரைக் கொண்ட இடம்.

## கேள்விகள்

1. புலவர் அழகப்பர் சாதிகளைப்பற்றி யாது கூறினர்?
2. அழகம்மையார் நற்பண்புகள் யாவை?
3. தமிழரசி பிறர்க்குச் செய்த நன்மைகள் எவை?
4. நக்கீரர் நெசவாளர் வாழ்வை எவ்வாறு உயர்த்தினர்?
5. 'நக்கீரர் ஊருணி நீரைப்போன்றவர்' என்பது எவ்வாறு பொருந்தும்?
6. நீ இப்பாடத்தால் அறியும் படிப்பினை யாது?

## பயிற்சி

1. இப்பாடத்தில் வந்துள்ள உவமைகளை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறுக.

2. இப்பாடத்தில் வந்துள்ள பழமொழிகளைக் கூறுக. வேறு நான்கு பழமொழிகளையும் கூறுக.

3. கீழ்வருவனவற்றை உச்சரித்துப் பொருள் கூறுக:—மரம்-மறம், இரக்கம் – இறக்கம், பல்லி - பள்ளி, பால் - பாழ்.

4. நக்கீரர் இப்பாடச் செய்தியைக் கூறுவது போலக் கூறுக.

5. தமிழரசி இப்பாடச் செய்தியைச் சொல்வது போலச் சொல்லுக.

6. 1. ட் + உ
படு ↓ — முற்றியலுகரம்

ட் + உ
பட்டு ↓ — குற்றியலுகரம்

2. க் + உ
பகு ↓ — முற்றியலுகரம்

க் + உ
பங்கு ↓ — குற்றியலுகரம்

3. ற் + உ
மறு ↓ — முற்றியலுகரம்

ற் + உ
மாற்று ↓ — குற்றியலுகரம்

4. த் + உ
அது ↓ — முற்றியலுகரம்

த் + உ
அஃது ↓ — குற்றியலுகரம்

இப்பாடத்தில் வந்துள்ள குற்றியலுகரங்களையும் முற்றியலுகரங்களையும் எடுத்துக்காட்டுக.

## 3. வாழைப் பயிர்

(ஒரு சொற்பொழிவு)

1. என்பெயர் *மணிவண்ணன்*. நான் ஏழாம் வகுப்பு மாணவன். எனது ஊர் திருப்பூந்துருத்தி. இது தஞ்சை மாவட்டத்தில் காவிரிக்கரையில் அமைந்துள்ளது. இங்கு ஒரு பெரிய சிவன் கோவில் இருக்கிறது. இது திருநாவுக்கரசர் முதலிய சைவசமய குரவரால் பாடப்பெற்றது. திருநாவுக்கரசர் கட்டிய மடம் ஒன்று இங்கு இருந்தது. எங்கள் ஊர் காவிரியாற்றுப் பாய்ச்சலால் மிக்க செழிப்புடன் விளங்குகிறது. இங்கு ஒருவேலி நிலம் ரூபாய் இருபதாயிரத்துக்கு மேல் மதிப்புடையது. எங்கள் ஊரில் வாழைத் தோட்டங்கள் மிகுதி; மாந்தோப்புக்கள் நிறைய உண்டு; தென்னந்தோப்புக்களுக்கும் குறைவில்லை.

2. எங்கள் பள்ளியில் *மாணவர் கழகம்* ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. நாங்கள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை மாலையும் எங்கள் ஆசிரியர் தலைமையில் ஏதேனும் ஒரு பொருள்பற்றிப் பேசுவோம். ஆசிரியர் தம் கருத்தைத் தெரிவிப்பார். நாங்கள் பள்ளி நூல்நிலையத்திலுள்ள பல நூல்களைப் படித்துப் பேசுவதற்குரிய குறிப்புக்களைத் தயாரிப்போம்; அக்குறிப்புக்களைத் துணையாகக் கொண்டு கழகக் கூட்டங்களில் பேசுவோம். ஒவ்வொருவரும் பேசவேண்டும் என்று ஆசிரியர் வற்புறுத்துவார். ஒவ்வொரு வாரக் கூட்டத்திலும் பத்து மாணவர் பேசுவர். இங்ஙனம் வகுப்பிலுள்ள நாற்பது மாணவரும் நான்கு வாரங்களில் பேசுவர்.

3. இந்த ஏற்பாட்டினால் ஒவ்வொரு மாணவனும் மாதம் ஒருமுறை பேச வாய்ப்புக் கிடைக்கிறது. மாதத்திற்கு ஒருமுறை மாணவர் கழகத்தின் சிறப்புக் கூட்டம் நடைபெறும். ஒவ்வொரு துறையிலும் வல்லுநரான ஒருவர் வந்து ஒரு பொருள்பற்றிப் பேசுவார்; நாங்கள் அவர் பேச்சிலிருந்து குறிப்பு எடுத்துக்கொள்வோம்; அக்குறிப்புக்

களைத் துணையாகக் கொண்டு ஒரு கட்டுரை எழுதுவோம். எங்கள் ஆசிரியர் அக்கட்டுரையைத் திருத்தித் தருவார். இவ்வாறு மாணவர் கழகம் எங்களுக்குப் பேச்சுப் பயிற்சி அளிக்கிறது; பிறரைக் கொண்டு எங்களுக்குப் பல துறை அறிவையும் ஊட்டுகிறது.

4. எங்கள் ஊரில் *முருகப்பர்* என்னும் பெரியவர் ஒருவர் இருக்கிறார். அவரிடம் வாழைத் தோட்டங்கள் பல உண்டு. அவர் அத்தோட்டங்களாலேயே பிழைத்து வருகிறார். நாங்கள் 'வாழைப் பயிர்' என்பதுபற்றி எங்கள் கழகத்தில் பேசவேண்டும் என்று அவரை வேண்டிக் கொண்டோம். அவர் எங்கள் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு ஒரு சிறப்புக் கூட்டத்தில் பேசினார். அவர் பேச்சின் சுருக்கத்தைக் கீழே காண்க:

5. "பெரியோர்களே, என் அன்புக்குரிய மாணவர்களே, பல நூற்றாண்டுகளாக நம் நாட்டில் பயிராகும் நன்செய்ப் பயிர்களுள் *வாழையும்* ஒன்றாகும். இது நன்செய் நிலங்களிலும், நீர் வசதியுள்ள தோட்டங்களிலும், வீட்டுத் தோட்டங்களிலும் பயிர் செய்யப்படுகிறது. வாழையில் பலவகை உண்டு. அவற்றுள் பூவன், மொந்தன், பச்சை நாடன், இரசதாளி, பேயன், செவ்வாழை, நெய்வாழை, தேன்வாழை, நமரன், மலைவாழை, நேந்திரம் என்பன குறிப்பிடத் தக்கன.

6. "பூவன் எல்லா இடங்களிலும் பயிர் செய்யப்படுகிறது. கோவை மாவட்டத்திலும் தஞ்சை மாவட்டத்திலும் மொந்தன் மிகுதியாகப் பயிராகிறது. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இரசதாளி சிறப்பிடம் பெற்றுள்ளது. மதுரை மாவட்டத்து மலைகளில் செவ்வாழை, நெய்வாழை, தேன்வாழை, நமரன் முதலியன நன்கு பயிராகின்றன. மலைவாழையும் மிகுதியாகப் பயிராகிறது. நேந்திரம் மலையாள நாட்டில் சிறப்பாகப் பயிர் செய்யப்படுகிறது. மதுரை மாவட்டத்துச் சிறுமலையில் ஒரு தனி வகை வாழை பயிராகிறது. அதன் தோலில் புள்ளிகள் காணப்படும். அது 'சிறு மலைப்பழம்' எனப்படும். அது தனிச் சுவை

உடையது. பேயன் தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் நன்கு பயிராகிறது.

7. "இனி வாழையை எவ்வாறு பயிர் செய்ய வேண்டும் என்பதுபற்றிக் கூறுவேன்: நாம் வாழைக் கிழங்குகளை நடுவதற்கு ஒரு திங்களுக்கு முன்பு நிலத்தை நன்றாக உழவேண்டும்; கடைசி உழவுக்கு முன்பு எரு விட்டு நிலத்தைப் பண்படுத்த வேண்டும்; பிறகு நட விரும்பும் வாழை இனத்திற்குத் தக்கபடி பத்தடி, பன்னிரண்டு அடி, பதினைந்து அடி வீதம் குழிகளின் இடைவெளி அமையும்படி நிலத்தில் குழிகளைத் தோண்ட வேண்டும். மொந்தன் வாழைக்குப் பதினைந்தடி இடைவெளி தேவை; பூவனுக்கும் பச்சை நாடனுக்கும் பன்னிரண்டு அடி தேவை; இரசதாளி, நேந்திரன் என்பனவற்றிற்குப் பத்தடி தேவை.



8. "ஒவ்வொரு குழியும் இரண்டடிச் சதுரமும் இரண்டரை அடி ஆழமும் இருப்பது நல்லது. குழிகள் வெயிலில் ஒரு திங்கள் காயவேண்டும். பின்பு அவற்றில் முன்பு பறித்த மண்ணையும் மாட்டு எருவையும் கூட்டு எருக்களையும் சேர்த்துக் குழிகளை மூடிவிடவேண்டும். கிழங்குகளை நடும்போது ஒவ்வொரு குழியிலிருந்தும் மண்ணைப் பறித்துக் கிழங்கை ஆழத்தில் புதைக்கவேண்டும்; புதைத்தவுடன் குழியின் பக்கங்களைக் கெட்டிக்க வேண்டும்."

9. "கிழங்கை நட்டதும் சிறிதளவு நீர் பாய்ச்ச வேண்டும். நட்ட கிழங்குகள் குருத்துவிட்டதும் அவற்றிற்கு நீர் விடவேண்டும். வேர்களுக்குத் தேவையான ஈரம் இருக்கும்படி நீர் விடுவது இன்றியமையாதது. வாரம் ஒருமுறை நீர் பாய்ச்சுவது நல்லது. கன்று வளரத் தொடங்கியதும் நிலத்தைக் கொத்துதல் தேவைப்படும். நிலத்தைக் கொத்தவில்லையேல், பயிரின் வளர்ச்சி குன்றும். கொத்தியபின் ஒவ்வொரு முறையும் நீர் பாய்ச்ச வேண்டும்.

10. "வாழை இரண்டு மாதப் பயிரான பிறகும், ஆறு மாதப் பயிரான பிறகும், எட்டு மாதப் பயிரான பிறகும் எருவிடுதல் வேண்டும். ஏக்கர் ஒன்றுக்குக் கடலைப் பிண்ணாக்கு ஐந்நூறு இராத்தல், பொட்டாசியம் சல்பேட் நூற்றைம்பது இராத்தல், சூபர்பாஸ்வேட் இருநூறு இராத்தல் வேண்டும்; பின்பு இம்மூன்றையும் கலக்கவேண்டும்; அடிமரத்தைச் சுற்றி ஆறு அங்குல இடம் விட்டுக் குழி பறிக்கவேண்டும்; அக்குழியில் எருவைப் போட்டு மூட வேண்டும்; உடனே தண்ணீர் பாய்ச்ச வேண்டும். மழை மிகுதியாகப் பெய்யும் இடங்களில் மழைக்காலம் கழிந்த பின்பு எரு இடுவதே நல்லது. ஏனெனில், மழை நீரில் எருக்கள் கரைந்து வீணாகிவிடும்.

11. "வாழை, இனத்துக்கு ஏற்றபடி பத்தாம் திங்களிலிருந்து பதினான்காம் திங்களுள் பலன் தரும். வாழைத் தாறுகளை வெட்டிய பின்பு அடி மரங்களையும் வெட்டிவிட வேண்டும். அவற்றின் கன்றுகளுள் இரண்டொன்றை அங்கேயே விட்டுவிட்டுப் பிறவற்றை இடம் பெயர்த்து நடுவது நல்லது. அவற்றிற்குப் புதிதாக எருவிட்டு வளர்த்தல் நல்லது. வாழை பயிரிட்ட நிலத்தில் நிலச்சத்து மிகுதியாக இருக்கும். அதனால் அங்கு நெல்லைப் பயிர் செய்வது மிகவும் நல்லது.

12. "வாழைப்பட்டையும் இலையும் நமக்கு உண்கலமாகப் பயன்படுகின்றன; வாழைநார் மலர்கள் கட்ட உதவுகிறது. வாழைத்தண்டு, பூ, காய் ஆகியவை கறி

சமைக்க உதவுகின்றன. காய்ந்த இலை தொன்னை செய்ய உதவுகிறது. இங்ஙனம் வாழையின் ஒவ்வோர் உறுப்பும் நமக்குப் பயன்படுகிறது. தமது உடல் பொருள் ஆவி என்னும் மூன்றையும் பிறருக்கே உதவி மகிழும் தந்நல மற்ற பெரியோரைப்போல, வாழை, தன்னை நமக்கு மகிழ்ச்சி யோடு உதவி மறைகிறது.”

## அருஞ்சொற்பொருள்

நன்செய் - நெல் விளைதற்குரிய நல்ல நிலம். புன்செய்-நீர்வளம் குறைந்த நிலம்; துவரை முதலிய பருப்பு வகைகள் பயிராகும் இடம். நமரன் - உருவத்தில் மிகச்சிறிய காய்களை உடையது. இரசதாளி - இரஸ்தாளி என்று இப்பொழுது கூறப்படுகிறது. நேந்திரம்-நேந்திரம் வாழைப்பழம் மிக நீண்டது; இதைத் துண்டுதுண்டாக நறுக்கி மலையாளிகள் பயன்படுத்துவர். இன்றியமையாதது - இல்லாமல் முடியாதது, தேவையானது.

## கேள்விகள்

1. திருப்பூந்துருத்தியின் சிறப்பு யாது?
2. மாணவர் கழகம் எந்த இரண்டு வகைகளில் மாணவர்க்குப் பயன்படுகிறது?
3. வாழையின் வகைகள் யாவை?
4. நிலத்தை எவ்வாறு பண்படுத்தி வாழையை நடவேண்டும்?
5. வாழைக் கிழங்கை நட்டபின்பு செய்யவேண்டுவன யாவை?
6. தாற்றை வெட்டிய பிறகு நாம் அத்தோட்டத்தில் செய்ய வேண்டுவது யாது?

## பயிற்சி

1. தாறு + ஐ=தாற்றை. இவ்வாறே பின்வருவனவற்றைச் சேர்த்துக் கூறுக:— வயிறு+ஐ, கிணறு+ஐ, ஏறு (எருது)+ஐ, பயறு+ஐ, கயிறு+ஐ.

2. வாழைமரத்தினுடைய உறுப்புக்களின் பெயர்களை எழுதி, அவற்றுள் ஒவ்வொன்றன் பயனையும் குறிப்பிடுக.

3. உங்கள் மாணவர் கழகத்தைப்பற்றி முப்பது வரிகளுள் ஒரு கட்டுரை எழுதுக.

4. “வாழைப் பயிர்” என்னும் தலைப்பில் முப்பது வரிகளுள் ஒரு கட்டுரை வரைக.

5. வீடு - இச்சொல்லின் ஈற்றில் உள்ள உகரம் குற்றியலுகரம். இதற்குமுன் யகரம் வரின், உகரம் இகரமாகத் திரியும். இங்ஙனம் திரியும் இகரம் குற்றியலிகரம் எனப்படும்.

நாடு+யாது = நாடியாது.
நாட்டு+யாத்திரை=நாட்டியாத்திரை.

குற்றியலிகரமும் அரைமாத்திரை ஓசையுடையது.

# 4. சங்ககாலப் புலவர்கள்

1. புறநானூறு, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, பதிற்றுப்பத்து, பரிபாடல் என்பன *எட்டுத்தொகை* நூல்கள் எனப்படும். இவை ஏறத்தாழக் கி. பி. 300க்கு முற்பட்ட சங்ககாலப் புலவரால் பாடப்பெற்றவை. இப்பாடல்கள் சங்ககாலப் புலவர் வாழ்க்கை, நற்பண்புகள் முதலியவற்றை விளக்குவனவாகும். அக்காலப் புலவர்கள் பைந்தமிழைப் பாங்குறக் கற்றவர்; பணிவு, இன்சொல், அன்புடைமை முதலிய உயர்ந்த பண்புகளைப் பெற்றவர்; பிறர் துயரம் காணப் பொறுதவர்; உண்மை நட்பினரைத் துன்பத்திலும் பிரியாதவர்; உண்மையே பேசும் இயல்பினர்.

2. ***பெருஞ்சித்திரனார்*** என்பவர் ஒரு புலவர். அவர் *குமணன்* என்ற மன்னனைக் கண்டு தமது குடும்பத்து வறிய நிலையைக் கீழ்வருமாறு படம் பிடித்துக் காட்டினார்:

"பெரும, என் தாய் வயது முதிர்ந்தவள்; 'என் உயிர் இன்னும் போகவில்லையே!' என்று சொல்லிக்கொண்டு கோலூன்றி நடந்து துன்பப்படுகிறாள். பிள்ளைப்பேற்றாலும் வறுமையாலும் என் மனைவியின் உடல் வற்றிவிட்டது. அவள் குப்பையில் தானே முளைத்த கீரையைப் பறித்து உப்பில்லாமல் சமைப்பாள். நாங்கள் அதனை உண்போம். அவளது ஆடை மாசுண்டு கிடக்கும். குழந்தை அவளது மார்பைச் சுவைத்துப் பால் இல்லாமல் அழும். அவள் என் முகம் நோக்கி அழுவாள். அந்நிலையில் யான் நின் முகம் நோக்கி வந்தேன். அரசே, நீ மனமகிழ்ச்சியின்றி யானையைக் கொடுப்பினும் ஏற்றுக்கொள்ளேன்; மனமகிழ்ச்சியோடு தினையளவு தரினும் அதனைப் பனையளவாக மதித்து ஏற்றுக்கொள்வேன்."

3. ***பெருந்தலைச்சாத்தனார்*** என்ற புலவர் கோடைமலைத் தலைவனான **கடியநெடுவேட்டுவன்** என்பவனிடம் சென்று பரிசில் வேண்டினார். அவன் எக்காரணத்தாலோ, அவர்க்கு விரைந்து பரிசில் கொடாது கால நீட்டிப்புச்

செய்தான். புலவர் அது கண்டு வெகுண்டார்; அவனை நோக்கி, "தலைவனே, செல்வத்தால் சிறப்புற்ற முடியுடை வேந்தர் மூவரேயாயினும், அவர் எம்மை விரும்பி வர வேற்று இன்முகத்துடன் அளிக்கும் பொருளையே பெறுவோம். எம்மை மதியாது ஈயும் பொருளைப் பெறமாட்டோம்," என்று கூறி அவ்விடத்தை விட்டு அகன்றார்.

4. கண்டீரக்கோப் பெருநள்ளி என்பவன் தோட்டி மலை நாட்டுச் சிற்றரசன். அவன் சிறந்த கொடையாளி. அவன் தம்பி **இளங்கண்டீரக்கோ** என்பவன். புலவர்கள் அவனிடம் நெருங்கிப் பழகினர். ஒரு நாள் நன்னன் என்னும் சிற்றரசனது மரபில் வந்த **இளவிச்சிக்கோ** என்பவன் இளங்கண்டீரக்கோவுடன் அமர்ந்திருந்தான். அப்பொழுது **பெருந்தலைச்சாத்தனார்** அங்குச் சென்றார். அவர் மிக்க முகமலர்ச்சியுடன் இளங்கண்டீரக்கோவைத் தழுவி மகிழ்ந்து உரையாடினார். புலவர் தன்னைத் தழுவாமையையும் தன்னுடன் பேசாமையையும் கண்டு இளவிச்சிக்கோ நெருப்பிற்பட்ட புழுவெனத் துடித்தான். அவன் புலவரை நோக்கி, "என்னைத் தழுவாமைக்குக் காரணம் யாது?" என்று பணிவுடன் வினவினான்.

5. புலவர் அவனை நோக்கி, "கண்டீரக்கோவும் அவன் பின்னவனான இவனும் புலவர்களைப் போற்றிப் பாதுகாப்பவர்கள். இவர்தம் வாழ்வரசியரும் புலவர்மாட்டுப் பேரன்புடையவர்; தம் கணவர் வளமனையில் இல்லாத பொழுதும் புலவரை மகிழ்ச்சியோடு வரவேற்கும் இயல்பினர்; இச்சிறப்புக்களை நோக்கி நான் இவனைத் தழுவினேன். நீ நன்னன் என்னும் கொடையாளி மரபில் வந்தவன்; நல்லியல்புகளை உடையவன். ஆயினும் உன் முன்னோனான அந்நன்னன் பிற்காலத்தில் பெண் கொலை புரிந்தான். அவனுக்குப் பின்வந்த உன் முன்னோருள் ஒருவன் புலவரைக் கண்டதும் வாயிற் கதவுகளை மூடிவிட்டான். இங்ஙனம் உன் முன்னோர் செய்த தீச்செயல்களைப் புலவர் உலகம் மறக்கவில்லை. ஆதலால் அந்நாள் முதலாக உங்கள் மலையைப் புலவர் பாடுதல் ஒழிந்தது. யான் உன்னைத் தழுவா

மைக்குக் காரணம் இதுவேயாகும்,” என்று விடை பகர்ந் தார். புலவருடைய அஞ்சாமையும் உண்மை உரைக் கும் ஆற்றலும் இதிலிருந்து விளங்குகின்றன அல்லவா?

6. ***ஔவையார்*** என்பவர் பெண்பாற் புலவர். அவர் உலகியல் அறிவு மிக்கவர். அப்பெருமாட்டியார் தகடூரை ஆண்ட ***அதியமான் நெடுமானஞ்சி*** என்பவ னிடம் பரிசில் பெறச் சென்றார். அவன் எக்காரணத் தாலோ பரிசில் தரக் காலம் தாழ்த்தினான். ஔவையார் வெகுண்டார்; அரண்மனையைவிட்டு வெளியேறினார்; வாயிற் காவலனைக் கண்டு, “வாயில் காப்போய், உன் அரசன் தன் தகுதியை அறியான். அவன் அதனை அறியாவிடினும் என் தரத்தையும் அறிந்தவனாகத் தெரிய வில்லையே! இவ்வுலகத்தில் அறிவும் புகழும் உடையவர் இன்றும் வாழ்கின்றனர். எனது புலமையை மதித்துப் பரிசில் வழங்குவோர் இருக்கின்றனர். யான் அவர்களை நோக்கிச் செல்லுகின்றேன். இதனை உனது அரசனுக்குக் கூறுவாயாக,” என்று கூறினார்.

7. ***வெளிமான்*** என்பவன் ஒரு சிற்றரசன். பெருஞ் சித்திரனார் ஒரு முறை அவனைக் காணச் சென்றார். அப்பொழுது வெளிமான் இறந்துவிட்டான். அவன் தம்பி யான ***இளவெளிமான்*** அரசனானான். புலவர் அவனிடம் சென்று தமது வறுமையை விளங்க உரைத்தார். இள வெளிமான் புலவர் அருமை அறியாதவன்; புலவர்க்கு ஈயும் மனம் இல்லாதவன். ஆதலால் அவன் சிறிதளவு பொருள் கொடுக்க முயன்றான். மானவுணர்ச்சி உடைய புலவர் அதனைப் பெறாமல் வெளியேறினார்; நேரே குமண வள்ளலிடம் சென்றார்; யானையையும் பல பொருள்களையும் பரிசிலாகப் பெற்றார்; யானைமீது அமர்ந்து தம் ஊர் நோக்கித் திரும்பினார்.

8. பெருஞ்சித்திரனார் வழியில் இளவெளிமானது வளமனைக்குச் சென்றார்; தாம் ஏறிச் சென்ற யானையை அவனுக்குக் காட்டினார்; “மன்னனே, அகன்ற இவ் வுலகில் புலவரைப் பாதுகாப்பவன் நீ ஒருவனே அல்லன்.

அப்பெருமக்கள் பலர் உள்ளனர். புலவர்தம் தகுதி அறிந்து கொடுப்பவர் உளர் என்பதை எனது யானையைக் கொண்டும் என்னிடமுள்ள பரிசில்களைக்கொண்டும் அறிந்துகொள்," என்று கூறி அகன்றார்.

9. சங்ககாலப் புலவருள் *கபிலர்* போன்றவர் நட்பிற்குச் சிறந்த எடுத்துக்காட்டாவர். தமிழரசர் போரின்றி வாழவேண்டும் என்பதில் *ஔவையார்* போன்றவர் மிக்க கவலைகொண்டனர். அரசனும் அரசியும் ஒற்றுமையுடன் வாழவேண்டும் என்று *பரணர்* போன்ற புலவர் பெருமக்கள் பாடுபட்டனர். இங்ஙனம் சங்ககாலப் புலவர் உயர்ந்த பண்புகள் பெற்று விளங்கினர் என்பதை அவர்தம் பாடல்கள் உணர்த்துகின்றன.

## அருஞ்சொற்பொருள்

பைந்தமிழ் - பசுமை + தமிழ் = இளந்தமிழ். பாங்குற - அழகு பொருந்த. இன்சொல் - இனிமை + சொல். மாசு-அழுக்கு. கொள்வேன் × கொள்ளேன். கோடைமலை - கோடைக்கானல் மலை. வெகுண்டார்-கோபித்தார். இளங்கண்டீரக்கோ, கண்டீரக்கோவின் இளவல், தம்பி. பேசுதல் × பேசாமை. தழுவுதல் × தழுவாமை. வாழ்வரசி - மனைவி. வளமனை - பல வசதிகளும் பொருந்திய வீடு. கொடையாளி - வள்ளல். மரபு - பரம்பரை. நன்னன் பெண் கொலை புரிந்தமை : நன்னனது மாந்தோப்பிலிருந்து ஒரு மாங்காய் வாய்க்காலில் மிதந்து வந்தது. ஒரு பார்ப்பனப் பெண் அதனை எடுத்து உண்டாள். நன்னன் அவளைக் கொல்லத் துணிந்தான். அவளது தந்தை எண்பத்தொரு யானைகளும் அவள் நிறையளவு பொன்னால் செய்யப்பட்ட பாவை ஒன்றும் கொடுக்க முன்வந்தான். நன்னன் அவற்றை ஏற்க மறுத்து அவளைக் கொன்றான். பெருமாட்டி × பெருமான். தகடூர் - சேலம் மாவட்டத்திலுள்ள தருமபுரி என்னும் ஊர். வெகுண்டார் - சினங்கொண்டார்; வெகுள் - பகுதி. தரம் - மதிப்பு. சிறிதளவு × பெரிதளவு. அகன்றார் - நீங்கினார்; அகல் - பகுதி. கபிலர் - பாரிவள்ளலுடைய இன்பத்திலும் துன்பத்திலும் உடன் இருந்தவர். ஔவையார் : அதியமானுக்கும் தொண்டைமானுக்கும் நடக்க இருந்த போரைத் தடுத்தவர். பரணர் : பேகனுக்கு அறிவுரை கூறி அவனை மனைவியோடு வாழும்படி செய்தவர். பகர்ந்தார் - சொன்னார்.

## கேள்விகள்

1. எட்டுத்தொகை நூல்கள் எவை?
2. சங்ககாலப் புலவர் இயல்புகள் யாவை?
3. பெருஞ்சித்திரனுர் தம் வறுமையை எங்ஙனம் சித்திரித்தார்?
4. பெருந்தலைச் சாத்தனுர் கோடைமலைத் தலைவனை நோக்கிக் கூறியது யாது?
5. பெருந்தலைச் சாத்தனுர் இளங்கண்டீரக்கோவைத் தழுவினமைக்குக் காரணம் என்ன?
6. பெருந்தலைச் சாத்தனுர் இளவிச்சிக்கோவைத் தழுவாமைக்குக் காரணம் என்ன?
7. ஔவையாரது மானவுணர்ச்சிக்குச் சான்று யாது?
8. பெருஞ்சித்திரனுர் இளவெளிமானிடம் கூறியது யாது?

## பயிற்சி

1. விளக்கி வரைக:— கபிலர் நட்பிற்குச் சிறந்தவர், ஔவையார் தமிழரசர் போரின்றி வாழவேண்டும் என்பதில் கவலை கொண்டவர்.

2. வந்தான் - இத்தொழிலுக்குரிய ஏவற் சொல் யாது? வா என்பதே ஏவற்சொல். இது இச்சொல்லில் பகுதி எனப்படும்.

| சொல் | பகுதி |
|---|---|
| போனுர் | போ |
| தேடினுர் | தேடு |
| கொள்வேன் | கொள் |
| கிடக்கும் | கிட |
| அகன்றுர் | அகல் |

இவற்றை நினைவிற்கொண்டு, கீழ்வரும் சொற்களிலுள்ள பகுதிகளைக் கூறுக:— கற்றவர், முதிர்ந்தவர், சமைப்பாள், அழுவான், வினவினுன், பழகினர், பகர்ந்தார்.

3. பிரித்துக் காட்டுக:— புறநானூறு, குறுந்தொகை, பைந்தமிழ், கோலூன்றி, தினையளவு, மன மகிழ்ச்சி, இன்முகம்.


4. இப்பாடப் பொருளைச் சுருக்கி முப்பது வரிகளுள் ஒரு கட்டுரை எழுதுக.

5. (1) அணில், ஆடு, இலை, ஈடு, உரி, ஊக்கம், எள், ஏலம், ஐந்து, ஒன்று, ஓடு, ஔவை —உயிரெழுத்துக்கள் பன்னிரண்டும் மொழிக்கு முதலில் வந்துள்ளன. (2) கம்பு, சட்டம், தயிர், நலம், படை, மரம், வளம், யவனர், ஞமலி, (அங்)ஙனம் —இப்பத்து உயிர் மெய்யெழுத்துக்களும் மொழிக்கு முதலில் வந்துள்ளன.

பன்னிரண்டு உயிரெழுத்துக்களும், க, ச, த, ந, ப, ம, வ, ய, ஞ, ங ஆகிய பத்து உயிர்மெய்யெழுத்துக்களும் மொழிக்கு முதலில் வரும்.

## 5. நன்னனது மலைநாடு

1. சங்ககாலச் சிற்றரசருள் **நன்னன்** என்பவன் ஒருவன். அவன், வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள சவ்வாது மலைகளையும் அவற்றைச் சூழ உள்ள நிலப்




பகுதியையும் ஆண்டுவந்தான். அவனது தலைநகரம் **செங்கண்மா** என்பது. அது இன்று 'செங்கம்' எனத் திரிந்து வழங்குகிறது. சவ்வாது மலைகளைச் சுற்றிலும் சங்க

காலத்தில் அடர்ந்த காடுகள் இருந்தன. நன்னன் சிறந்த கொடையாளி. அதனால் அக்காலப் புலவர், பாணர், கூத்தர் என்பவர் அவனைச் சென்று காண்பது வழக்கம். அவனது தலைநகர் நிலத்தில் அமைந்திருந்தும் சேய்மையி லிருந்து வருபவர் சவ்வாது மலைகள்மீது நடந்து சென்று அவனது நகரத்தை அடைவது வழக்கமாய் இருந்தது.

2. இங்ஙனம் பல மலைகளைக் கடந்து சென்று நன்னனைக் கண்டு, பரிசு பெற்ற *கூத்தர் தலைவன்* ஒருவன், தன் கூட்டத்தாருடன் மீண்டும் மலைகளைத் தாண்டிக் கீழிறங்கி வந்து, ஓர் இளங்காட்டில் இளைப்பாறிக்கொண் டிருந்தான். அப்பொழுது வேறொரு கூத்தன் தன் கூட்டத் தினருடன் அவ்விளங்காட்டிற்குச் சென்றான். அவனைக் கண்ட முன்னோன் அவனையும் அவன் கூட்டத்தினரை யும் நன்னனைக் காணும்படி அறிவுறுத்தினான்; அவனது தலைநகருக்குச் செல்லும் வழியைத் தெளிவாகக் கீழ்வருமாறு விளக்கிக் கூறினான் :

3. "நீங்கள் இங்கிருந்து மலை அடிவாரத்தை நோக்கிச் செல்லுங்கள். வழியில் எள், தினை, அவரை, வரகுப் பயிர்கள் செழித்து வளர்ந்திருக்கும். மூங்கில் நெல் அவல் இடிக்கும் பருவத்தை அடைந்திருக்கும். வெண் சிறு கடுகு, இஞ்சி, மலைவாழை, வெண்ணெல், பெரு மூங்கில் நெல், கரும்பு முதலியன பயிராயிருக்கும். நீங்கள் நாவற் பழம், மாம்பழம், பலாப்பழம் முதலிய பழ வகை களைக் காணலாம். கானவர் காவடியிற் பன்றி இறைச்சி யையும், மான் இறைச்சியையும் எடுத்துக்கொண்டு மலைப் பக்கத்துச் சிற்றூர்கட்கு வருவர். நீங்கள் அத்தகைய சிற்றூர்களில் தங்குக. சிற்றூரார் உங்களுக்குத் தினைச் சோறும் கறி வறுவலும் தருவர்.

4. "நீங்கள் பின்பு மலைமீது ஏறிச் செல்லுங்கள். மலைமீது அமைந்த பள்ளத்தாக்குகளிலும் சமதளங்களிலும் சீறூர்கள் காணப்படும். அங்கு உடும்புக் கறி, மான் கறி, பன்றிக் கறி, தேனால் செய்யப்பட்ட கள் தெளிவு, நெல்லாற் செய்யப்பட்ட கள் ஆகியவை உங்களுக்குக் கொடுக்கப்

படும். பலாக்கொட்டை மாவையும் புளியையும் மோரில் அளவாகக் கலந்த கலவையை மூங்கிலரிசியோடு கலந்து சமைக்கப்பட்ட சோற்றைக் குறமகள் உங்களுக்குக் கொடுப்பாள். நீங்கள் அதனை உண்டு உங்கள் வழியில் செல்லுங்கள். தினைப்புனத்தைப் பன்றிகள் அழிப்பதால் வழிகளில் கற்பொறிகள் பொருத்தப்பட்டிருக்கும். ஆதலால் அம்மலை வழியில் பகலில் செல்லுக.

5. "பலரும் போகாத வழிகளும் உண்டு. அவ்வழியில் நிலத்தில் பிளவுகள் இருக்கும். அப்பிளவுகளில் பாம்புகள் இருக்கும். நீங்கள் அவற்றைத் தொழுது வலப்பக்க வழியிற் செல்லுக. தினைப்புனக் காவலரான குறவர் கவண்கல் எறிந்து யானைகளை ஓட்டுவர்; அக்கல் வீச்சில் குரங்குகள் சிதறி ஓடும். அக்கற்கள் உங்கள்மீது படாமல் ஒதுங்கிச் செல்லுக. யானைகளை விழுங்கும் முதலைகளைக் கொண்ட நீர் நிலைகள் வழியில் உண்டு. ஆழமான மடுக்களை உடைய காட்டாறு காணப்படும். சில இடங்களில் நீர் தேங்கி இருக்கும். அந்த நீர்த்தேக்கங்களுக்கு அருகில் மரங்களைச் சுற்றிக் கிடக்கும் கொடிகளைப் பிடித்துக் கொண்டு மிக்க விழிப்புடன் செல்லுக.

6. "அந்த மலை வழியில் உள்ள ஒரு மலை *நவிரமலை* எனப்படும். அங்கு நன்னனது மலைப்படை ஒன்று இருக்கும். அங்கு ஒரு கோட்டை உண்டு. அங்குக் காரியுண்டிக் கடவுள் கோவில் கொண்டுள்ளார். அந்த மலையில் எப்பொழுதும் மழை பெய்யும். அங்கு மயில்கள் ஆடும்; கடுவன்கள் பாயும்; தேன் இருல்கள் காணப்படும். நீங்கள் இவற்றை ஊன்றிப் பாராமல் வழிமேல் விழி வைத்துச் செல்லுக; இன்றேல் வழி தவறுவீர்கள்.

7. "கானவன் பரண்மீதிருந்து பன்றியின் மீது அம்பை எய்வான். அம்புபட்ட பன்றி வழியில் விழுந்து கிடக்கும். நீங்கள் அதனை நெருப்பில் வதக்கி அதன் இறைச்சியை உண்ணுங்கள்; சுனைநீரைக் குடியுங்கள்; இரவில் மலைக் குகைகளில் தங்குங்கள்; காலையில் காட்டில் உள்ள நேரிய வழியிற் செல்லுக. பெரிய மரங்களைப்போன்ற மலைப்

பாம்புகள் கிடக்கும் வழி விலகிச் செல்லுக. குறவரும் மருளும் குன்றத்து வழியில் செல்ல வேண்டா; உச்சி மலையில் காட்டைக் காவல் புரியும் காவலர் உண்டு. அவர்கள், உங்களிடம் ஓடி வந்து பழங்களைத் தருவர்; பூக்களை வழங்குவர்; இடையூறு மிக்க வழியைக் காட்டி முன் செல்வர். வழியில் குறியவும் நெடியவுமான குவடுகள் இருக்கும். நீங்கள் விழிப்போடு சென்று பூப்பரந்து கிடக்கும் நிழலில் இளைப்பாறுங்கள்.

8. "நீங்கள் அங்குப் பலவகை ஓசைகளைக் கேட்பீர்கள். சூரரமகளிர் அருவியாடும் ஓசை கேட்கும்; தினைப்புனத்திற் புகுந்த யானையை வேடர் பிடிக்க முயலும் போது உண்டாகும் ஆரவாரம் கேட்கும்; முள்ளம்பன்றியால் தாக்கப்பட்ட கானவர் அழும் ஓசை கேட்கும்; தம் கணவர் மார்பில் புலி பாய்ந்ததால் உண்டான புண்ணை ஆற்றுவதற்குக் கொடிச்சியர் பாடும் பாடல் ஓசை கேட்கும்; வேங்கை மலரைப் பறிக்கக் கானவர் மகளிர் 'புலி—புலி' என்று கூப்பிடும் ஓசையும், களிற்றின்மீது புலி பாயக் கண்ட பிடி அலறும் ஓசையும் கேட்கும்; தன் குட்டி எடுப்பதற்கரிய மலைப்பிளவில் விழுந்ததால் பெண் குரங்கு செய்யும் அச்சம் நிறைந்த ஓசை கேட்கும்; கானவர் கண் ஏணியின் வழியாகச் சென்று தேன் எடுக்கும் ஓசையும் கேட்கும்.

9. "உச்சி மலையில் கள் குடித்த குறவர், தம் பெண்டிருடன் கூடிச் சிறு பறை ஒலி செய்யக் குரவைக் கூத்தாடும் ஓசை கேட்கும்; ஆறுகள் மலைப் பிளவுகளில் விழுவதால் உண்டாகும் ஓசையும், யானையைப் பிடித்துப் பழக்கும் பாகரது ஓசையும், தினைப்புன மகளிர் கிளிகளை ஓட்டும் ஓசையும் கேட்கும்; ஆண் எருமைகள் தம்மில் முட்டுகின்ற ஓசையும், பலாக்கொட்டைகளின்மீது கடாவிடும் பிள்ளைகள் ஓசையும், கரும்பு ஆலைகள் ஓசையும் கேட்கும்; தினையைக் குற்றும் மகளிரது உலக்கைப் பாட்டின் ஒலியும், சேம்பும் மஞ்சளும் வளர்ந்த கொல்லையில் பன்றியை விரட்டும் பறை ஓசையும் கேட்கும்.

10. "நீங்கள் செல்லும் வழியில் போரில் இறந்த போர் வீரர்களின் பெயர்கள் பொறிக்கப்பெற்ற **நடுகற்கள்** இருக்கும். அங்கு நின்று யாழ் வாசித்து அவற்றை வழி படுங்கள். வழியில் கோவலர் வாழும் சிற்றூர்கள் இருக் கும். அவர்கள் உங்களுக்குப் பசுவின் பாலைத் தருவர்; பாற் சோறும் தருவர். அவர்கள் ஆட்டுத் தோல்களைத் தைத்துப் படுக்கையாகப் போடுவர். நீங்கள் அப்படுக் கையிற் படுத்து உறங்குங்கள். காலையில் எழுந்து செல்லும் போது வழியில் நாடு காக்கும் வேடர் கூட்டம் எதிர்ப் படும். நீங்கள் நன்னனைப் பார்க்கப் போவதை அவர் களிடம் கூறுங்கள். அவர்கள் இறைச்சியையும் கிழங்கு களையும் உண்ணக் கொடுப்பர்; உண்ட பிறகு அவர்கள் காட்டும் வழியிற் செல்லுக.

11. "வழியில் உள்ள சிற்றூர்களில் வெள்ளாட்டுக் கறியுடன் நெய்யிட்டு ஆக்கின சோறும் நுண்ணிய தினை மாவும் உங்களுக்குத் தரப்படும். வழியில் மருதநில ஊர் கள் காணப்படும். அங்கு வாளைமீனின் இறைச்சியும் வரால் மீனின் இறைச்சியும் முள்ளம்பன்றியின் இறைச்சி கலந்த வெண்சோறும் உங்களுக்குக் கிடைக்கும். நீங்கள் இங் ஙனம் நடந்தும் உண்டும் பல சிற்றூர்களைக் கடந்து செல்லின், வழியில் **சேயாறு** காணப்படும்; அதன் ஒரு கரையை வழியாகக் கொண்டு செல்லுக.

12. "நன்னனது தலைநகர் வண்டுகள் ஒலிக்கும் நீண்ட பொழில்களால் சூழப்பட்டது. அந்நகரத்தைச் சுற்றி மதில் அமைந்துள்ளது. அக்கோநகரம் அங்காடித் தெருவையும் அகன்ற தெருக்களையும் குறுந்தெருக்களையும் உடையது. கோட்டை வாயிலில் வாளேந்திய மறவர் காவல் காப்பர். கோட்டையுள் உள்ள மன்றத்தில் நன்னனைக் காணவந்த இரவலர் காத்திருப்பர். அவர்கள் உங்களை வரவேற்று உபசரிப்பர். உங்கள் விறலியர் முதலில் கடவுளை வாழ்த்தின பின்பு, நீங்கள் நன்னனைப் பற்றிய பாடல்களைப் பாடுக. அப்பெருமகன் உங்களை அன்போடு உபசரித்து வேண்டும் நலன்களைச் செய்வான்."

## அருஞ்சொற்பொருள்

புலவர்-அறிஞர், புலமை உடையவர். புலமை-அறிவு. பாணர்-இசைவல்லார். கூத்தர் - நடிகர். இளங்காடு × முதுகாடு. இளமை × முதுமை. முன்னோன் × பின்னோன். கானவர் - கான்+அ+அர்-காட்டில் வாழும் வேடர். சீறூர்-சிற்றூர். மடு-நீர் நிறைந்த பள்ளம். காரியுண்டிக் கடவுள்-விடம் உண்ட சிவபெருமான்; காரி-விடம். கடுவன்-ஆண்குரங்கு. மந்தி-பெண்குரங்கு. தேன் இருல்-தேன் அடை. மருளும்-ஏற மயங்கும். குறிய×நெடிய. குவடு-உச்சி, சிகரம். விழிப்போடு-கவனத்தோடு· சூரரமகளிர்-சூர் + அரமகளிர்; சூர்-அச்சம்; அரமகளிர் - தெய்வ மகளிர். கொடிச்சியர்-மலைநாட்டுப் பெண்கள். களிறு-ஆண்யானை. பிடி-பெண்யானை. குரவை-முல்லை அல்லது குறிஞ்சி நிலமகளிர் தம்முள் கைகோத்து ஆடும் கூத்து வகை. பெண்களுடன் ஆடவர் கலந்து ஆடுவதும் உண்டு. உலக்கைப்பாட்டு-உலக்கைகொண்டு குற்றும்போது பெண்கள் பாடும் பாட்டு. சேயாறு-இது இப்பொழுது 'செய்யாறு' என்று வழங்கப்படுகிறது. பொழில்-சோலை. மறம்-வீரம். மறவர்-வீரர். விறலி-உள்ளக் குறிப்புப் புறத்தில் புலப்பட நடிக்கும் நடனமகள். அங்காடித் தெரு-கடைத்தெரு. மன்றம்-பலர் கூடும் பொது இடம்.

## கேள்விகள்

1. கூத்தர் தலைவன் மலை அடிவாரத்தைப்பற்றிக் கூறிய விவரங்கள் யாவை ?
2. கூத்தர் தலைவன் நவிரமலையைப்பற்றி யாது கூறினான் ?
3. மலைமீது கேட்கப்பட்ட பலவகை ஓசைகள் யாவை ?
4. மலைமீது இருந்த ஊர்களில் உண்ணக்கிடைத்த பொருள்கள் யாவை ?
5. நன்னனது தலைநகரைப்பற்றி யாது அறிவாய் ?

## பயிற்சி

1. கீழ்வருவனவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறுக :— செழித்து, வலப்பக்கம், வழிமேல் விழி, வழியாக, நுண்ணிய.

2. கீழ்வருவனவற்றை உச்சரித்துப் பொருள் கூறுக :— மலை-மழை, தலை-தளை-தழை, திணை-திணை, கரி-கறி, விளி-விழி, பரந்து-பறந்து.

3. எதிர்ச்சொல் கூறுக :— இறங்கி, முன்னேன், பெருமூங்கில், சிற்றூர், இரவு, குறிய, இளங்காடு.

4. கூத்தர் தலைவன் கூறிய மலைப்பாதையை விளக்கி நாற்பது வரிகளுள் ஒரு கட்டுரை வரைக.

5. (1) விள, பலா, கழி, தீ, வீடு, பூ, செ, தே, பனை, நொ, போ, வெள-பன்னிரண்டு உயிர் எழுத்துக்களும் மொழிக்கு ஈற்றில் வந்துள்ளன.

(2) உரிஞ், பண், பொருந், கலம், பொன், பாய், வேர், பால், தெவ், புகழ், நாள்-பதினொரு மெய்களும் மொழிக்கு ஈற்றில் வந்துள்ளன.

(3) அஃது (த் + உ) — குற்றியலுகரம் மொழிக்கு ஈற்றில் வந்துள்ளது.

பன்னிரண்டு உயிரெழுத்துக்களும், ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள் என்னும் பதினொரு மெய்யெழுத்துக்களும், குற்றியலுகரமும் மொழிக்கு ஈற்றில் வரும்.

## 6. கலை


பேராசிரியர் P. இராமநாதன், எம். ஏ.

1. நாம் பிற பொருள்களின் வாயிலாக நம்மை வெளிப்படுத்தும் ஆற்றலே 'கலை' ஆகும். மனிதனது அறிவு வளர்ச்சி ஓரளவிற்கு மிகுதிப்படுமாயின் அது வெளிப்படல் இயல்பு. அங்ஙனம் வெளிப்படும் ஆற்றலே ஓவியம் முதலிய வேலைப்பாடுகளாக உருப்பெறும். சிலர் தம் கலையாற்றலை ஓவியத்தில் காட்டுகின்றனர்; வேறு சிலர் பாடல்களிற் காட்டுகின்றனர்; பிறர் பிறவாறு காட்டுகின்றனர். இக்கலையே 'ஆர்ட்' (Art) என்று ஆங்கிலத்திற் சொல்லப்பெறும்.

2. இப்பண்பு பணத்தின்பொருட்டு உளதாகும் ஒன்றன்று. இஃது அறிவுப் பெருக்கத்தின் அறிகுறியாக அமைவது. ஆதலால், 'கலை' என்பது உள் உணர்ச்சியை உலகத்தாருக்கு உணர்த்தும் இயற்கை ஆற்றலாகும். இவ்வன்மை நல்வழியிற் பயன்படுமாயின், நாம் அழகிய ஓவியங்களையும் வியத்தகும் கட்டடங்களையும் வியக்கத் தகும் பூஞ்சோலைகளையும் கண்ணைக் கவரும் பிற பொருள்களையும் கண்டு களிக்கலாம். இவ்வுள்ளக் கிளர்ச்சி தீய துறையில் வெளிப்படுமாயின், நாம் வெறுக் கத்தகும் காட்சிகளையே உலகிற் காண இயலும்.

3. மனிதனது உள் உணர்வின் தெளிந்த நிலையி லிருந்து பெருக்கெடுத்து வெளித் தோன்றும் கலையாற்ற லாற்றுன் பாபிலோனியா நகரம் அழகு வழிய அமைக்கப் பட்டது; உலகத்திற்கே நாகரிகத் தோற்றத்தை அளித் திருந்த ரோமாபுரி பேரெழில் கொண்டு விளக்க முற்றி ருந்தது; நமது தாய் நாட்டிலும் எந்நாட்டவரும் இன்றள வும் புகழும் பெருமை உடைத்தாய கண்ணைக் கவரும் தாஜ்மஹால் தோற்றம் எடுத்தது; ஐம்புலன்களையும் ஒருங்கே ஈர்க்கும் அஜந்தாக் குகைச் சிற்பங்கள் அமைய லாயின. இங்ஙனம் மற்ற நற்காட்சிகளும் ஆகும்.

4. மனிதன் தன்னை மறந்த இன்ப நிலையிற்றான் தூய கலையைத் தோற்றுவிக்கின்றான். அவ்வின்ப நிலையில் தீட்டப்பெறும் ஓவியம் அவ்வோவியக்காரனது உள்ளப் பான்மையை உணர்த்துவதாகவே அமையும். மொகலாய நகரங்களாக விளக்கமுற்றிருந்த டெல்லியும் ஆக்ராவும் இன்றளவும் அத்தகைய தூய்மையான கலையுணர்வைக் கண்ணைக் கவரும் கவினுறு கட்டடங்களின் வாயிலாகக் காட்டுகின்றன. ஐம்புலன்களையும் ஒருங்கே ஈர்க்கும்




தாஜ்மஹால்

அவ்வழகிய கட்டடங்களைக் காண இன்றும் பல்லாயிரக் கணக்கான மக்கள் பற்பல நாடுகளிலிருந்து வந்த வண்ண மாக இருக்கின்றனர். இஃதொன்றே, அக்கட்டடங்களின் ஒப்புயர்வற்ற தன்மையை உணர்த்தப் போதுமான தன்றோ ?

5. இறைவன் படைத்த இவ்வின்ப உலகம் அவனது உள்ளக் கிடக்கையை உணர்த்துவதாகும். நீலத்திரைக் கடல், நீலவான், தண்மையும் வெம்மையும் கொண்டுள்ள தண்கதிர்—சுடுகதிர்கள், வானளாவிய வரை முகடுகள், சான்றோர் கவியெனப் பரந்து செல்லும் யாறுகள், மனத் திற்குப் பேரின்பத்தை ஊட்டும் மலர்ச் சோலைகள், இன்ன பிறவும் இறைவனது கலையுணர்வை இனிதின் அறிவிப்பன

அல்லவோ? அதனால் அன்றோ நம்மவர் இத்தூய இடங்கட்கு யாத்திரை செல்கின்றனர்? இவ்விடங்களில் எல்லாம் கோவில்களை அமைத்து மக்களின் மனத்திற்கு அமைதியை உண்டாக்க நம் முன்னோர் முயன்றனர். இவ்வியக்கத்தகு இயற்கைக் காட்சிகளைப் படைத்த இறைவனது பேருள்ளம் இன்ப மயமானது என்பதில் ஐயமுண்டோ?

6. அழகு என்பது எழுத்திலோ எண்ணத்திலோ படத்திலோ அடங்குவதன்று. அஃது ஒரு பொருள் அன்று. அஃது அனைத்தையும் கடந்து நிற்பது; இலக்கணம் அற்றது. அதுவே ஒவ்வோர் உயிரையும் வளர்ப்



பிருந்தாவனத்தில் ஒரு காட்சி (மைசூர்)

பது. அஃது இருப்பதாற்றான், உலகில் 'இன்பம்' என்னும் சொல் வழக்கில் இருக்கின்றது; 'இறைவன் இருக்கின்றான்' என்னும் நினைவு நம் உள்ளத்தில் எழுகின்றது. அப்பேரழகு மனிதரது கலையாற்றலால் இன்பக் காட்சி நல்குகின்றது. மனிதனது மனத்தை ஒரு வழிப்படுத்த வல்லது அழகு. இக்கால மனிதன் அழகை அறவே மறந்து—ஏன்? தன்னையே மறந்து—போர், கூச்சல், குழப்பம் முதலியவற்றில் ஈடுபட்டு அலைகின்றான். அவனுக்கு

நிற்க நேரமில்லை ; உட்கார இடம் இல்லை; நினைக்கப் பொழுது இல்லை ; விருப்பமும் இல்லை.

7. இங்ஙனம் மாய வலையில் வீழ்ந்து மயங்கும் மனிதன் சிறிது பொழுது அழகொழுகும் பூஞ்சோலையில் அமர்ந்து, தன் கண்ணெதிரே காட்சியளிக்கும் அன்று மலர்ந்த நறுமணம் வீசும் மலர்களைக் காண்பானாயின், நறு மணத்தை நுகர்வானாயின், சிறுபோது அப்பூஞ்சோலையின் வனப்பை உன்னுவானாயின், ஆ! அவன் தன்னை உணர் வான் ; மயக்கந் தெளிவான் ; இறைவனது கலையுணர் வைக் கண்டு களிப்பான் ; இறைவனது கலையுணர்வு அவனது கவலையுற்ற மனத்தைக் கவலையற்றதாகச் செய்யும் திருத்தொண்டை உணர்வான். அந்நிலையில் அவனும் அவ்வின்பக் காட்சியின் ஒரு பகுதியாக விளங்கு வான். இங்ஙனம் இறைவனது கலையுணர்வையும் மனி தனது கலைத்திறனையும் கண்டு களித்து ஆன்ம அமைதி பெற்று வாழப் பேறு பெற்றவரே இன்ப நிலை எய்துபவ ராவர்.

8. கலை என்பது மனிதன் உள்ளத்தில் உள்ள ஆன்ம வுணர்ச்சியையும் இறைவனையும் ஒன்றுபடுத்துவதாகும். இதன் பெருஞ்சிறப்பை உளங்கொண்ட நம் முன்னோர் அழகினை ஆதரித்தனர் ; அழகிய சோலைகளை அமைத் தனர்; அழகொழுகும் கட்டடங்களைக் கட்டினர்; இயற்கை அழகு வாய்க்கப்பெற்ற இடங்களில் செயற்கை அழகை யும் சிறப்புறச் செய்தனர். இயற்கையும் செயற்கையும் கூடிய வழி, இன்ப வெள்ளம் பெருக்கெடுத் தோடுகின்றது போலப் பேரழகு பெரும்பொலிவுடன் விளங்கும் அன்றோ?

## அருஞ்சொற்பொருள்

கவின்-அழகு. பாபிலோனியா நகரம்-வட அரேபியாவில், யூப் ரடிஸ், டைக்ரிஸ் என்னும் ஆறுகளுக்கு இடையில் இருந்த சுமேரிய நாட்டின் தலைநகரம். தாஜ்மகால்-வட இந்தியாவில் ஆக்ரா நகரில் தம் மனைவியான மும்தாஜ் பேகத்தின் நினைவாக ஷாஜஹானால் கட்டப் பட்ட அழகுள்ள கட்டடம். ஐம்புலன்-ஊறு, சுவை, ஒளி, ஓசை,

நாற்றம். ஐம்பொறி-மெய், வாய், கண், மூக்கு, செவி. அஜந்தா-ஐதராபாது இராச்சியத்தில் உள்ள அவுரங்கபாத்திலிருந்து வடக்கே ஒருகல் தொலைவில் உள்ள சிற்றூர். அங்கிருந்து மூன்றரைக்கல் தொலைவில் உள்ள மலைகளில் பௌத்த குகைக் கோவில்கள் பல உள்ளன. அவற்றுள் உலகப் புகழ்பெற்ற ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. உள்ளக் கிடக்கை-உட்கருத்து. தண்மை-குளிர்ச்சி. தண்மை × வெம்மை. வரை-மலை. முகடு-உச்சி. சான்றோர்-கல்வி கேள்வி ஒழுக்கங்களில் சிறந்த பெரியோர். வியத்தகு-வியக்கத்தகும். இறைவன்-எங்கும் தங்கியிருப்பவன், கடவுள். உற்ற-பொருந்திய. உற்ற × அற்ற. திருத்தொண்டு-நற்பணி. பேறு-பாக்கியம். பொலிவு-விளக்கம். உள்ளப் பான்மை-மனநிலை. பரந்து-பரவி.

## கேள்விகள்

1. கலை என்பது யாது ?
2. கலைக் காட்சிகள் யாவை ?
3. இறைவனது கலையுணர்வை அறிவிப்பவை யாவை ?
4. அழகு என்பது யாது ?
5. இக்கால மனிதனது மயக்கம் யாது ? அதனைத் தெளிய வைக்கும் மருந்து யாது ?

## பயிற்சி

1. பின் வருவனவற்றை உன் சொந்த வாக்கியங்களில் எழுதுக :— அறிகுறி, உள்ளக்கிளர்ச்சி, பேரெழில், உள்ளப் பான்மை, திருத்தொண்டு.

2. பிரித்துக்காட்டுக :— வியக்கத்தகும், பேரெழில், உள்ளக் கிளர்ச்சி, இன்றளவும், உள்ளப்பான்மை, நீலத்தரை, திரைக்கடல், பேரின்பம், கவலையுற்ற, பெருஞ்சிறப்பு.

3. சேர்த்துக் கூறுக :— பூ + சோலை, கண்ணை + கவரும், அறிவு + பெருக்கம், நாகரிகம் + தோற்றம், அளித்து + இருந்த, பெருக்கு + எடுத்த, வாயிலாக + காட்டுகின்றன, இஃது + ஒன்றே, இயற்கை + காட்சி.


4. இப்பாடப்பொருளைச் சுருக்கி முப்பது வரிகளுள் ஒரு கட்டுரை எழுதுக.

5. (1) நாற்காலி-நான்கு கால்களை உடைய காரணத்தால் வந்த பெயர் ; இது காரணப்பெயர் எனப்படும்.

(2) மரம்-இப்பெயருக்குக் காரணம் தெரியவில்லை. காரணம் அறியப்படாமல் தொன்றுதொட்டு ஒரு பொருளுக்கு வழங்கிவரும் பெயர் இடுகுறிப்பெயர் எனப்படும்.

இப்பாடத்தில் உள்ள காரணப் பெயர்களையும் இடுகுறிப் பெயர்களையும் எடுத்துக் காட்டுக.

# 7. வள்ளுவர் வாய்மொழி




1. எழுத்துக்கள் யாவும் அகரமாகிய முதலை உடையவை. அதுபோலவே இவ்வுலகம் இறைவனாகிய முதலை உடையது.

2. இறைவன் திருவடிகளைத் தொழாதவர் எவ்வளவு கற்றவராயினும் அக்கல்வியால் பயன் பெறார்.

3. கல்வி, கேள்வி, ஒழுக்கம் ஆகிய மூன்றாலும் சிறந்தவர் பிறர் செய்வதற்கு அரிய செயல்களையே மேற்கொள்வர்.

4. எல்லா உயிர்களிடத்தும் குளிர்ந்த அருளை உடையவர் அந்தணர் எனப்படுவர்.

5. ஒருவன் மனத்தின்கண் எவ்வகைக் குற்றமும் இல்லாதிருத்தலே அறம் எனப்படும்.

6. மனைவியோடு வாழும் ஒருவன் தன் மனைவியிடம் அன்புடையவனாக இருத்தல் வேண்டும்; பிறர்க்குப் பகுத்து உண்ணுதலாகிய அறத்தினையும் உடையவனாய் இருத்தல் வேண்டும். அவன் தன் மனைவியின் மீது செலுத்தும் அன்பு இல்வாழ்க்கையின் பண்பாகும்; பிறர்க்குப் பகுத்து உண்ணலாகிய அறம் இல்வாழ்க்கையின் பயனாகும்.

7. இல்வாழ்க்கையில் குறைவு இல்லாமல் செம்மையாக வாழ்பவன் வானுலகத்தில் வாழும் தேவருள் ஒருவனுக மதிக்கப்படுவான்.

8. ஒரு பெண் மனைவாழ்க்கைக்கு ஏற்ற நற்குணங்களையும் நற்செயல்களையும் உடையவளாய் இருத்தல் வேண்டும்; தன்னை மணந்துகொண்டவனது வருவாய்க்குத் தக்க வாழ்க்கை நடத்துபவளாகவும் இருக்கவேண்டும். அவளே தன் கணவனது வாழ்க்கைக்கு ஏற்ற துணையாவாள்.

9. மனைவியினுடைய நற்குண நற்செயல்களே ஒருவனுக்கு நன்மை தருபவை. நல்ல புதல்வர்களைப் பெறுதல் இல்வாழ்க்கையின் சிறந்த பேருகும்.

10. தன் மகனைக் கற்ருேர் அவையில் முதல்வனுக விளங்கும்படி செய்வதே தந்தை மகனுக்குச் செய்யும் கடமையாகும்.

11. 'இத்தகைய மேதையைப் பெற இவன் தந்தை என்ன தவம் செய்தானே!' என்று நன்மக்கள் பாராட்டும் சிறந்த அறிஞனுக விளங்குவதே மகன் தந்தைக்குச் செய்யும் உதவியாகும்.

12. அன்பை உடையவரே உயிரோடு கூடிய உடம்பையுடையவர்.

13. அன்பு அறத்தை வளர்க்கும். ஒருவனை மறத்திலிருந்து நீக்கி அறத்தின் வழிச் செலுத்தவும் அவ்வன்பே துணையாகும்.

14. நமது வீட்டுக்கு வந்த விருந்தினர் வெளியில் இருக்க, கிடைத்தற்கரிய உணவு கிடைப்பினும், நாம் மட்டும் தனித்திருந்து உண்ணுதல் விரும்பத்தக்கது அன்று.

15. அனிச்சமலர் மோப்பக்குழையும்; அதுபோல நாம் விருந்தினரை இனிய முகத்துடன் வரவேற்காவிடின், மனம் வருந்துவர்.

16. கனியிருக்கக் காயைக் கவருதல் தவறன்ருே? அதுபோலவே, இனிய சொற்கள் இருக்க, இன்னுத சொற்களைப் பயன்படுத்துதல் தவருகும்,

17. ஒருவன் மிகச்சிறிய உதவியைச் செய்திருக்கலாம். ஆயினும் அது எத்தகைய துன்பம் தரும் நேரத்தில் செய்யப்பட்டது என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். அப்போதுதான் அச்சிறிய உதவியின் மதிப்பு நிலவுலகத்தினும் மிகப்பெரியதாகக் காணப்படும்.

18. பெரிய அறங்களைச் சிதைத்தவர்க்கும் அப்பாவத்திலிருந்து நீங்க வழியுண்டாகலாம்; ஆயின், ஒருவன் செய்த உதவியைச் சிதைத்தவனுக்கு அக்குற்றத்திலிருந்து நீங்க வழியேயில்லை.

19. வணிகர் பிறர் பொருளையும் தம்பொருள் போலப் பாதுகாத்து வாணிகம் செய்வது வளத்தைத் தரும்.

20. ஒருவன் தன்னால் காக்கப்படுவன எல்லாவற்றையும் காத்தல் நல்லது. அங்ஙனம் காக்க முடியாவிடில் *நா* ஒன்றினையாவது காக்கவேண்டும்; அதனைக் காவானாயின் சொல் குற்றத்திற்கு ஆளாகித் தானே துன்புறுவான்.

21. நல்லவன் என்று பிறர் பாராட்டும்படி ஒழுகுவதே ***நல்லொழுக்கம்*** எனப்படும். அது எல்லார்க்கும் சிறப்பைத் தருவது. ஆதலால் அது உயிரினும் சிறந்ததாகப் பாதுகாக்கப்படல் வேண்டும்.

22. நிலம் தன்னை அகழ்பவரைப் பொறுமையோடு தாங்குகின்றது. அதுபோல நாம் நம்மை அவமதிப்போரைப் பொறுப்பது தலையாய கடமையாகும்.

23. பிறரது ஆக்கத்தைக் கண்டு பொருமைப்படுபவனது செல்வத்தை, பொருமை என்னும் பண்பு இம்மையில் கெடுத்து, மறுமையில் நரகத்திற் செலுத்திவிடும்.

24. பிறனைக் காணாத இடத்து இகழ்ந்து பேசிக் கண்ட இடத்து அவனுக்கு இனியவனாகப் பொய்த்து வாழ்தல் தவறு; அங்ஙனம் வாழ்தலைவிட அவன் சாதல் சிறப்பைத் தரும்.

25. அறம், பொருள், இன்பம் ஆகிய பயன்களுள் ஒன்றும் பயவாத சொற்களைப் பலகாலும் பேசும் ஒருவனை மகன் என்று சொல்லாதே; மக்களுள் பதர் என்று சொல்,

26. ஊரின் நடுவிலுள்ள குளத்துநீர் அவ்வூரார்க்குப் பயன்படுவதுபோல, உலக இயல்பை அறிந்து நடக்கும் பேரறிஞனது செல்வம் ஊரார்க்குப் பயன்பட்டு நன்மை செய்விக்கும்.

27. நற்குடியில் பிறந்தவன், 'யான் வறியவன்' என்று இரப்பவன் சொல்லும் சொல்லைப் பிறரிடம் சொல்லான்; அதனைத் தன்னிடம் சொன்ன ஏழைகட்குத் தவருது உதவுவான்.

28. வறியவர்க்கு உதவுக; அங்ஙனம் ஈதலால் புகழ் உண்டாகும்; அங்ஙனம் புகழ் பெறுவதே மக்கள் உயிர்க்குப் பயனாகும்.

29. ஓர் உயிரையும் கொல்லாமலும், புலால் உண்ணுமலும் இருக்கின்ற ஒருவனை எல்லா உயிர்களும் கைகுவித்துத் தொழும்.

30. உண்மை பேசுதலே அறம். அதனினும் மிகச் சிறந்த அறம் இருப்பதாக யாம் கண்ட மெய்ந்நூல்களில் கூறப்படவில்லை.

31. நெருப்பு, தான் சேர்ந்த இடத்தைமட்டும் சுடும்; ஆயின், சினம் என்னும் நெருப்புத் தன்னை உடையவனையும் அவன் இனத்தவரையும் சுடவல்லது. ஆதலால், ஒருவன் நமக்குப் பொறுத்தற்கரிய துன்பம் செய்யினும், நாம் வெகுளாதிருத்தல் மிக்க நன்மையைத் தரும்.

32. நாம் பிறருக்குத் துன்பம் தருவனவற்றை முற்பகலில் செய்வோமாயின், பிற்பகலில் அவர் செய்யாமலே துன்பங்கள் தாமே வந்து நம்மைச் சேரும்.

33. ஒருவன் கற்கவேண்டும் நூல்களைக் கசடறக் கற்க வேண்டும்; பின்பு கற்ற நூல்களின் அறிவுரைகளுக்கேற்ப நன்னெறியில் நடக்கவேண்டும்.

34. கற்றவரே கண்ணுடையவர் என்று அறிஞரால் பாராட்டப்படுவர்; கல்லாதவர் முகத்தில் இரண்டு புண்ணுடையர் என்று சொல்லப்படுவர்.

35. கல்வியறிவு இல்லாதவரிடம் உள்ள செல்வம், நல்லவர்களது வறுமையினும் கொடியது.

36. ஒருவன் உறுதி நூல்களைக் கற்றிலனாயினும் அவற்றின் பொருள்களைக் கற்றறிந்தார் சொல்லக் கேட்க வேண்டும். அவனுக்குத் தளர்ச்சி வரும்போது, அக் கேள்வியறிவு ஒரு பற்றுக்கோடாக நின்று அவனுக்குத் துணை செய்யும்.

37. ஒரு பொருளைப்பற்றிப் பேசுபவர் எவராயினும், கேட்பவர் எவராயினும், அப்பொருளின் மெய்யான பயனைக் காண்பதே அறிவுடைமை.

38. வேறு எதனைப் பெற்றிலராயினும் அறிவுமட்டுமே பெற்றிருப்பின், எல்லாம் பெற்றவராவர். அறிவைப் பெற்றிலாதவர் பிற எல்லாம் பெற்றிருப்பினும், அவர் ஒன்றும் இல்லாதவர் என்றே கருதப்படுவர்.

39. நல்லவர் தொடர்பைக் கைவிடுதல் ஒருவன் தான் தனியனாய் நின்று பலரோடும் பகை கொள்வதை விடப் பத்துமடங்கு தீமை உடையதாகும்.

40. ஒன்றைச் செய்யத் தொடங்குமுன், தான் செய்யத் தக்கதையும் அதனைச் செய்து முடிக்கும் வழியையும் நன்கு எண்ணவேண்டும். அங்ஙனம் செய்யாமல், 'தொடங்கிய பின்பு எண்ணிப் பார்ப்போம்' என்று விடுதல் குற்றமாகும்.

## அருஞ்சொற்பொருள்

பகுத்து - பங்கிட்டு. மேதை - அறிஞன். மறம் - கொடுமை. அறம் - நன்னெறி. குழையும் - வாடும். கவருதல் - விரும்புதல். இனிய × இன்னாத; இன்னாத - துன்பம் தரும். அகழ்பவர் - தோண்டுபவர். தலையாய - முதன்மையான. ஆக்கம் - வளர்ச்சி, செல்வம். இம்மை × மறுமை. பயவாத - தராத. பதர் - வீணன், பயனற்றவன். இரப்பவன் - யாசிப்பவன். புலால் - இறைச்சி. வெகுள் - கோபி. முற்பகல் × பிற்பகல். கசடு - குற்றம். அற - நீங்க. உறுதி நூல்கள் - நன்மை பயக்கும் நூல்கள். தளர்ச்சி - மனச்சோர்வு. தொடர்பு - நட்பு.

## கேள்விகள்

1. அந்தணர் என்பவர் யாவர்?
2. இல்வாழ்க்கையின் பண்பு யாது? பயன் யாது?

3. எவன் தேவருள் ஒருவனாக மதிக்கப்படுவான் ?
4. எவள் வாழ்க்கைத் துணைவியாவாள் ?
5. தந்தை மகனுக்குச் செய்யும் கடமை யாது ?
6. மகன் தந்தைக்குச் செய்யும் கடமை யாது ?
7. எதைக் கொண்டு உதவியை மதிப்பிட வேண்டும் ?
8. நாம் ஏன் நாவைக் காக்க வேண்டும் ?
9. மகன் என்று எவனைச் சொல்லலாகாது ?
10. ஊருணிநீர் எதை விளக்க வந்தது ?
11. கேள்வியறிவு ஏன் வற்புறுத்தப்படுகிறது ?

## பயிற்சி

1. பின்வருவனவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறுக :—பகுத்து, இல்வாழ்க்கை, செலுத்த, மதிப்பு, அங்ஙனம், பலகாலும், ஆக்கம், கேள்வியறிவு, தொடர்பு.

2. சேர்த்துக் கூறுக :—பிறர்க்கு + பகுத்து, வழி + செலுத்த, நிலம் + உலகம், அதனை + காக்க, இனியவனாக + பேசினான், ஊரார்க்கு + பயன்பட்டு, மிக + சிறந்த, சொல்ல + கேள், செய்ய + தக்கது.

3. பிரித்துக்காட்டுக :—திருவடி, இல்வாழ்க்கை, நற்குணம், பேருகும், மறத்திலிருந்து, செய்திருக்கலாம், காவானாயின், நடுவிலுள்ள.

4. கீழ்வருவனவற்றை உச்சரித்துக் காட்டுக :—பொருளும் கூறுக :—கல்—கள், மனம்—மணம், மனை—மணை, வால்—வாள்—வாழ், வலி—வளி—வழி.

5. (1) மரம்—இது இடுகுறிப் பெயர் ; எல்லா மரங்களுக்கும் பொதுவான பெயர். ஆதலால், இது இடுகுறிப் பொதுப்பெயர் எனப்படும்.

(2) பலா (மரம்)—இதுவும் இடுகுறிப் பெயரே ; ஆயினும் இது ஒருவகை மரத்தையே சிறப்பாகக் குறிக்கும் ; ஆதலால் இது இடுகுறிச் சிறப்புப் பெயர் எனப்படும்.

இப்பாடத்தில் வந்துள்ள இடுகுறிப்பொதுப் பெயர்களையும் இடுகுறிச் சிறப்புப் பெயர்களையும் குறிப்பிடுக.

# 8. எங்கள் சுற்றுலா


1. என் பெயர் *மணிவண்ணன்*. நான் சென்னைத் திருவள்ளுவர் உயர்நிலைப் பள்ளியில் ஏழாம் வகுப்பு மாணவன். எங்கள் வகுப்பு ஆசிரியரும் தமிழாசிரியரும் எங்களை அழைத்துக்கொண்டு *நீலகிரிக்குச்* சென்று வரத் திட்டமிட்டனர்; சென்னை சென்டிரல் புகைவண்டி நிலையத்திலிருந்து இரவு எட்டு மணி அளவில் புறப்படும் நீலகிரி விரைவு வண்டியில் எங்களுக்கு ஒரு பெட்டி ஏற்பாடு செய்யப்பட்டது. மேட்டுப்பாளையம் புகைவண்டி நிலையத்திலிருந்து எங்களைக் குன்னூர், கோத்தகிரி, நீலகிரி ஆகிய மலைநகரங்களுக்குக் கொண்டு செல்லப் பெரிய உந்துவண்டி ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. நீலகிரியிலுள்ள ஓர் உயர்நிலைப் பள்ளியில் நாங்கள் தங்கக் கடிதவாயிலாக ஏற்பாடு செய்யப்பட்டது. மலைச் செலவை எண்ணி நாங்கள் மிக்க மகிழ்ச்சி அடைந்தோம்.

2. நாங்கள், சென்ற வியாழக்கிழமை இரவு சென்னையைவிட்டுப் புறப்பட்டோம். நாங்கள் ஏறிக்கொண்ட நீலகிரி விரைவு வண்டி மெய்யாகவே விரைந்து ஓடியது. சென்னைக்கு ஏறத்தாழ முப்பது கல் தொலைவிலுள்ள அரக்கோணம் சந்திப்பு வரையில் நாங்கள் ஒருவரோடு ஒருவர் உரையாடிக்கொண்டு சென்றோம். அந்த இரவு முழுநிலா இரவு. ஆதலால் நிலவு பால்போலக் காய்ந்துகொண்டிருந்தது. நாங்கள் கண்ணுக்கெட்டிய தொலைவு வரை இருந்த இயற்கைக் காட்சிகளையும் செயற்கைக் காட்சிகளையும் நிலவு வெளிச்சத்தில் நன்றாய்ப் பார்த்து மகிழ்ந்தோம்.

3. வண்டி அரக்கோணத்திற்கப்பால் சென்று கொண்டிருந்தபோது நாங்கள் உறங்கிவிட்டோம்; காலை ஆறு மணியளவில் துயில் நீத்து எழுந்தோம்; காலைக் கடன்களை முடித்துப் பல் விளக்கினோம்; வண்டியின் இரு புறங்களிலும் பார்வையைச் செலுத்தினோம். வண்டி ஏறத்தாழ ஏழரை மணியளவில் கோயம்புத்தூர்ப் புகைவண்டி

நிலையத்தை அடைந்தது. நாங்கள் அங்குக் காலைச் சிற்றுண்டி உட்கொண்டோம். பின்பு எங்கள் வண்டி ஏறத்தாழ ஒன்பது மணியளவில் மேட்டுப்பாளையத்தை அடைந்தது. கோவையிலிருந்து மேட்டுப்பாளையம் வரையில் நிலம் சிறிது மேடாகவே காணப்பட்டது. எனவே, மேட்டுப்பாளையம் என்னும் பெயர் மிக்க பொருத்தமானதேயாகும்.

4. ஒரு பெரிய உந்துவண்டி எங்களை ஏற்றிக் கொண்டு மேட்டுப்பாளையத்திலிருந்து பத்தரை மணி அளவில் புறப்பட்டது. அது சிறிது நேரம் நிலத்தின்மீது ஓடிக்கொண்டிருந்தது. மலையடிவாரத்தை நெருங்க




நீலகிரி இருப்புப்பாதை—கூனூர் அருகில் ஒரு காட்சி

நெருங்கப் பாதையின் இருமருங்கிலும் கமுகந்தோப்புக்கள் காணப்பட்டன. ஒவ்வொரு கமுகமரமும் தென்னை மரத்தைவிட உயர்ந்திருப்பதைக் கண்டு நாங்கள் வியப்புற்றோம். "மலைவளம் இங்கிருந்துதான் தொடங்குகிறது. நீங்கள் பாதையின் இரு பக்கங்களிலும் காணப்படும் காட்சிகளையும் வண்டி செல்லும் மலைப்பாதையையும் பார்த்து வாருங்கள். பாதையில் மேடுகளும் பள்ளங்களும்

ஆங்காங்குக் காணப்படும். பாதையின் ஒருபால் மலைப் பிளவுகளும், ஆழ்ந்த பள்ளங்களும் காணப்படும். வண்டி அவற்றில் விழுந்துவிடும் என்று நீங்கள் அஞ்ச வேண்டா,'' என்று எங்கள் ஆசிரியர் கூறினர். அப்போது வண்டி மலைப்பாதையில் ஏறத்தொடங்கியது.

5. மலைப்பாதை, மலைச்சரிவுகளைச் செதுக்கி ஒழுங்காக அமைக்கப்பட்டுள்ளது. பாதையின் ஒவ்வொரு திருப்பத்திலும் வண்டிகள் ஒதுங்கத்தக்க இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த ஏற்பாட்டினுல் போக்குவரவில் வண்டிகள் ஒன்ருேடொன்று மோதிக்கொள்ள இடமில்லை. சில மூலைகளில் மலையின் உயரம் குறிக்கப்பட்டிருக்கிறது. நீலகிரி மலைகள் பலவாகும். எங்கள் உந்துவண்டி அப்பல மலை



நீலகிரி மலை—இயற்கைக் காட்சி

களையும் கடந்து சென்றது. பாதையின் ஒருபுறம் பள்ளத்தாக்காக அமைந்துள்ளது; மற்ருெருபுறம் மலைப்பகுதியாகக் காண்கிறது. பள்ளத்தாக்கில் வானளாவிய மரங்களும் செடிகளும் கொடிகளும் பசுமைக் காட்சியை வழங்கின.

6. பாதையில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் எங்கள் வண்டி நிறுத்தப்பட்டது. "நீங்கள் இச்சரிவில் என்

பின்னே நடந்து வாருங்கள். மரம், செடி, கொடிகளைக் கொண்ட இன்பப் பூங்கா ஒன்று இருக்கிறது. அதனைப் பார்த்து மகிழுங்கள்," என்று எங்கள் ஆசிரியர் கூறினர். நாங்கள் அவர் பின்னே சென்று அப்பூங்காவைக் கண்டோம். நாங்கள் அதுவரையில் காணாத பல புதிய செடிகளையும், கொடிகளையும், கடுக்காய் மரம் போன்ற மர வகைகளையும், நாகலிங்கமலர் போன்ற மலர் வகைகளையும் கண்டு வியந்தோம்.

7. உந்துவண்டி சென்ற பாதையில் நாங்கள் சில அருவிகளைப் பார்த்தோம். யூகலிப்ட்ஸ் தைல மரங்கள் மிக்க உயரமாக வளர்ந்துள்ளன. அதன் மணம் காற்றில் மிதந்து வந்தது. சிறிது நேரத்தில் நாங்கள் மலைமீதும் மலைச்சரிவுகளிலும் அமைந்திருந்த ஒரு நகரத்தைக் கண்டோம். அக்காட்சி எங்கள் உள்ளங்களைக் கவர்ந்தது.

"இது நீலகிரி மலைகளின் மீதுள்ள பெரிய நகரங்களுள் இரண்டாவது; முதல் நகரம் உதகமண்டலம். இதன் பெயர் **குன்னூர்**. இப்பெயர் 'குன்றூர்' என இருந்திருக்கலாம். இது கோவையிலிருந்து ஏறத்தாழ எண்பத்திரண்டு கல் தொலைவில் இருப்பது; கடல் மட்டத்துக்கு மேல் ஐயாயிரத்து அறுநூறு அடி உயரத்தில் உள்ளது. மேட்டுப்பாளையத்திலிருந்து உதகமண்டலத்துக்குச் செல்லும் புகைவண்டிப்பாதை இதன் வழியாகச் செல்கிறது. இது வாழ்வதற்கு மிகச் சிறந்த இடம். 'சிம்ஸ் பூங்கா,' 'காட்டேரி நீர்வீழ்ச்சி,' 'புலிப்பாறை' முதலிய இடங்கள் இங்குக் கண்டு மகிழத்தக்கவையாகும். இங்கு நாய்க்கடியை நீக்கும் மருத்துவ நிலையம் ஒன்று இருக்கிறது," என்று எங்கள் ஆசிரியர் மொழிந்தார். பின்பு நாங்கள் சிம்ஸ் பூங்கா முதலிய இடங்களைப் பார்வையிட்டோம்.

8. பின்னர் நாங்கள் குன்னூருக்குமேல் பன்னிரண்டு கல் தொலைவிலுள்ள ***கோத்தகிரி***க்குச் சென்றோம். "இவ்வூர் கடல் மட்டத்துக்குமேல் ஆறுயிரத்து ஐந்நூறு அடி உயரத்திலுள்ளது. இதுவே நீலகிரி மலைகளின்மீது அமைக்கப்பட்ட முதல் கோடை வாழ்விடமாகும்,"

என்று ஆசிரியர் அறைந்தார். எங்கள் உந்துவண்டி அருவங்காடு முதலிய ஊர்களைக் கடந்து, மாலை மூன்று மணி அளவில் உதகமண்டலத்தை அடைந்தது. நாங்கள் ஓர் உயர்நிலைப்பள்ளியில் தங்கினோம்; பகல் உணவு உட்கொண்டோம்; பின்பு ஊரின் பல பகுதிகளைப் பார்வை யிட்டோம்.

9. **உதகமண்டலம்** நான்கு குன்றுகளுக்கிடையில் அமைந்துள்ளது. அவற்றுள் ஒன்றின் பெயர் **தொட்ட பெட்டா** என்பது. அதன் கொடுமுடி நீலகிரி மலைகளில் உள்ள கொடுமுடிகளில் மிகவும் உயர்ந்தது. அதன் உயரம் ஏறத்தாழ எண்ணாயிரத்து எழுநூறு அடியாகும். குன்று களின் அடிவாரங்களிலும் சரிவுகளிலும் சோலைகள் உள்ளன. வீடுகளும் அலுவலகங்களும் அவற்றினிடையில் கட்டப்பட்டுள்ளன. நாங்கள் அங்கு ஓர் அழகிய ஏரியைக் கண்டோம். கிரிக்கெட்டு விளையாட்டு வெளி மிகப் பெரி தாக அமைந்துள்ளது. நீலகிரியிலுள்ள பூங்கா அரசினர் பாதுகாப்பில் உள்ளது. அது மிகத் தூய்மையாகவும் அழகாகவும் அமைக்கப்பட்டுள்ளது. பின்பு நாங்கள் '**தொதவர்**' என்னும் மலைவாழ் மக்களைக் கண்டோம்; அவர்களுடைய குடிசைகளைப் பார்வையிட்டோம்.

10. நாங்கள் இரவு உணவுக்குப் பின்பு பள்ளி மண்டபத்தில் ஒன்றுகூடினோம். அப்பொழுது எங்கள் ஆசிரியர் எங்களை நோக்கிப் பின்வருமாறு கூறினார் :

"நீலகிரி மலைகள் கிழக்குத்தொடர்ச்சி மலைகளையும் மேற்குத்தொடர்ச்சி மலைகளையும் இணைக்கின்றன. நீலகிரி மலைகளின் சராசரி உயரம் ஏறத்தாழ ஆறாயிரத்து ஐந்நூறு அடியாகும். இம்மலைகளின்மீது அமைந்துள்ள மேட்டு நிலத்தின் மொத்த நீளம் ஏறத்தாழ முப்பத் தைந்து கல்; அகலம் இருபது கல். இம்மலைநாடு ***நீலகிரி மாவட்டம்*** எனப்படும். இங்குப் பல ஆறுகள் பாய்கின்றன. அவற்றுள் பைகாரா, குண்டா, காட்டேரி என்பவை குறிப் பிடத்தக்கவை. பைகாரா ஆற்றுநீரைக்கொண்டு மின்சாரம் உண்டாக்கப்படுகிறது.

"இம்மாவட்டத்தின் பரப்பில் பாதி அளவுக்குமேல் அடர்ந்த காடுகள் உள்ளன. இங்கு மழை மிகுதி; வெப்பம் குறைவு. இம்மாவட்டத்தில் தேயிலை, காப்பி, யூகலிப்ட்ஸ், கொய்னு, ஆரஞ்சு, ரப்பர்த் தோட்டங்கள் முதலியவை வளத்துடன் இருக்கின்றன. உருளைக்கிழங்கு, சம்பா கோதுமை, காய்கறிகள், பழவகைகள், ராகி, சாமை முதலியனவும் விளைகின்றன. இங்கிருந்து மைசூருக்குச் செல்ல நல்ல மலைப்பாதை இருக்கிறது; அத்துடன் இம்மாவட்டத்துச் சிற்றூர்கள் பலவற்றிற்குச் செல்லவும் உந்துவண்டிப் பாதைகள் சிறந்த முறையில் அமைக்கப்பட்டுள்ளன.

"இம்மாவட்டத்திலுள்ள சிற்றூர்களில் கன்னட மொழி பேசும் மக்களே மிகுந்துள்ளனர். அவர்கள் காடுகளையும் மலைச்சரிவுகளையும் பண்படுத்தி விளைநிலங்களாக்கியுள்ளனர். அவர்கள் மிக்க உழைப்பாளிகள். பெரிய நகரங்களில் தமிழ் பேசும் மக்களும் வாழ்கின்றனர். அவருள் ஒருசிலர் செல்வ வளத்துடன் இருக்கின்றனர்."

11. நாங்கள் மறுநாள் பகல் ஒரு மணி வரையில் உதகமண்டலத்திலுள்ள ஆளுநர் மாளிகை, சட்டமன்றக் கட்டடம் முதலிய இடங்களைப் பார்வையிட்டோம்; பின்பு உந்துவண்டியில் ஏறி இயற்கைக் காட்சிகளைக் கண்டு கொண்டே மேட்டுப்பாளையம் வந்து சேர்ந்தோம்; அங்கிருந்து நீலகிரி விரைவு வண்டியில் ஏறி, மறுநாள் காலையில் சென்னையை அடைந்தோம். நாங்கள் இம்முறை மேற்கொண்ட சுற்றுலா மிக்க இன்பத்தைத் தந்தது. நாங்கள் இச்சுற்றுலாவை என்றும் மறவோம்.

### அருஞ்சொற்பொருள்

உந்துவண்டி-மக்களை ஏற்றிச் செல்லும் பஸ். செலவு-பிரயாணம். சந்திப்பு-பல புகைவண்டிப் பாதைகள் சந்திக்கும் இடம். துயில்-தூக்கம். நீத்து-விட்டு. சிற்றுண்டி-சிறுமை + உண்டி; அளவில் சிறிய உணவு. பால்-பக்கம். வழங்கின-கொடுத்தன. தைலம்-நெய். அறைந்தார், மொழிந்தார்-சொன்னார். கொடுமுடி-மலைச்சிகரம். ஆளுநர்-கவர்னர். கமுகந்தோப்பு-பாக்குமரத்தோப்பு.

### கேள்விகள்

1. ஆசிரியர் சுற்றுலாவிற்காகச் செய்த முன்னேற்பாடுகள் யாவை?
2. மலைப்பாதை எப்படி அமைக்கப்பட்டுள்ளது?
3. பிள்ளைகள் மலைப்பாதையில் சென்றபோது கண்ட காட்சிகள் யாவை?
4. மாணவர் வழியிலுள்ள இன்பப்பூங்காவில் பார்த்தவை யாவை?
5. குன்னூரைப்பற்றி யாது அறிவாய்?
6. உதகமண்டலம் எவ்வாறு அமைந்துள்ளது?
7. பிள்ளைகள் உதகமண்டலத்தில் பார்த்தவை யாவை?
8. நீலகிரி மலைகளைப்பற்றி ஆசிரியர் கூறிய விவரங்கள் யாவை?

### பயிற்சி

1. வேண்டும் × வேண்டா; 'வேண்டாம்' என்று கூறுவதோ, எழுதுவதோ தவறு. இதை நன்கு நினைவில் வை.

2. நெருங்க நெருங்க—அடுக்குத்தொடர்; இதுபோன்ற அடுக்குத்தொடர்கள் ஆறினைக் கூறுக.

3. சேர்த்துக் கூறுக:— வர + திட்டமிட்டனர், உயர்நிலை + பள்ளி, பார்வையை + செலுத்தினோம், ஒதுங்க + தக்க, இன்பம் + பூங்கா, வாழ்விடம் + ஆகும்.

4. பிரித்துக்காட்டுக:— மேட்டுப்பாளையம், மணியளவில், பத்தரை, வியப்புற்றோம், பூங்கா, தொலைவிலுள்ள, ஆற்றுநீர், மலைப்பாதை, சிற்றூர்.

5. நீலகிரி மலைகளைப்பற்றி முப்பது வரிகளுள் ஒரு கட்டுரை வரைக.


6. (1) அணி—இது அணியப்படும் காரணம்பற்றி வந்த காரணப்பெயர். இது அணியப்படுவன எல்லாவற்றுக்கும் பொதுவான பெயர்; ஆதலால் இது காரணப் பொதுப்பெயர் எனப்படும்.

(2) வளை—இது வளைவாக உள்ள காரணத்தால் வந்த பெயர். இதுவும் அணியென்றே சொல்லப்படும். ஆயினும் இது குறிப்பிட்ட ஓரணிக்கே சிறப்பாக உரியது. எனவே இது காரணச் சிறப்புப் பெயர் எனப்படும்.

(3) முள்ளி—இது முள்ளையுடைய எல்லாவற்றுக்கும் காரணப் பெயராக அமைதற்குரியதாயினும், இடுகுறிப் பெயரைப் போன்று ஒருவகைச் செடிக்கே பெயராக அமைந்துள்ளது. ஆதலால் இது காரண இடுகுறிப் பெயர் எனப்படும்.

இப்பாடத்தில் வந்துள்ள காரணப் பொதுப்பெயர், காரணச் சிறப்புப் பெயர், காரண இடுகுறிப் பெயர்களைக் குறிப்பிடுக.

# 9. மணிமேகலை ஆசிரியர்




1. ***மணிமேகலை*** என்பவள் கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்தவள். அவளது வரலாற்றை ஒரு பெருங் காவியமாகப் பாடியவர் ***மதுரைக் கூலவாணிகன் சாத்தனார்*** என்பவர். நெல், வரகு, சோளம், இறுங்கு, சாமை, தோரை, கேழ்வரகு முதலியவை, 'கூலம்' என்று அக்காலத்தில் பெயர் பெற்றன. அவற்றை வாணிகம் செய்தவர், 'கூல வாணிகர்' எனப்பட்டனர். நம் புலவர் அவற்றை மதுரையில் வாணிகம் செய்த காரணத்தால் 'மதுரைக் கூல வாணிகன் சாத்தனார்' என்று அழைக்கப் பெற்றார்.

2. சாத்தனார் ஒரு நல்லாசிரியரிடம் நற்றமிழை நல முறப் பயின்றார்; செய்யுள் செய்யும் திறமை பெற்றார். அக்காலத்தில் (கி. பி. இரண்டாம் நூற்றாண்டில்) மதுரையில் ***தமிழ்ச் சங்கம்*** ஒன்று இருந்தது. பாண்டியர் பல நூற்றாண்டுகளாக அச்சங்கத்தை வளர்த்துவந்தனர். அவர்களும் சங்கப் புலவர்களாய் இருந்து தமிழ்ப் பாக்களைப் பாடினர். பல நாட்டுப் பெருமக்களும் அதில் கூடியிருந்து தமிழை ஆராய்ந்தனர்; பல நூல்களையும் செய்யுட்களையும் பாடினர். சாத்தனார் அப்பெருமக்களோடு தொடர்பு கொள்ள விரும்பினார்.

3. 'கற்றாரைக் கற்றாரே காமுறுவர்' என்பது முதுமொழி அன்றோ? சாத்தனார் காலத்தில் **நக்கீரர், கபிலர், பரணர், மருத்துவன் தாமோதரனார்** போன்ற புலவர் பெருமக்கள் சங்கத்தில் வீற்றிருந்து தமிழாராய்ந்து வந்தனர். அப்பெருமக்கள் சாத்தனாரை இன்முகத்துடன் வரவேற்று உரையாடினர்; அவரது உரையாடலைக் கண்டு அவரது பெரும்புலமையை அளந்தறிந்தனர்; அன்றுமுதல் சாத்தனாரைத் தம்முடன் சேர்த்துக்கொண்டனர். அவருடைய புலமை, மாசற்ற ஒழுக்கம் முதலிய நற்பண்புகள் புலவர்தம் உள்ளங்களைக் கவர்ந்தன.

4. சாத்தனார் மதுரையில் வாழ்ந்துவந்த போது சேரநாட்டைச் **செங்குட்டுவன்** ஆண்டுவந்தான். அவன் மிகச் சிறந்த போர்வீரன்; குடிமக்களைக் கண்ணும் கருத்துமாய் ஆள்வதில் பெயர் பெற்றவன்; ஒழுக்கம் மிக்கவன்; தமிழ்ப் பற்று மிக்குடையவன்; உயர்ந்த சைவன்; ஆயினும் சமயப் பொதுநோக்கு உடையவன்; அவனது பின்னவரான **இளங்கோ** என்பவர் துறவை மேற்கொண்டவர்; மிகச் சிறந்த புலவர்.

5. சாத்தனார் செங்குட்டுவனைப்பற்றியும் இளங்கோவைப்பற்றியும் நிரம்பக் கேள்வியுற்றார்; அப்பெருமக்களுடன் நட்புக்கொள்ள விரும்பினார்; மதுரை வந்து மீண்ட சேரநாட்டுப் புலவர்களுடன் அந்நாடு சென்றார்; சேரர்பெருமானையும் இளங்கோவடிகளையும் கண்டு அளவளாவினார். அன்றுமுதல் அம்மூவரும் உள்ளம் ஒன்றிய நண்பராயினர்.

6. சாத்தனார் மதுரையில் குடியேறியபோது **நன்மாறன்** என்பவன் மதுரையை ஆண்டுவந்தான். அவன் புலவர் புரவலனாய்த் திகழ்ந்தான். அவன் நமது புலவரை வருவித்துப் பரிசில் நல்கி மகிழ்வித்தான். புலவர் அவனை நோக்கி, "பாண்டியர் பெருமானே, நீ ஆரம் தாழ்ந்த அழகு மிக்க மார்பினையுடையவன்; முழந்தாள் அளவும் தாழ்ந்துள்ள நீண்ட கைகளையுடையவன்; அழகு மிக்கவன்; நீ கடலிடத்தே கிளர்ந்து எழுகின்ற செஞ்ஞாயிற்றைப்

போலப் பகைவரைச் சுட்டெரிப்பவன்; ஆயினும் எம்போன்ற புலவர், பாணர், விறலியர், கூத்தர் என்பவர்க்குத் திங்களை ஒப்பவன். அரசே, நீ நீடு வாழ்க,'' என்று கூறி வாழ்த்தினர்.

7. சில ஆண்டுகளுக்குப் பின்பு நன்மாறன் சித்திர மாடம் என்னும் வளமனையில் இறந்தான்; அதனல் அவன், 'சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன்' எனப் பெயர் பெற்றான். அவனுக்குப் பின்பு பாண்டியன் **நெடுஞ் செழியன்** அரசுகட்டில் ஏறினன். அவன் மிகச் சிறந்த புலவன்; தன் நாட்டில் ஒவ்வொருவரும் கல்வி கற்க வேண்டும் என்று வற்புறுத்தியவன். அறநெறி தவருத அம்மன்னன் ஊழ்வினை வசத்தால் பொற்கொல்லன் பேச்சை நம்பிக் கோவலனைக் கொல்வித்தான். தான் செய்தது பொறுக்க இயலாத குற்றம் என்பதைக் கோவலன் மனைவியான கண்ணகியால் அறிந்தவுடனே உயிர் நீத்தான். கணவனை இழந்த கண்ணகி மதுரைத் தெருக்களில் கண்ணீர் சோரவும் கூந்தல் அவிழ்ந்து புரளவும் புலம்பினள். சாத்தனர் இந்த நிகழ்ச்சிகளையெல்லாம் நேரில் கண்டார். அவர் மனம் நெருப்பிற்பட்ட புழுவெனத் துடித்தது.

8. கண்ணகி ஆருத் துயர்கொண்டு வையையாற்றின் ஒரு கரைவழியே சென்று, பல மலைகளைத் தாண்டிச் சேரநாட்டை அடைந்தாள்; அங்கு ஒரு மலைமீது வேங்கை மரத்தடியில் நின்றாள்; தன்னை நாடிவந்த விமானமொன்றில் ஏறி விண்ணகம் சென்றாள். அவ்வரிய காட்சியை மலைநாட்டு மக்கள் கண்டு வியந்தனர்; தமது மலைநாட்டைக் காணவந்த செங்குட்டுவனிடம் அவ்வியத்தகு செய்தியை விளம்பினர். அவ்வமயம் சாத்தனர் அங்கிருந்தார். அவர் அங்கிருந்த செங்குட்டுவன் முதலியோரிடம் கண்ணகியின் வரலாற்றை எடுத்துக் கூறினர்.

9. செங்குட்டுவன் கண்ணகியைக் கோவில் கட்டி வழிபட விரும்பினன்; அவளது உருவம் பொறிக்கத்தக்க கல்லை இமயத்திலிருந்து கொண்டுவர ஒரு பெரும்படை

யுடன் இமயம் நோக்கிச் சென்றான்; தன்னை எதிர்த்த ஆரிய மன்னரை வென்றான்; பத்தினியின் உருவம் பொறித்தற்குரிய கல்லை இமயத்திலிருந்து கொண்டு வந்தான்; அதனைக் கங்கையில் நீராட்டித் தூய்மை செய்தான்; தனது நாட்டில் கோவில் கட்டிப் பத்தினியை வழிபட்டான். அவ்வழிபாட்டு விழாவில் அரசர் பலர் கலந்துகொண்டனர்.

10. கண்ணகியின் வரலாற்றை ஒரு பெருங்காவிய மாகப் பாடவேண்டும் என்று சாத்தனார் இளங்கோ வடிகளை வேண்டிக்கொண்டார். அப்பெரியார் அதற்கு உடன்பட்டார். கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த மணிமேகலையின் வரலாற்றை ஒரு பெருங்காவியமாகப் பாடுமாறு அடிகள் சாத்தனாரை வேண்டினார்; சாத்தனார் அதற்கு உடன்பட்டார்.

11. கோவலன் கண்ணகி வரலாற்றைக் கூறுவது *சிலப்பதிகாரம்* என்னும் பெருங்காவியம். *மணிமேகலை* என்னும் காவியம் மணிமேகலையின் வரலாற்றை விரித் துரைப்பது. இக்காவியத்தில் அக்காலப் பெருநகரங்களாய் விளங்கிய வஞ்சிமாநகரம், காஞ்சிமாநகரம், காவிரிப்பூம் பட்டினம் என்பவற்றின் அமைப்பையும் சிறப்பையும் காணலாம்; அக்கால விழாக்கள், அவற்றைப்பற்றிய விவரங்கள், மக்களுடைய பழக்க வழக்கங்கள், கடல் வாணிகம் பற்றிய செய்திகள் முதலியவற்றை அறியலாம். சாத்தனார் காலத்தில் தமிழகத்தில் இருந்த எல்லாச் சமயங் களைப்பற்றிய விவரமும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. இந்நூலின் நடை எளிமையும் இனிமையும் வாய்ந்தது. வருணனைப் பகுதிகளும் இந்நூலில் ஆங்காங்கு இடம் பெற்றுள்ளன. நீங்கள் மேல் வகுப்புக்களில் இந்நூலைப் பற்றி மிகுதியாக அறிந்து மகிழ்வீர்கள்.

## அருஞ்சொற்பொருள்

காமுறுவர் – விரும்புவர். முதுமொழி – பழைய மொழி. இன் முகம் - இனிமை + முகம். சைவன் - சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டவன். சமயப் பொதுநோக்கு - எல்லாச் சமயங்களையும் சம மாகக் கருதும் மன நிலை. முன்னவர் - தமையன். பின்னவர் - தம்பி. அளவளாவுதல் - உரையாடி மகிழ்தல். ஒன்றிய - ஒன்றுபட்ட. புர வலன் - உணவும் பிற பொருள்களும் தந்து எளியவரைப் பாதுகாப்ப வன். ஆரம் - மாலை. கிளர்ந்து - கொந்தளித்து. செஞ்ஞாயிறு - சிவந்த சூரியன். பாணர் - பாடுவோர். விளம்பினர் - சொன்னார். காவியம் - ஒப்பற்ற ஒரு தலைவனது வரலாற்றினை விரித்துப் பாடப்பெற் றுள்ள பெருநூல். எல்லாச் சமயங்கள் - மணிமேகலையின் காலத்தில் தமிழகத்தில் இருந்த பௌத்தம், சமணம், ஆசீவகம், சைவம், வைணவம் முதலியன.

### கேள்விகள்

1. மதுரைத் தமிழ்ச்சங்கத்தைப்பற்றி யாது அறிவாய்?
2. "கற்றாரைக் கற்றாரே காமுறுவர்."—இது கூறப்பெற்ற சந்தர்ப்பம் யாது?
3. செங்குட்டுவன், இளங்கோ என்பவர் யாவர்?
4. சாத்தனார் பாண்டியன் நன்மாறனை நோக்கிக் கூறியது யாது?
5. சாத்தனார் மனம் எப்பொழுது நெருப்பில் பட்ட புழுவெனத் துடித்தது?
6. செங்குட்டுவன் கண்ணகியை எங்ஙனம் சிறப்பித்தான்?
7. சிலப்பதிகாரம் என்பது யாது? அதனைப் பாடியவர் யார்?
8. மணிமேகலை என்னும் காவியத்தில் இடம் பெற்றுள்ள செய்திகள் யாவை?

### பயிற்சி

1. கீழ்வருவனவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறுக:— இன்முகம், வரவேற்று, பொது நோக்கு, இயலாத, ஆராத்துயர், தூய்மை, வழிபாடு, பெருங்காவியம்.

2. பிரித்துக் காட்டுக:—இன்முகம், மிக்குடையவன், நாட்டுப் புலவர், பெருமக்கள், அறநெறி, ஆராத்துயர், வையையாறு, பொறுத் தற்கரிய.

3. சேர்த்துக் கூறுக:—கூலம் + வாணிகம், தமிழ் + ஆராய்ந்து, மிக + சிறந்த, செங்குட்டுவனை + பற்றி, சேரநாடு + அரசன், புரவல னாய் + திகழ்ந்தான், நாடு + ஐ, அ + சமயம்.

4. சாத்தனாரே இப்பாடச் செய்தியைக் கூறுவதுபோலக் கூறுக.

5. குயில்—இது இனிய குரலையுடைய ஒரு பறவை.

குயில் வந்தாள்.—இது, குயிலின் குரல்போல இனிய குரலையுடைய வள் வந்தாள் என்று பொருள்படும். இங்குக் 'குயில்' என்னும் பறவையின் பெயர், இனிய குரலை உடையவளுக்கு ஆகி வந்தது.

இவ்வாறு ஒன்றன் பெயர் அதனோடு தொடர்புடைய மற்றொன் றுக்கு ஆகி வருதல் ஆகுபெயர் எனப்படும்.

# 10. பழியர்*

1. மதுரை மாவட்டத்தில் பழனி மலைகள், ஏலக்காய் மலைகள், வருஷநாடு—ஆண்டிப்பட்டி மலைகள் என்னும் பெரிய மலைத்தொடர்கள் இருக்கின்றன. அம்மலைகளின் அடிப்பகுதியில் புதர்கள் உண்டு. மேலே செல்லச் செல்ல அடர்ந்த காடுகள் இருக்கின்றன. காடுகளில் நுணு, ஒதியன் முதலிய மர வகைகள் மிகுந்துள்ளன. காட்டு எருமை, மான், கரடி, சிறுத்தை முதலிய விலங்குகள் அங்கு வாழ்கின்றன.

2. ஏறத்தாழ நாலாயிரத்தைந்நூறு அடிவரை உயரமுள்ள மலைப்பகுதிகளில் வாழை, காப்பி, ஏலம், ரப்பர், தேயிலை, மிளகு முதலிய பயிர்கள் உண்டு பண்ணப்படுகின்றன. அதற்கு மேலும் உயரமான பகுதிகளில் கோதுமை, உருளைக்கிழங்கு, வெள்ளைப்பூண்டு முதலியவை பயிராகின்றன. காட்டுப் பகுதிகளில் யூகலிப்ட்ஸ், சவுக்கு, சாம்பிராணி, குங்கிலியம் முதலிய மரங்கள் வளர்க்கப்படுகின்றன.


பழியர் மகள்

3. பழனி மலைத்தொடர், கீழ்ப்பழனி மலைத்தொடர் என்றும் மேல்பழனி மலைத்தொடர் என்றும் இருவகைப்படும். இம்மலைத்தொடர்களில் பழியர், ஊராளிகள், குறவர், புலையர், குன்னுவர், முதுவர் என்னும் இனங்களைச் சேர்ந்த மக்கள் வாழ்கின்றனர். ஓர் இனத்தவர்க்கும் மற்றோர் இனத்தவர்க்கும் திருமணத் தொடர்பு இல்லை.

4. *பழையர்* என்னும் சொல்லே நாளடைவில் பழியர் என மாறியிருத்தல் வேண்டும். கீழ்மலைப் பழியர்

---

* ஆசிரியர் C. அன்னகாமு அவர்கள் எழுதிய "மேல்மலை மக்கள்" என்னும் நூலின் உதவி கொண்டு இப்பாடம் எழுதப் பெற்றது.

பாறைப் பிளவுகளின் அடியில் வாழ்கின்றனர். இவர்கள் கரிய நிறத்தவர்; சுருட்டை முடியினர்; தடித்த உதட்டினர்; சப்பை மூக்கினர்; கட்டை உருவினர். இவர்கள் வில் முதலிய கருவிகள் இல்லாதவர்; சக்கிமுக்கிக் கற்களைக் கொண்டு தீ உண்டாக்குபவர்; கூர்மை பொருந்திய காட்டுக் கம்புகளின் உதவியால் கிழங்குகளைக் கல்லி வேக வைத்து உண்பவர்; இயற்கையாகக் கிடைக்கும் ஈச்சம்பழம், களாப்பழம், பலாப்பழம் போன்ற பழங்களை உண்பவர்; உடும்பு, முயல், பன்றி, மான், எலி முதலிய விலங்குகளின் இறைச்சியை வேக வைத்துத் தின்பவர். இவர்கள் அடிக்கடி இடம் பெயர்ந்து வாழ்பவர். இவருள் சிலர் மரப்பட்டைகளை ஆடையாக அணிவர்; பலர் சிறிதளவு ஆடை அணிவர்.

5. *மேல்மலைப் பழியர்* குடிசை கட்டி வாழ்பவர். இவர்கள் கேப்பை முதலிய தானியங்களைப் பயிரிடுகின்றனர். இவர்கள் வாழும் பகுதிகளில் கீழ்நாட்டு மக்களாகிய நம்மவர் காடுகளை அழித்துக் காப்பி, ஏலம், வாழை முதலியவற்றைப் பயிராக்குகின்றனர். அரசாங்கம் ஒவ்வொரு பழியர் குடும்பத்துக்கும் காடு மூன்று ஏக்கரும் புல்மேடு ஐந்து ஏக்கரும் கொடுத்துள்ளனர். பழியர் உடல் வருந்தி உழைப்பவர். ஆண்களும் பெண்களும் உழைத்து வேலை செய்பவர்; தம்முள் ஒற்றுமையாக வாழ்பவர்.

6. பழியர் காட்டுத் தேவதைகளையும் மாரியம்மனையும் கும்பிடுகின்றனர். அவர்கள் தெய்வத்திற்குப் பூசை போடுதலைக் 'கும்பிடு' என்னும் சொல்லால் குறிக்கின்றனர். பூசைக் காலத்தில் பூசாரி சாமியாடி வாக்குச் சொல்வதும் உண்டு. பூசாரி வேலைக் கையில் பிடித்து இடுப்பில் மணி அணிந்து ஆடுவான். பழியர் 'சாமி வீடு' ஒன்று கட்டியுள்ளனர். அதனுள் ஒரு புதுப் பானை உண்டு. இவர்கள், தாம் வழிபடும் தெய்வங்கள் அப்பானையுள் அடங்கியிருப்பதாக நம்புகின்றனர்.

7. மேல்மலைப் பழியரது மணமுறை எளிமையானது. மணமக்கள் இருவரும் நீராடி அறுகம்புல் மேடைமீது

நிற்பர். மணமகன் பாசிமணிகள் கோத்த கயிற்றை மணமகளின் கழுத்தில் கட்டுவான். இதுதான் திருமணச் சடங்கு. பின்பு அனைவரும் உண்டு பாடுவர்; ஆடுவர். ஆணும் பெண்ணும் இறுதிவரையில் இணைபிரியாது வாழ்வர். மணவிலக்கு இல்லை. கைம்பெண்கள் மறுமணம் செய்துகொள்ளலாம்.

8. பழியர் தலைவனுக்குக் காணிக்காரன் என்பது பெயர். அவன், பழியர் தங்குவதற்கு ஏற்ற இடத்தைத் தேர்ந்தெடுப்பான். அதன் பின்னரே பழியர் அங்குச் சென்று காட்டைத் திருத்தி வாழத் தொடங்குவர். ஆண்கள் காட்டை அழிப்பர்; நிலத்தைப் பண்படுத்துவர்; வேலி கட்டுவர்; விதை விதைப்பர்; காவல் காப்பர். பெண்கள் களை எடுப்பர்; பிற வேலைகள் செய்வர்.

9. பழியருள் தானியம் இருப்பவர் இல்லாதவருக்கு வழங்குவர்; மிகுதியாக இருப்பின் மற்றவர்க்குப் பங்கிட்டுக் கொடுப்பர்; வேட்டையிலும் எல்லோருக்கும் சமமான பங்கு உண்டு. பழியரின் பெயர்கள் தூய தமிழ்ப் பெயர்களாக இருக்கின்றன. அவற்றுள் ***செங்கண்ணி, செங்கண்ணன், குறிஞ்சான், நீலன்*** என்பன குறிக்கத்தக்கவை. மேல்மலைப் பழியர் மன அமைதி உடையவர்கள்; அழுத்தமான இறைப் பற்று உடையவர்கள்; உழைப்பில் இன்பம் காண்பவர்கள்.

10. பழியர் காட்டில் கிடைக்கும் பச்சிலைகளையும் மூலிகைகளையும் அவற்றின் பயன்களையும் நன்கறிந்தவர். பாம்பின் விடத்தை நீக்கும் நாகதாளிவேர் போன்ற வேர்களையும் சிறியாநங்கை, பெரியநங்கை போன்ற மூலிகைகளையும் அவர்கள் பயன்படுத்த அறிந்துள்ளனர். உடல் நோய்களைப் போக்கும் பலவகைப் பச்சிலைகளின் பெயர்களையும் அவற்றை மருந்தாகக் கொடுக்கும் முறைகளையும் அவர்கள் நன்கு அறிந்துள்ளனர்.

11. பழியர் மந்திரத்தில் கைதேர்ந்தவராவர். அவர்கள் மந்திர ஆற்றலால் புலியின் வாயைக் கட்டுவர். அவர்கள் ஒரு குறிப்பிட்ட எல்லையுள் புலி வரக்கூடாது

என்பதை மந்திரவாதியிடம் கூறுவர். மந்திரவாதி அந்த எல்லையுள் புலிகளும் சிறுத்தைகளும் நடமாடாதபடி மந்திரித்துவிடுவார்; குறிப்பிட்ட எல்லையின் நான்கு பக்கங்களிலும் பக்கத்திற்கு ஒன்றாக நரி வால்களைக் கட்டி விடுவர். புலிகளும் சிறுத்தைகளும் அந்த எல்லையுள் வாரா, தவறி வரினும், மனிதர்க்கும் கால்நடைகட்கும் ஊறு செய்யா என்று பழியர் நம்புகின்றனர்.

12. மனிதன் மந்திரத்தால் புலியாகவோ சிறுத்தையாகவோ மாறமுடியும் என்றும், மீண்டும் மனிதனாக உருமாறக்கூடும் என்றும் பொதுவாக இந்திய மலைவாழ் மக்கள் நம்புகின்றனர். பழியரும் அந்த நம்பிக்கை உடையவரேயாவர். மந்திரவாதி உடல் மெலிந்த ஒருவனை ஒரு மரத்தடிக்கு அழைத்துச் செல்வான்; தான் மரக்கிளையில் ஏறிக்கொள்வான். மந்திரித்த மூன்று சிறிய கற்களை மரத்தடியில் நிற்பவன்மீது போடுவான். உடனே மரத்தடியில் இருப்பவன் புலியாக மாறுவானும். மந்திரவாதி, குறிப்பிட்ட ஒரு நாளில் அம்மரத்தடிக்கு வரவேண்டும் என்று அப்புலிக்கு ஆணையிடுவானும். புலி தன் விருப்பம்போல விலங்குகளை வேட்டையாடிவிட்டுக் குறித்த நாளில் மந்திரவாதி குறிப்பிட்ட மரத்தடிக்கு வந்துவிடுமாம். மந்திரவாதி அப்புலியை மனிதனாக மாற்றுவானும். குறித்தநாளில் வராவிடில், அப்புலி தன் வாழ்நாள் முழுமையும் புலியாகவே இருக்க வேண்டுமாம். பழியர் இதனை நம்புகின்றனர்.

13. **ஈத்தை** என்பது ஒருவகைப் புல். அது ஏறத்தாழ மூவாயிரம் அடியிலிருந்து நாலாயிரம் அடி வரையிலுள்ள செழிப்புள்ள இடங்களில் வளரும். ஒருவகை ஈத்தை ஏறத்தாழப் பதினெட்டு அடி உயரம் வளரும்; மற்றொருவகை ஏறக்குறைய முப்பது அடி உயரம் வளரும். ஈத்தையின் இலைகள் அகலமானவை. மலைவாழ் மக்கள் அனைவரும் இதனைப் பலவாறு பயன்படுத்துகின்றனர்; இலைகளைக்கொண்டு கூரை வேய்கின்றனர்; இதன் தட்டையை வரிச்சுகளாகப் பயன்படுத்துகின்றனர்; இலைகளையும் தட்டைகளையும் கொண்டு வீட்டின் சுவர்களை

அமைக்கின்றனர்; ஈத்தையைக்கொண்டு முறத்தையும் பாயையும் பின்னுகின்றனர்; ஈத்தை நாரினுல் கட்டுகள் கட்டுகின்றனர். கரண்டிகள், கத்திகள், குத்தும் முட்கள், ஊதுகுழல்கள் முதலியனவும் ஈத்தையால் வேண்டும் போது செய்யப்படுகின்றன. காய்ந்த ஈத்தைகள் பந்தம் கொளுத்தப் பயன்படுகின்றன.

14. பழியர் வீட்டினுள் நுழைந்தவுடன் இடப் பக்கத்தில் ஒரு மேடை உண்டு. பழியர் அதற்கு 'அதட்டை' என்று பெயரிட்டுள்ளனர். அதன் நீளம் ஏறத்தாழ ஆறடி; உயரம் ஏறத்தாழ மூன்றடி. அந்த மேடை ஈத்தையால் அமைக்கப்பட்டது. ஈத்தையால் பின்னப்பெற்ற அழகிய பாய் ஒன்று அம்மேடையின் மீது விரிக்கப்பெற்றிருக்கும். அவ்வீட்டுப் பழியர் அம்மேடையைப் பயன்படுத்துவது இல்லை. அரசாங்க உயர் அலுவலர், தோட்ட முதலாளிகள், விருந்தினர் ஆகியோர் இருக்கவே அது பயன்படுத்தப்படும்.

15. பழியர் வீட்டில், வருபவரை வரவேற்கும் அறை ஒன்று, சமையலறை ஒன்று, படுக்கையறை ஒன்று எனச் சில அறைகள் இருக்கின்றன. ஒவ்வோர் அறையின் சுவரும் 'பட்டாங்கி' என்று சொல்லப்படும். அது ஈத்தையால் ஆனது. சமையலறையில் எப்பொழுதும் கணப்பு இருக்கும். அக்கணப்புக்கு நேர் மேல் ஒரு பரண் இருக்கும். அதுவும் ஈத்தையால் அமைக்கப்பட்டதேயாகும். உலர்த்தப்பட வேண்டும் பொருள்கள் அப்பரண் மீது உலர்த்தப்படும்.

### அருஞ்சொற்பொருள்

யூகலிப்ட்ஸ் - இது ஒருவகை மரம்; இதிலிருந்து ஒருவகைத் தைலம் எடுக்கப்படும்; அது உடல்வலி முதலியவற்றை நீக்க வல்லது. குங்கிலியம் - சாம்பிராணிபோன்ற மணப் பொருள். முடி – தலைமயிர். கட்டை உருவினர் - குள்ளமானவர். கல்லி - தோண்டி. தேவன் × தேவதை. தேவதை – பெண் தெய்வம். இறுதி - முடிவு. கைம்பெண் - கணவனை இழந்தவள். மூலிகைகள் – மருந்தாக உபயோகிக்கப்படும் செடி கொடிகளின் வேர்கள். ஆற்றல் - வலிமை. வரின் - எதிர்கால வினையெச்சம். ஊறு - துன்பம். ஆனை–

கட்டளை. உயர் அலுவலர் - அதிகாரிகள். இருக்க - அமர, உட்கார. கணப்பு - குளிர்காயும் தீ. உலர்த்தல் - காயவைத்தல்.

## கேள்விகள்

1. மதுரை மாவட்டத்து மலைத்தொடர்களில் நாலாயிரத்தைந் நூறு அடிவரையில் பயிராவன யாவை?
2. பழனி மலைத்தொடரில் வாழும் மலைவாணர் யாவர்?
3. கீழ்மலைப் பழியரைப்பற்றி யாது அறிவாய்?
4. மேல்மலைப் பழியர் எப்படி உழைத்து வாழ்கின்றனர்?
5. மேல்மலைப் பழியர் எவ்வாறு திருமணம் செய்துகொள்வர்?
6. மேல்மலைப் பழியர் தேவதைகளை எவ்வாறு வழிபடுகின்றனர்?
7. பழியர் நம்பிக்கைகளைப்பற்றி யாது அறிவாய்?
8. பழியர் ஈத்தையை எவ்வெவ்வாறு பயன்படுத்துகின்றனர்?

## பயிற்சி

1. கீழ்வருவனவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறுக:—அடர்ந்த, அடிக்கடி, தொடர்பு, இயற்கையாக, நம்மவர், மறுமணம்.

2. பிரித்துக் காட்டுக:—உயரமான, வெள்ளைப்பூண்டு, திருமணத் தொடர்பு, காட்டுக்கம்பு, களாப்பழம், மரப்பட்டை.

3. சேர்த்துக் கூறுக:—மலை + பழியர், பூசை + காலம், காடு + தேவதை, மணம் + மகள், அங்கு + சென்று, காட்டை + திருத்தி, வாழ + தொடங்குவர்.

4. பழியரின் தோற்றம்—பயிர்த் தொழில்—வழிபாடு—ஒற்றுமையுள்ள வாழ்க்கை என்னும் இக்குறிப்புக்களைக் கொண்டு பழியரைப் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

5. தடித்த எழுத்துக்களையுடைய சொற்கள் எவ்வாறு ஆகுபெயராயின என்பதை விளக்குக:—

**கரடி** வந்தான், **தாமரை** முகம், **ஊர்** சிரிக்கிறது, **கார்** அறுத்தான், **வெற்றிலை** நட்டான், **வற்றல்** உண்டான், **படி** கொடுத்தான், **நான்கு முழம்** வாங்கினன், **பாவை** வந்தாள்.

# 11. பல்லவ மல்லன்

1. சேர, சோழ, பாண்டியர் என்ற தமிழரசர் தமிழகத்தைச் சங்ககாலத்தில் ஆண்டுவந்தனர். ஏறத்தாழக் கி. பி. 300இல் தொண்டைநாடு பல்லவர் என்னும் புதிய அரச மரபினர் ஆட்சிக்கு உட்பட்டது. அவர்கள் காஞ்சீபுரத்தைத் தலைநகராய்க் கொண்டு அரசாண்டனர். பல்லவர் நாளடைவில் சோழநாட்டையும் கைப்பற்றி ஆண்டனர்.

2. பல்லவ அரசருள் மிகச் சிறந்தவன் முதலாம் ***மகேந்திரவர்மன்*** என்பவன். அவன் பலகலைகளில் வல்லவன்; வடமொழிப்புலமை நிரம்பியவன். அவ்வேந்தன் மலைச் சரிவுகளையும் பாறைகளையும் குடைந்து கோவில்களை அமைத்தான். அவன் மகனை முதலாம் ***நரசிம்மவர்மன்*** சாளுக்கியனை இரண்டாம் புலிகேசியை வென்ற காரணத்தினல் 'மகா மல்லன்' என்று பெயர் பெற்றவன். அப்பெயர்கொண்டதே மகாமல்லபுரம் அல்லது மாமல்லபுரம் என்ற துறைமுக நகரம். அதுவே இன்று மகாபலிபுரம் என்று கூறப்படுகிறது. மகாமல்லன் சிறந்த அறிஞன்; மாமல்லபுரத்தில் உள்ள பாண்டவர் இரதங்கள் என்னும் ஒற்றைக்கற் கோவில்கள் அவன் காலத்தில் குடையப்பட்டனவே. மகாமல்லன் சிறந்த கடற்படையை வைத்திருந்தான்.

3. மாமல்லன் மகனை முதலாம் *பரமேசுவரவர்மனும்* சிறந்த போர்வீரன். இவன் தன் முன்னேர்களைப் போலவே பம்பாய் மாகாணத்தை ஆண்டுவந்த சாளுக்கியரைப் புறம்கண்டவன்; இவன் முதலாம் விக்கிரமாதித்தன் என்ற சாளுக்கிய வேந்தனைப் பெருவளநல்லூரில் முற்றிலும் முறியடித்தவன். இவன் காஞ்சியை அடுத்த கூரம் என்னும் சிற்றூரில் ஒரு சிவன் கோவிலைக் கட்டினன்; மாமல்லபுரத்து ஒற்றைக் கற்கோவில்களின் வேலையை முற்றுவித்தான். இவன் மிகச் சிறந்த சிவனடியான்.

4. இவன் மகனுன இரண்டாம் **நரசிம்மவர்மனே** காஞ்சியில் கயிலாசநாதர்கோவிலைக் கட்டியவன். அக் கோவில் வியக்கத்தகும் சிற்பவேலைப்பாடு அமைந்தது. பல நாட்டவரும் இன்றும் அக்கோவிலைக்கண்டு வியக்கின் றனர்; அதில் உள்ள சிற்பங்களைப் பார்த்துப் பாராட்டுகின் றனர். அவன்காலத்தில் மாமல்லபுரமும் நாகப்பட்டின மும் சிறந்த துறைமுக நகரங்களாய் விளங்கின.

5. இரண்டாம் நரசிம்மவர்மனுக்குப் பின்பு இரண் டாம் பரமேசுவரவர்மன் அரசு கட்டிலில் ஏறினன். அவன் பிள்ளையின்றி இறந்தான். அதனுல் அமைச்சர் முதலி யோர் ஆந்திரநாட்டில் இருந்த பல்லவ மரபைச் சேர்ந்த இரணியவர்மன் என்பவனை அடைந்தனர்; அவன் மைந் தருள் ஒருவனை அரசனுக்க விழைந்தனர். இரணியவர்மன் தன் மைந்தர் நால்வரையும் அழைத்து, "உங்களுள் பல் லவ அரச பதவியை விரும்புவோர் யாவர்?" என்று வின விஞன். முதல் மூவரும் தங்களுக்கு விருப்பமில்லை என் பதைத் தெரிவித்தனர். பன்னிரண்டு வயதுடைய **பல்லவ மல்லன்** என்னும் நான்காம் மைந்தன், "நான் அரசனு வேன்," என்று தன் விருப்பத்தைத் தெரிவித்தான். ஆதலால் பல்லவ மல்லன் அவ்விளவயதிலேயே **நந்திவர்மன்** என்னும் பெயரால் அரசனுக்கப்பட்டான்.


6. பல்லவ மல்லன் கி. பி. 710 முதல் 775 வரை யில் அரசாண்டான். இவன் திருமால் அடியவன். இவன் கும்பகோணத்திற்கு அருகில் உள்ள சிற்றூர் ஒன்றை நந்தி புரம் என்று தன்பெயரால் புதுப்பித்தான்; அங்கு ஒரு கோட்டையைக் கட்டினன். இவன் ஒருமுறை அக் கோட்டையுள் தங்கியிருந்தான். அப்பொழுது பாண்டி யன் அரிகேசரி பராங்குச மாறவர்மன் என்பவன் தன் சிற்றரசர் பலருடனும் பெருஞ்சேனையுடனும் சென்று நந்தி புரத்தை முற்றுகையிட்டான். பல்லவமல்லன் அந்த முற்றுகையைச் சிறிதும் எதிர்பார்க்கவில்லை; அதனுல் செய்வது அறியாது விழித்தான்.

7. பாண்டியனது முற்றுகைபற்றிய செய்தி காஞ்சிக்கு எட்டியது. அங்கு *உதயசந்திரன்* என்ற படைத்தலைவன் இருந்தான். அவன் உடனே பெரும்படையுடன் நந்தி புரத்திற்கு விரைந்தான்; பல ஊர்களில் நடந்த போர் களில் பாண்டியர் படையை வென்றான். உதயசந்திர னது உதவியால் பல்லவ மல்லன் பகைவர் தாக்குதலி லிருந்து தப்பினான். பல்லவ வேந்தன் தன் படைத்தலை வனைப் பாராட்டி அவனுக்குச் சில சிற்றூர்களைத் தானமாக அளித்தான்.

8. பல்லவ மல்லன் காலத்தில் *இரண்டாம் விக்கிர மாதித்தன்* என்பவன் சாளுக்கிய மன்னனாய் விளங்கி னான். அவன் தன் பகைவனை பல்லவ மல்லனை எதிர்க் கப் பெரும்படையைத் திரட்டினான்; தக்க சமயம் பார்த் துப் பல்லவ நாட்டின்மீது படையெடுத்தான். பகை வரைத் தன் நாட்டினுள் வரவிடுத்துப் பின்பு அவரைத் திடீரெனத் தாக்குதல் பல்லவர் வழக்கம். பல்லவ மல்லன் அவ்வழக்கப்படியே முதலில் பகைவனை வன்மையுடன் எதிர்க்கவில்லை. அதனால் சாளுக்கியன் காஞ்சியுள் நுழைந்துவிட்டான். அவன் தனக்கு எதிர்ப்பு இல்லை என்று இறுமாந்து இருந்தபோது, பல்லவன் ஒரு பெரும் படையுடன் அவனைத் திடீரெனத் தாக்கினான். போர் மிகவும் கடுமையாக நடைபெற்றது. புலிக்கூட்டத்துள் சிங்கம் பாய்வதுபோலப் பல்லவன் பகைவர் கூட்டத்துள் பாய்ந்தான். அவனது வாட்போரைக் கண்டு பகைவர் அஞ்சினர். மன்னனே போரிடுவதைக் கண்ட பல்லவப் படைவீரர் முழுமூச்சுடன் போரிட்டனர். இறுதியில் பல்லவ மல்லன் வெற்றி பெற்றான்.

9. ஆண்டுகள் சில கழிந்தன. சாளுக்கியர் ஆட்சி யில் இராட்டிரகூட மரபைச் சேர்ந்த *தந்திதுர்க்கன்* என்பவன் சிற்றரசனாய் இருந்தான். அவன் தக்க நேரத் தில் சாளுக்கியனை வென்று அவனது நாட்டைக் கைப் பற்றினான். அதுமுதல் பம்பாய் மாகாணத்தில் *இராட்டிர கூடர்* ஆட்சி நடைபெறலாயிற்று. தந்திதுர்க்கன் என்பு

வன் 'வயிரமேகன்' என்னும் மறுபெயர் உடையவன். அவன் பல்லவ நாட்டின்மீது படையெடுத்தான். பல்லவ மல்லன் அவனை எதிர்த்துப் போரிட்டான். பல்லவனது வீரத்தைக் கண்டு மகிழ்ந்த தந்தி துர்க்கன் அவனுடன் சந்து செய்துகொண்டான்; தனது மகளான **ரேவா** என்பவளை அவனுக்கு மணம் செய்வித்தான். இந்த மணவுறவால் பல்லவன் தனது பெருநாட்டின் வட எல்லையைப் பற்றிய கவலை இல்லாமல் நாட்டை ஆளத்தொடங்கினன். மல்லவனுக்கும் ரேவா என்பவளுக்கும் பிறந்த மகனுக்குத் **தந்திவர்மன்** என்று பெயரிடப்பட்டது.



காஞ்சி வைகுந்தப்பெருமாள் கோவில்

10. பல்லவ மல்லன் சிறந்த வைணவன் என்று செப்பேடுகள் செப்புகின்றன. இவனுக்கு முன் நாட்டை ஆண்ட இரண்டாம் பரமேசுவரன் காஞ்சியில் பெருமாள் கோவில் ஒன்றை எடுப்பித்தான். அது அவன் பெயரால் 'பரமேசுவர விண்ணகரம்' என்று வழங்கப்பெற்றது. நந்திவர்மன் அதனை விரிவாக்கினன்; தனக்கு முன் நாடாண்ட பல்லவர் கால நிகழ்ச்சிகளையும் தன்கால நிகழ்ச்சிகளையும் அக்கோவிற் சுவர்களில் சிற்பங்களாகச் செதுக்குவித்தான். அச்சிற்பங்கள் கோவில் திருச்சுற்றின் உட்புறச் சுவர்களில் காணப்படுகின்றன.

11. பரமேசுவர விண்ணகரம் என்னும் பெருமாள் கோவிலே இக்காலத்தில் வைகுந்தப்பெருமாள் கோவில் என்று வழங்கப்படுகிறது. வைகுந்தத்தில் திருமால் இலக்குமியுடன் ' இருந்த கோலம் ' கொண்டுள்ளார் என்று நூல்கள் கூறும். இக்கோவிலிலும் பெருமாள் அத் திருக்கோலத்திலேயே காட்சி அளிக்கிருர். பல்லவ மல்லன் காலத்தில் *திருமங்கையாழ்வார்* என்னும் வைணவப் பெரியார் காஞ்சியில் நெடுங்காலம் வாழ்ந்தார். அவர் பல்லவ மல்லனுடன் நெருங்கிப் பழகினுர்; பரமேசுவர விண்ணகரத்தின்மீது பல பாக்களைப் பாடினுர்; அவ்வாறே நந்திபுர விண்ணகரத்தில் உள்ள திருமாலின்மீதும் பாடல்கள் பாடியுள்ளார். அவர் பாக்களில் வயிரமேகன் என்னும் பெயர் காணப்படுகிறது.

12. பல்லவ மல்லனைப்பற்றிச் சில தமிழ்ப்பாடல்கள் காணப்படுகின்றன. அவற்றை நோக்க, அப்பெரு வேந்தன் தமிழ் மொழியினிடத்தும் தமிழ்ப்புலவரிடத்தும் பற்றுடையவன் என்பதை அறியலாம். அவன் பல கோவில்களுக்குப் பலவகை அறங்கள் செய்துள்ளான். அவனது ஆட்சியில் வடமொழிக் கல்வியும் தமிழ்க்கல்வியும் நன்கு வளர்ந்தன.

## அருஞ்சொற்பொருள்

தொண்டைநாடு – வடபெண்ணையாற்றிலிருந்து தென்பெண்ணையாறுவரை உள்ள தமிழகப்பகுதி தொண்டைநாடு எனப்பட்டது. மல்லன்-மற்போரில் வல்லவன். புறம் கண்டவன் - முறியடித்தவன், தோல்வியுறச் செய்தவன். இரணியம்-பொன். இறுமாந்து-செருக்குற்று. சந்து-சமாதானம். செப்பேடுகள்-அக்காலத்தில் செப்புத் தகடுகளில் எழுத்துக்களைப் பொறித்தல் வழக்கம். அவை ' தான பத்திரங்கள் ' முதலியன. பல்லவமல்லன் உதயசந்திரனுக்கும் மறையவர்க்கும் பல ஊர்களைத் தானமாகக் கொடுத்தான். அவற்றைத் தெரிவிப்பனவே இங்குச் செப்பேடுகள் எனப்பட்டன. விண்ணகரம்-பெருமாள் கோவில். திருச்சுற்று-பிராகாரம். திருமாலுக்கு மூன்று கோலங்கள் இருக்கின்றன; அவை நின்ற கோலம், இருந்த கோலம், கிடந்த கோலம் என்பவை. திருமால் திருப்பதியில் நின்ற கோலத்தில் உள்ளார்; வைகுந்தத்தில் இருந்த கோலத்தில் உள்ளார்; பாற்கடலில் கிடந்த கோலத்தில் உள்ளார். திருமால் நிற்கின்ற

நிலை-நின்றகோலம்; உட்கார்ந்திருக்கும் நிலை-இருந்தகோலம்; படுத்திருக்கும் நிலை-கிடந்தகோலம். ஆழ்வார்-வைணவ அடியார். இவர் பன்னிருவர். இவருள் ஒருவரே திருமங்கை ஆழ்வார். பல்லவ மல்லனைப்பற்றிய தமிழ்ப் பாடல்கள் யாப்பருங்கல விருத்தியுரையில் காணப்படுகின்றன.

## கேள்விகள்

1. முதலாம் நரசிம்மவர்மன் சிறப்புக்கள் யாவை?
2. முதலாம் பரமேசுவரவர்மனைப்பற்றி யாது அறிவாய்?
3. பல்லவமல்லன் எங்ஙனம் அரசனானான்?
4. பல்லவன்-பாண்டியன் போர் எங்ஙனம் தொடங்கியது? எவ்வாறு முடிந்தது?
5. பல்லவன்-சாளுக்கியன் போரைப்பற்றி யாது அறிவாய்?
6. பல்லவன்-தந்திதுர்க்கன் போர் எங்ஙனம் நடந்தது?
7. பரமேசுவர விண்ணகரத்தின் சிறப்பு யாது?

## பயிற்சி

1. குறிப்பு எழுதுக :— இரண்டாம் நரசிம்மவர்மன், முதலாம் மகேந்திரவர்மன், உதயசந்திரன், திருமங்கை ஆழ்வார், தந்திவர்மன்.

2. சேர்த்துக் கூறுக :— தலைநகராய்+கொண்டு, மிக+சிறந்த, கடல்+படை, கோட்டையை+கட்டினான், திடீரென+தாக்கினான், ஆள+தொடங்கினான்.

3. 'தஞ்சாவூர்' - 'தஞ்சை' என்று மருவி வழங்குகிறது. 'நாகப்பட்டினம்' - 'நாகை' என்று மருவி வழங்குகிறது. இவ்வாறே 'மகாமல்லன்' என்பது 'மாமல்லன்' என்று வழங்குகிறது; 'மகாமல்லபுரம்' என்பது, 'மாமல்லபுரம்' எனவும், 'மாமல்லை' எனவும், 'மல்லை' எனவும் வழங்கலாயிற்று. இவ்வாறு வழங்கும் வேறு சில ஊர்களின் பெயர்களைக் கூறுக.

4. பல்லவ மல்லன் போர்ச் செயல்களை விளக்கி ஒரு கட்டுரை வரைக.

5. (1) வேலன்—இது ஒருவித மாறுதலும் இல்லாத பெயர். இது முதல் வேற்றுமை எனப்படும்.

(2) வேலனை—(வேலன்+ஐ)—ஐ இரண்டாம் வேற்றுமை

(3) வேலனால்—(வேலன்+ஆல்)—மூன்றாம் வேற்றுமை
வேலனோடு—(வேலன்+ஓடு)— ,, ,,
வேலனுடன்—(வேலன்+உடன்)— ,, ,,

(4) வேலனுக்கு—(வேலன்+கு)—நான்காம் வேற்றுமை

இவ்வாறு ஒரு பெயரின் பொருளை வேறுபடுத்துவது வேற்றுமை எனப்படும். இங்கு வந்துள்ள ஐ, ஆல், ஓடு, உடன், கு என்பன வேற்றுமை உருபுகள் எனப்படும்.

இப்பாடத்தில் வந்துள்ள வேற்றுமை உருபுகளைச் சுட்டுக.

# 12. சிறிய கைத்தொழில்கள்



1. செங்கற்பட்டு மாவட்டத்தில் ***செம்பாக்கம்*** என்பது ஒரு சிற்றூர். அச்சிற்றூரில் ***வேலாயி*** என்று ஒருத்தி வாழ்ந்துவந்தாள். அவள் கணவன் ஒரு நெசவாளி. வேலாயிக்கு ஆண்பிள்ளைகள் இருவர் இருந்தனர். அவ்விருவரும் மூன்றும் வகுப்பிலும் இரண்டாம் வகுப்பிலும் படித்துவந்தனர்.

2. கணவனது வருவாய் குடும்பத்திற்குப் போதவில்லை. அதனால் வேலாயி தானும் தறிவேலை செய்யக் கற்றுக்கொண்டாள். சமையல் வேலைக்குரிய நேரம்போக எஞ்சிய நேரங்களில் தார் திரித்தல், அச்சுப் பிணைத்தல், அணுவாக்குதல், தறியில் அமர்ந்து ஆடை நெய்தல் முதலிய பல வேலைகளைச் செய்துவந்தாள் ; இத்தொழில்களால் மாதம் ஏறத்தாழ முப்பது ரூபாய் சம்பாதிக்கத் தொடங்கினாள்.

3. சில ஆண்டுகள் கழிந்தன. பெரிய பையன் ஏழாம் வகுப்புத் தேறினான் ; அடுத்த பையன் ஆறும் வகுப்புத் தேறினான். அந்த ஆண்டு விடுமுறையில் வேலாயியின் கணவன் நோய்வாய்ப்பட்டு இறந்தான். வேலாயி, கடல் கொந்தளிப்பில் அகப்பட்ட மரக்கலம் போலத் திகைத்தாள் ; "பெரிய பையனைச் செங்கற்பட்டு உயர்நிலைப் பள்ளியில் சேர்க்க விரும்பினேன் ; பிள்ளைகள் இருவரும் படித்து உயர்நிலைக்கு வரவேண்டும் என்று எண்ணினேன். வெண்ணெய் திரண்டு வரும்போது தாழி உடைந்தாற் போலப் பிள்ளைகள் மேல் வகுப்புக்களுக்குப் போகும் சமயத்தில் என் கணவர் இறந்துவிட்டாரே!"

என்று மிகுந்த கவலைப்பட்டாள். தங்கள் எதிர்கால வாழ்வு என்ன ஆகுமோ என்று பிள்ளைகள் அஞ்சினர்.

4. வேலாயி அறிவு நுட்பம் வாய்ந்தவள். அவள் தன் மக்களை அணைத்து, "மக்காள், தந்தை இல்லையென்று கவலைப்படவேண்டா. நான் எப்பாடு பட்டாயினும் உங்களைப் படிக்கவைப்பேன். நீங்கள் படித்து முன்னுக்கு வாருங்கள்," என்று ஆறுதல் கூறினாள். அன்றே அவள் தன் வீட்டின்மீது ஐந்நூறு ரூபாய் கடன் வாங்கினாள்; அதனைக்கொண்டு நான்கு பசுக்களை வாங்கினாள்; அச்சிற்றூரில் பால் வாணிகம் தொடங்கினாள்; பாலில் தண்ணீர் கலக்காமல் விற்கத் தொடங்கினாள். அதனால் பலரும் அவளிடம் பால் வாங்கலாயினர்.

5. வேலாயி காலை மாலைகளில் பால் கறப்பாள்; உணவு சமைப்பாள்; எஞ்சிய நேரங்களில் தறி வேலை செய்வாள். இவற்றால் அவள் மாதம் ஏறத்தாழ அறுபது ரூபாய்க்கு மேல் சம்பாதித்தாள்; அவளது இரண்டாம் மகன் தன் ஓய்வு நேரங்களில் தாயின் வேலைகளுக்கு உதவியாக இருந்தான். கிராமத் தலைவர் பரிவுரைமீது மூத்தமகன் செங்கற்பட்டு உயர்நிலைப் பள்ளியில் சம்பள உதவியும் உணவு உதவியும் பெற்றான். அடுத்த ஆண்டு இரண்டாம் மகனும் செங்கற்பட்டு உயர்நிலைப் பள்ளியில் எட்டாம் வகுப்பிற் சேர்ந்தான்.

6. வேலாயியின் கணவன் இறந்து ஐந்து ஆண்டுகள் முடிந்தன. மூத்த மகன் தான் படித்த செம்பாக்கம் பள்ளியிலேயே ஆசிரியனாய் அமர்ந்தான். அடுத்த ஆண்டு அவனது தம்பியும் அப்பள்ளிக்கே ஆசிரியனாய் வந்தான். இரண்டாண்டுகளில் கடன் முழுமையும் தீர்க்கப்பட்டது; மேலும் நான்கு பசுக்கள் வாங்கப்பட்டன. இரண்டு பிள்ளைகளும் தறிவேலையைக் கற்றுக்கொண்டனர். முயன்றால் முடியாதது இல்லை அன்றோ?

7. பிள்ளைகள் இருவரும் தாயின் சொற்படி நடந்தனர்; பள்ளி நேரம் போக எஞ்சிய நேரங்களில் பால்

வாணிகத்தையும் நெசவு வேலையையும் கவனித்தனர்; தாங்கள் நெய்வதோடு வேறு சிலரையும் கூலிக்கு அமர்த்திக்கொண்டனர். இத்தகைய இடைவிடா உழைப்பால் சில ஆண்டுகளுள் அவர்களது செல்வநிலை உயர்ந்தது. வீட்டுக்குப் பக்கத்தில் இருந்த பெரிய காலிமனை ஒன்று வாங்கப்பட்டது; அங்குப் பன்னிரண்டு பசுக்களைக் கொண்டு பால் வாணிகம் தொடங்கப்பட்டது.

8. பிள்ளைகள் இருவரும் ஆசிரியர் தொழிலோடு நின்றிருந்தால், அவர்தம் செல்வநிலை உயராது. அவர்கள் பால் வாணிகத்திலும் நெசவுத்தொழிலிலும் இறங்கியதால் தான் அவர்தம் செல்வநிலை உயரத் தொடங்கியது. ஒவ்வொருவரும் இயல்பான தொழிலுடன் ஒரு சிறு கைத் தொழிலையும் செய்யத் தெரிந்திருப்பது மிகவும் தேவையாகும் என்பது இதனால் தெரிகிறதன்றோ?

9. தஞ்சை மாவட்டத்தில் **தேரழுந்தூர்** என்னும் சிற்றூர் காவிரிக்கரையில் அமைந்துள்ளது. அவ்வூரில் அழகப்பன் என்பவர் ஓர் ஆசிரியர். அவர் மனைவி **வள்ளியம்மை** என்பவள். அவர்களுக்குப் பிள்ளைகள் இருவர் இருந்தனர். அழகப்பர் தொடக்க நிலைப்பள்ளி ஆசிரியர். அவரது வருவாய் குடும்பத்திற்குப் போதவில்லை. அதனால் வள்ளியம்மை அப்பளம் தயாரித்து விற்கத் தொடங்கினாள். அவள் பலரைப்போல் உளுந்துடன் அரிசிமாவைக் கலந்து அப்பளம் தயாரிக்கவில்லை; உளுந்தைக் கொண்டே அப்பளம் தயாரித்தாள். நமது வீட்டிற்குப் பயன்படுத்த நாம் எவ்வளவு கவலை எடுத்துக்கொண்டு தயாரிப்போமோ அவ்வளவு கவலை எடுத்துக்கொண்டு அந்த அம்மை அப்பளம் தயாரித்தாள்.

10. அவ்வம்மை நன்முறையில் தயாரித்த அப்பளம், அப்பளப்பூ ஆகியவை மிக்க சுவையுடன் இருந்தன. அதனால் நாளடைவில் அவளது வாணிகம் வளர்பிறை போல வளர்ச்சியடையத் தொடங்கியது; கடைகளுக்குப் போடும் அளவில் அப்பள வாணிகம் வளர்ந்துவிட்டது. அதனால் அந்த அம்மை ஏழைப் பெண்மணிகள் சிலரை

வேலைக்கு அமர்த்தித் தனது தொழிலை விரிவாக்கினாள். ஆசிரியர் அப்பளக் கட்டுக்களைக் கடைகளுக்குக் கொண்டு செல்வார்; அவற்றுக்குரிய பணம் வசூலிப்பார்.

11. இங்ஙனம் ஐந்து ஆண்டுகள் கடந்தன. அவர் களது தொழில் நல்லவர் நட்பைப் போல நாளும் வளர்ந் தது. அக்குடும்பத்தில் வறுமை இருந்த இடம் தெரியாமல் மறைந்தது. உண்மையான உழைப்பை மேற்கொள்ளும் எவரும் வாழ்வில் தாழ்வுற்றதில்லை. மக்களை ஏய்த்து விரைவில் செல்வராக வேண்டும் என்று எண்ணும் பேராசைக்காரரே தொழிலில் வீழ்ச்சியடைவர். இந்த உண்மையை வள்ளியம்மை நன்கு அறிந்திருந்தாள். அதனால் அவளது தொழில் படிப்படியாக உயர்ந்து விரிந்தது. அழகப்பரது ஆசிரியத் தொழில்மட்டும் அவர் குடும்பத்தின் பொருளாதார நிலையை உயர்த்த வில்லை. வள்ளியம்மை மேற்கொண்ட சிறிய கைத் தொழில்தான் அக்குடும்பத்தின் பொருளாதார நிலையை உயர்த்தியது.

12. கெடிலம் என்னும் ஆறு தென் ஆர்க்காடு மாவட் டத்தில் பாய்கிறது. அதன் கரையில் **செல்லங்குப்பம்** என்னும் ஓர் ஊர் இருக்கிறது. அவ்வூரில் எல்லப்பன் என்னும் வேளாளன் ஒருவன் தன் மனைவியோடு வாழ்ந்து வந்தான். எல்லப்பன், ஊரார் நிலத்தைக் குத்தகைக்கு எடுத்துப் பயிர் செய்துவந்தான். அவன் மனைவி ***பொன்னி*** என்பவள். அவள் ஐந்தாம் வகுப்பு வரையில் படித்தவள். அவள் சுறுசுறுப்பு மிக்கவள்; தன் ஓய்வு நேரங்களில் தையல் வேலையைக் கற்றுக்கொண்டாள்; ஊறுகாய் போடுவதிலும் திறமை பெற்று விளங்கினாள்.

13. அவளது சுறுசுறுப்பைக் கண்ட கணவன் அவளுக்கு ஒரு தையல் இயந்திரத்தை வாங்கிக் கொடுத் தான். பொன்னி முதலில் தன் தெருவிலிருந்த பெண் களுக்குத் தேவையான துணிகளைத் தைத்துக் கொடுத் தாள். அவளது வேலை ஒழுங்காக இருந்த காரணத்தால் பக்கத்துத் தெருக்களில் இருந்த பெண்களும் அவளுக்கு

வேலை கொடுக்க முன்வந்தனர். ஏழைப் பெண்கள் சிலர் அவரிடம் வேலை கற்கவும் தொடங்கினர். பொன்னியின் வருவாய் வரவர வளர்ந்தது. பொன்னிக்குப் பெண் குழந்தை பிறந்து ஐந்து ஆண்டுகள் ஆயின. கணவனது வருவாயிலும் மனைவியின் வருவாயிலும் அக்குடும்பம் செழித்தது.

14. மகிழ்ச்சி நிலைத்திருப்பதில்லை அல்லவா ? பொன்னியின் கணவன் நோய்வாய்ப்பட்டு இறந்தான். பொன்னி தன்னையும் தன் பெண் குழந்தையையும் காக்க வேண்டியவளானாள்.

"கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்
கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்"

என்னும் நாமக்கல் கவிஞரது பாடல் அவள் நினைவுக்கு வந்தது. அவள் முகம் மலர்ந்தது ; ஊக்கத்துடன் தன் கைத்தொழிலில் இறங்கினாள். ஊராரும் அவளிடம் இரக்கம் கொண்டு மிகுந்த வேலையைக் கொடுத்தனர். அவள், தன்னிடம் வேலையைக் கற்றுக்கொண்ட ஏழைப் பெண்களை உடன் வைத்துக்கொண்டு தையல் தொழிலைத் திறம்பட நடத்தினாள் ; தன் குழந்தையைப் பள்ளியில் படிக்க அனுப்பினாள்.

15. பத்தாண்டுகள் கடந்தன. அவளது செல்வமகள் பத்தாம் வகுப்பில் தேர்ச்சியுற்றாள். அவள் படிக்கும் பொழுதே தன் தாயுடன் தையல் தொழிலையும் கற்றுத்தேர்ந்தாள். ஆதலால் படித்த அப்பெண் வேலையைத் தேடி அலையாமல் தையற்கடை ஒன்றை வைத்தாள். பெண்கள் தையற்கடையை வைத்துத் திறம்பட நடத்துவதை ஊரார் கண்டு மகிழ்ந்தனர் ; "தையல் தொழில் எல்லப்பன் குடும்பத்தைக் காப்பாற்றுகிறது ; ஏழைப் பெண்களுக்கும் வாழ்வளிக்கிறது" என்று பேசி மகிழ்ந்தனர்.

### அருஞ்சொற்பொருள்

மரக்கலம்-கப்பல். தாழி-தயிர் கடையும் மட்பாத்திரம். பரிவுரை-சிபாரிசு. நாமக்கல் கவிஞர்-நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை. இவர் நாட்டுப்பற்று மிக்கவர் ; சிறந்த கவிஞர்.

## கேள்விகள்

1. வேலாயி தன் பிள்ளைகளை எவ்வாறு படிப்பித்தாள் ?
2. பிள்ளைகள் படித்த பின்பு வேலாயியின் பொருளாதார நிலை எவ்வாறு உயர்ந்தது ?
3. வள்ளியம்மை தன் குடும்பப் பொருளாதாரத்தை எவ்வாறு உயர்த்தினாள் ?
4. பொன்னி தன்னையும் தன்மகளையும் எவ்வாறு உயர்நிலைக்குக் கொணர்ந்தாள் ?
5. நீ இப்பாடத்தால் அறியும் படிப்பினை யாது ?

## பயிற்சி

1. கீழ்வருவனவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக :— வரவர, படிப்படியாக, வருவாய், உயர்நிலை, தயாரிப்பு, இரக்கம்.

2. இப்பாடத்தில் வந்திருக்கும் உவமைகளை எடுத்துக் காட்டி, அவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறுக.

3. சிறிய கைத்தொழில்கள் எளிய குடும்பங்களை எவ்வாறு வாழ்விக்கின்றன என்பதை விளக்கி முப்பது வரிகளுள் ஒரு கட்டுரை எழுதுக.

4. உனது ஊரில் நடைபெறும் சிறிய கைத்தொழில்களைக் குறிப்பிட்டு, அவை எவ்வாறு பல குடும்பங்களை வாழ்விக்கின்றன என்பதை விளக்கி ஒரு கட்டுரை வரைக.

5. (1) கல்வியில் பெரியவர் கம்பர் — (கல்வி + இல்)
— ஐந்தாம் வேற்றுமை
மலையின் வீழ் அருவி — (மலை + இன்)
— ஐந்தாம் வேற்றுமை
வீட்டினின்று வந்தான் — (வீட்டின் + நின்று)
— ஐந்தாம் வேற்றுமை
பெட்டியிலிருந்து எடுத்தான் — (பெட்டியில் + இருந்து)
— ஐந்தாம் வேற்றுமை

(2) முருகனது பெட்டி — (முருகன் + அது)
— ஆறும் வேற்றுமை
முருகனுடைய பெட்டிகள் (முருகன் + உடைய)
— ஆறும் வேற்றுமை

இவ்வாறு பெயர்ப்பொருளை வேறுபடுத்தும் உருபுகள் வேற்றுமை உருபுகள் எனப்படும்.

இல், இன், நின்று, இருந்து, அது, உடைய என்பவை வேற்றுமை உருபுகள்.

இப்பாடத்தில் வந்துள்ள இவ்வேற்றுமை உருபுகளைச் சுட்டுக.

# 13. மைசூர் நாடு


1. மைசூரைத் தலைநகராகக்கொண்ட இந்த நாடு அண்மைக் காலம்வரையில் அரசமரபினரால் ஆளப்பட்டு வந்தது; இப்பொழுது கன்னடமொழி பேசும் மக்கள் அனைவரையும் கொண்ட ஒரு மாநிலமாக மாறியுள்ளது. இந்நாடு மலைவளமும் காட்டுவளமும் நீர்வளமும் பொருந்தியிருப்பது. தென்னிந்தியாவிற்குச் செழிப்பைத் தரும் காவிரி, வடபெண்ணை, தென்பெண்ணை, பாலாறு, துங்கா முதலிய ஆறுகள் இந்நாட்டிலிருந்தே பிற பகுதிகளுக்குப் பாய்கின்றன.

2. இந்நாட்டில் அடர்ந்த காடுகள் மிக்குள்ளன. அக்காடுகளில் மிக்க மதிப்புடைய தேக்கமரங்களும் சந்தனமரங்களும் நன்கு வளர்கின்றன. அக்காடுகளில் யானைகள் மிகுதியாக உள்ளன. மைசூர் நாட்டில் தென்னந்தோப்புக்களும் கமுகந்தோப்புக்களும் முந்திரித் தோப்புக்களும் மாஞ்சோலைகளும் பலவாகும். மலைச்சரிவுகளிலும் மலைகளின்மீதும் காப்பி நன்கு பயிராகின்றது. ஆற்றுப் பாய்ச்சல் உள்ள இடங்களில் நெல், கரும்பு முதலியன பயிராகின்றன. நீர்வளம் குறைந்த இடங்களில் துவரை, பயறு, உளுந்து, பருத்தி, எள், கொள்ளு முதலியன பயிர் செய்யப்படுகின்றன.

3. இந்நாட்டில் யானைத் தந்தம் மிகுதியாகக் கிடைக்கிறது. ஆதலால் தந்தம் கொண்டு பல பொருள்கள் செய்யப்படுகின்றன. சந்தனமரங்களைக்கொண்டு சோப்புச் செய்யப்படுகிறது. காடுகள் மிக்கிருத்தலால் மரங்களைக் கொண்டு பல பொருள்கள் செய்யப்படுகின்றன. பஞ்சாலைகளும் இங்கு இருக்கின்றன.

4. மைசூர் நாட்டில் சமயத் தொடர்பான இடங்களும் வரலாற்றுத் தொடர்பான இடங்களும் இயற்கை அழகு சிறந்த இடங்களும் பல உண்டு. அவற்றுள் சிலவற்றைப்பற்றி இங்கு அறியலாம்:

*சிருங்கேரி* என்பது சமயச் சிறப்புடைய இடமாகும். அது மலைகளாலும் காடுகளாலும் சூழப்பெற்றது; புனித ஆறு என்று கருதப்படும் 'துங்கா' என்னும் ஆறு பாயப் பெற்றது. கி. பி. எட்டாம் நூற்றுண்டில் வாழ்ந்த *சங்கரர்* என்னும் சமய குரவர் அங்குக் கலைமகள் கோவிலையும் மடத்தையும் நிறுவினுர்; அவ்வூரின் நாற்புறமும் உள்ள மலைகளின்மீது காலபைரவர், அநுமான், துர்க்கை, காளி ஆகிய நால்வருக்கும் கோவில்களைக் கட்டினுர்.



கோமட்டேசுவரர் சிலை


5. சிருங்கேரி மடத்தில் துறவிகளும் மாணவரும் இருக்கின்றனர். வடமொழிக் கல்லூரி ஒன்று அங்கு நடை பெறுகின்றது. அங்கு விருந்தினர் மாளிகை ஒன்று உண்டு. அங்கு எவர் வரினும் உணவு வழங்கப்படும். ஒவ்வொரு நாளும் ஏறத்தாழ இருநூற்றுவர் அங்கு உணவு கொள்ளு கின்றனர். அங்குள்ள வித்தியாசங்கரர் கோவில் கோபுரத்

தில் வாழும் ஆயிரக்கணக்கான புறாக்களுக்கு நாள் தோறும் அரிசி வழங்கப்படுகிறது; ஆற்றில் வாழும் மீன் களுக்கு நாளும் சோறு வழங்கப்படுகிறது. மடத்தில் உள்ள நூல் நிலையம் காணத்தக்கது. அங்குப் பனை ஓலை ஏடுகள் மிக்குள்ளன. சிருங்கேரி அமைதி நிறைந்த இடம்; இயற்கை எழில் மிக்குள்ள இடம். அதனைக் காண்பவர் உள்ளம் அமைதி பெறும் என்பதில் ஐயமில்லை.

6. *பேலூர், அலபீடு, சிரவணபெள்கொளா* என்னும் இடங்களில் உள்ள சிற்பங்கள் கண்ணையும் கருத்தை யும் ஈர்ப்பவை. பேலூர்ப் பெருமாள் கோவிற் சுவர்களில் உள்ள திருமாலின் பத்து அவதார நிகழ்ச்சிகளைக் குறிக்கும் சிற்பங்களும் மகாபாரத நிகழ்ச்சிகளைக் குறிக்கும் சிற்பங் களும் மிக வுயர்ந்த வேலைப்பாடு கொண்டவை. அலபிட் என்னும் ஊரிலுள்ள கேதாரேசுவரர் கோவிலும் ஒய்ச ளேசுவரர் கோவிலும் கட்டடக் கலைக்குப் பெயர் பெற்றவை. இக்கோவில் வேலைத் திறனைப்பற்றி மேனாட்டு அறிஞர் பலர் வியந்து பாராட்டியுள்ளனர். சமணர்க்கு மிகச் சிறந்த இடமான சிரவணபெள்கொளாவில் ஐம்பத் தெட்டு அடி உயரமுள்ள சிலை ஒன்று இருக்கிறது. அது சமணத் துறவியாரான கோமட்டேசுவரர் சிலையாகும். கல்லில் செதுக்கப்பட்ட அச்சிலையின் வேலைப்பாட்டைக் கண்டு வியவாதவர் இல்லை.

7. சராவதி என்னும் ஆறு மைசூர் நாட்டில் தோன்றி மேற்குத் தொடர்ச்சி மலையைக் கடந்து அரபிக் கடலில் கலக்கின்றது. அது மேற்குத் தொடர்ச்சி மலையில் 'ஜோக்' என்னும் இடத்தில் அருவியாக விழுகிறது. அதனால் அது *ஜோக் அருவி* என்று பெயர் பெற்றுள்ளது. அவ்யாறு மலையிலிருந்து நான்கு அருவிகளாக விழுகின் றது. அவற்றுள் ஒன்று 830 அடி ஆழத்தில் விழுகிறது. ஜோக் அருவியைச் சுற்றியுள்ள இயற்கைக் காட்சிகளைப் பற்றியும் அருவியின் ஓசையைப்பற்றியும் அது உண்டாக் கும் எண்ணங்களைப்பற்றியும் மேனாட்டு அறிஞர் தங்கள் கருத்துக்களை எழுதியுள்ளனர்.

8. மைசூர் நாட்டின் கிழக்கு எல்லைக்கு அருகில் காவிரி இரண்டாகப் பிரிந்து *சிவசமுத்திரம்* என்னும் தீவை உண்டாக்கி, மலையிலிருந்து இரண்டு அருவிகளாக விழுகின்றது. காவிரியின் மேற்குக் கிளை ககனசுகி என்றும்,



சிவசமுத்திர மின்சார நிலையம்

கிழக்குக் கிளை பார்சுகி என்றும் பெயர் பெறும். இவை இரண்டும் ஏறத்தாழ இருநூறு அடி உயரத்திலிருந்து பெருத்த ஓசையுடன் கீழே விழுகின்றன. இயற்கை

அன்னை கொலு வீற்றிருக்கும் இடமாக இவ்வருவிகளைச் சுற்றியுள்ள இடம் அமைந்துள்ளது. இந்த அருவியின் ஆற்றலைக்கொண்டு மின்சாரம் தோற்றுவிக்கப்படுகிறது.

9. ***பத்திராவதி*** என்பது சிறந்த தொழிற்சாலை நகரம். அங்கு இரும்புத் தொழிற்சாலையும் சிமெண்டுத் தொழிற்சாலையும் காகிதத் தொழிற்சாலையும் இருக்கின்றன. பத்திராவதியிலுள்ள இரும்புத் தொழிற்சாலையில் உயர்தர இரும்புப் பொருள்கள் செய்யப்படுகின்றன. ***கோலாரி*** லுள்ள ***தங்க வயல்கள்*** உலகப் புகழ் பெற்றவை. அங்குள்ள தங்கச் சுரங்கங்கள் நிலமட்டத்திலிருந்து ஏறத்



மலைமீது நந்தி

தாழப் பத்தாயிரம் அடி வரையில் ஆழமுள்ளவை. நாளும் நூற்றுக்கணக்கான தொழிலாளர் சுரங்கங்களின் அடியிலிருந்து வெடி வைத்து மண்ணோடு கலந்திருக்கும் தங்கத்தை எடுக்கின்றனர். அந்த முயற்சியில் இக்கால விஞ்ஞான சாதனங்கள் யாவும் உதவுகின்றன. நிலமட்டத்திலிருந்து கீழே செல்வதற்கு மின்சார 'தூக்கி' உள்ளது. சுரங்கத்தில் பல எந்திரங்கள் வேலை செய்கின்

றன. பாலாற்று நீர் தங்க வயல்களுக்கு மிகுதியாகப் பயன்படுகிறது.


10. சென்னை மாநிலத்தில் கோடைக்கானல், உதக மண்டலம், குன்னூர் ஆகிய மலை நகரங்கள் அமைந் திருத்தல் போல மைசூர் நாட்டிலும் **நந்திமலையின்மீது** ஒரு நகரம் புதிதாக அமைந்துள்ளது. அம்மலையின் உயரம் ஏறத்தாழ நாலாயிரம் அடி ஆகும். மலைமீது யோக நந்தீசு வரர் கோவில் ஒன்று இருக்கின்றது. மலை அடிவாரத்தில் உள்ள நந்தி என்னும் சிற்றூரில் போகநந்தீசுவரர் கோவில் இருக்கின்றது. இவ்விரு கோவில்களும் பல நூற்றாண்டு களாக இருந்து வருகின்றன. இவை கட்டடக் கலைக்குப் பெயர் பெற்றவை.

11. **பங்களூர்** மைசூர் நாட்டில் மிகச் சிறந்த நகர மாகும். இந்நகரம் பஞ்சாலைகளுக்கும் பல தொழிற்சாலை களுக்கும் பெயர் பெற்றது. உலகப் புகழ் பெற்ற விஞ்ஞானி யாயுள்ள சர் சி. வி. இராமன் என்பவரது ஆராய்ச்சிக் கூடம் இந்நகரில்தான் இருக்கின்றது. இந்நகரத்தில் இலால்பாக் என்னும் பூங்கா மிகப் பெரியது; கண்டு மகிழத்தக்கது.

12. மைசூர் நாட்டுத் தலைநகரமான **மைசூர்** நகரம் மிக்க அழகுடையது; சுகாதார வசதி உயர்ந்த முறையில் அமையப்பெற்றது. அங்குள்ள அரசரது அரண்மனை அழ குக்கே இருப்பிடமானது. மைசூரை ஆண்ட அரசர்கள் சேர்த்துவைத்துள்ள பலவகைப் பொருள்கள் உள்ளத் தைக் கொள்ளை கொள்பவை ஆகும். ஓவியங்களும் சிற்பங் களும் களிப்பை ஊட்டுவன. அங்குள்ள உயிர்க் காட்சிச் சாலை கண்டு மகிழத்தகுவது. ஆண்டுதோறும் மைசூரில் நவராத்திரி விழா பெருஞ் சிறப்புடன் நடைபெறும். மக்கள் இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் அதனைக் காண வருவர்.


13. மைசூருக்கு வடக்கில் ஏறத்தாழப் பன்னிரண்டு கல் தொலையில் **கண்ணம்பாடி** என்னும் இடத்தில் காவிரி யாற்றின் குறுக்கே பெரிய அணை ஒன்று கட்டப்பட்டிருக்

கிறது. அந்த அணையினால் தேக்கப்படும் நீர் நிலையின் பெயர் கிருஷ்ணராஜ சாகரம் என்பது. அந்த அணைக்குக் கீழ்ப் பகுதியில் கண்ணைக் கவரும் பிருந்தாவனம் என்னும்



மைசூர் அரண்மனை

இன்பப் பூங்கா ஒன்று காட்சியளிக்கின்றது. அதன் பரப்பு ஏறத்தாழ இருபது ஏக்கராகும். அந்த இடத்தில் பசுமை உமிழும் செடிகளும் கொடிகளும் பயிராக்கப்பட்டுள்ளன.



பிருந்தாவனத்தில் ஒரு காட்சி (மைசூர்)

பச்சைக் கம்பளம் விரித்தாற் போன்றுள்ள புல்வெளி கண்ணுக்குக் குளிர்ச்சியைத் தருகின்றது. நீர்த் தேக்கத்

தில் இருபது அடி உயரத்திலிருந்து வெளிப்படும் நீர், பல நிற விளக்குகளால் அணி செய்யப்பட்ட ஒரு பந்தலின் கீழ் விழுந்து, ஒரு கால்வாயாகப் பாய்கின்றது; வழியில் பல நீரூற்றுக்களின் வழியாகப் பாய்ந்து ஆற்றில் கலக்கிறது; இராக்காலங்களில் பிருந்தாவனம் பல நிற விளக்குகளைக் கொண்டு கண்கொள்ளாக் காட்சியை நல்குகின்றது.

## அருஞ்சொற்பொருள்

குரவர் - ஆசிரியர். குறவர் - மலைச்சாதியினர். சிரவண பெள் கொளா - சமணர்க்கு உரிய வெள்ளைக் குளம் என்பது இதன் பொருள். ஈர்ப்பவை - இழுப்பவை. அலபீடு - ஹலபீடு (Halebid) = பழைய வீடு. ஒய்சளேசுவரர் - ஹொய்சளேசுவரர். ஜோக் - Jog. தூக்கி - Lift.

## கேள்விகள்

1. மைசூர் நாட்டில் பாய்கின்ற பெரிய ஆறுகள் யாவை?
2. மைசூரில் சிறப்பாக நடைபெறும் தொழில்கள் யாவை?
3. சிருங்கேரியைப்பற்றி யாது அறிவாய்?
4. சிற்பங்களுக்குப் பெயர்பெற்ற ஊர்கள் யாவை?
5. மைசூர் நாட்டு அருவிகள் யாவை?
6. பத்திராவதி சிறந்த தொழிற்சாலை நகரம் என்பது எவ்வாறு பொருந்தும்?
7. கோலார் தங்கவயல்களைப்பற்றி யாது அறிவாய்?
8. மைசூர் நகரத்தின் சிறப்பியல்புகள் யாவை?

## பயிற்சி

1. சேர்த்துக் கூறுக:—அண்மை + காலம், செழிப்பை + தரும், அ + காடு, ஆறு + பாய்ச்சல், அங்கு + கலைமகள், காண + தக்கது, ஐம்பது + எட்டு, வேலைப்பாடு + ஐ, நாடு + தலைநகர்.

2. பிரித்துக் காட்டுக:—பயிராகின்றது, மதிப்புடைய, கோவிற் சுவர், சமணத்துறவி, மலையிலிருந்து, தொழிற்சாலை, நிலமட்டம், கலந்திருக்கும், கட்டடக்கலை, காட்சிச்சாலை, பெருஞ்சிறப்பு.

3. "மைசூர் நாட்டில் காணத்தகும் இடங்கள்" என்னும் தலைப்பில் நாற்பது வரிகளுள் ஒரு கட்டுரை எழுதுக.

4. நீ பார்த்த ஒரு நகரத்தைப்பற்றி முப்பது வரிகளுள் ஒரு கட்டுரை வரைக.

5. (அ) வீட்டில் பெட்டி இருக்கிறது.—(வீடு + இல்)
—ஏழாம் வேற்றுமை.

வீட்டின்கண் திருடர் நுழைந்தனர்—(வீடு + கண்)
—ஏழாம் வேற்றுமை.

அவனிடம் பணம் இருக்கிறது—(அவன் + இடம்)
—ஏழாம் வேற்றுமை

இவற்றை நினைவில் வை :—

(ஆ) (1) முருகன்—முதல் வேற்றுமை.

(2) ஐ—இரண்டாம் வேற்றுமை உருபு.

(3) ஆல், ஒடு, உடன்—மூன்ரும் வேற்றுமை உருபுகள்.

(4) கு—நான்காம் வேற்றுமை உருபு.

(5) இல், இன், நின்று, இருந்து—ஐந்தாம் வேற்றுமை உருபுகள்.

(6) அது, உடைய—ஆரும் வேற்றுமை உருப்புகள்.

(7) இல், கண், இடம்—ஏழாம் வேற்றுமை உருபுகள்.

## 14. அறிவியல் அறிஞர் மார்க்கோனி

1. தாமஸ் ஆல்வா எடிசன் என்பவர் சிறந்த அறிவியல் அறிஞர். அவர் அமெரிக்க நாட்டவர். அப்பெரியார் தமது இடைவிடா ஆராய்ச்சியால் மின்விளக்குகளையும் மின் விசிறிகளையும் இசைத்தட்டுகளையும் அவற்றை இயக்கும் இயந்திரத்தையும் பல்வேறு புதிய கருவிகளையும் கண்டறிந்து புகழ் பெற்றவர். இங்ஙனம் அறிவியல் துறையில் உலகிற்குப் பயன்பட்ட பெரியோர் பலராவர். அவருள் வானொலி கண்ட *மார்க்கோனி* என்பவர் ஒருவர்.

2. மார்க்கோனியின் முழுப்பெயர் ***குக்லியல்மோ மார்க்கோனி*** என்பது. இவர் இத்தாலி நாட்டினர். இவர் செல்வக் குடும்பத்தில் பிறந்தவர். இவர் போலோனு என்னும் நகரில் 1874ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் 24ஆம் நாளில் தோன்றினர். இவர் தந்தையார் பெயர் சினேர் மார்க்கோனி என்பது. மார்க்கோனிக்கு மூத்தவர் பெயர் ஆல்போன்சு என்பதாம். இவருடைய அன்னையார் நன்கு படித்தவர்; இசைப்பயிற்சி மிக்கவர்; சிறந்த ஒழுக்கமுடையவர். அவர் தம் மக்களைக் கண்ணும் கருத்துமாய் வளர்த்துவந்தார்; அவர்களுக்குத் தாமே கல்வி கற்பித்தார்; இசைப் பயிற்சியையும் அளித்தார்; பலநாட்டுப் பெருமக்களுடைய வரலாறுகளை அவ்வப்போது கூறி வந்தார்.

3. மார்க்கோனி பள்ளிப்படிப்பை விரும்பவில்லை. இவர் தம் வீட்டின் பின்புறத்திலிருந்த திராட்சைத் தோட்டத்தில் அமர்ந்து இயற்கைப் பொருள்களை ஆய்ந்துவந்தார்; கள்ளிப்பழங்களைப் பிழிந்து எடுத்த சாற்றைக் கொண்டு எழுதிப் பார்த்தார். இவர் இங்ஙனம் ஒவ்வொரு பொருளையும் ஆராயத்தொடங்கினர். இவர் விவிலியநூல், கிரேக்கநாட்டு வரலாறு, புதுமை கண்ட பெருமக்களின் வரலாறுகள், அறிவியல் கட்டுரைகள் ஆகியவற்றை விரும்பிப் படித்தார்; " யான் எப்பாடு பட்

டாயினும் உலகம் போற்றத்தகும் புதுமை ஒன்றைக் கண்டறிதல் வேண்டும்,” என்று தம்முள் அடிக்கடி கூறிக் கொண்டார்.

4. மார்க்கோனி தாமஸ் ஆல்வா எடிசனுடைய ஆராய்ச்சிகள்பற்றிய கட்டுரைகளைப் படித்தார்; தந்திக் கலையில் வல்ல பெரியார் ஒருவருடன் நட்புக்கொண்டார்; தந்தியடிக்கும்கலையை அவர்பால் கற்றறிந்தார்; மின் ஆற்றலைப்பற்றியும் அவரிடம் கேட்டறிந்தார். அன்னையார் மார்க்கோனியின் போக்கை நன்கு அறிந்தார்; அவருக்கு வீட்டின் மாடியில் ஒரு பகுதியை உதவினார்; அப்பகுதியிலிருந்து ஆராய்ச்சிகள் நிகழ்த்த இசைவு அளித்தார்; “மகனே, பொறுமையுடன் ஆராய்ச்சி செய்; முயன்றால் முடியாதது இல்லை” என்று அடிக்கடி ஊக்கி வந்தார்.



மார்க்கோனி

5. மார்க்கோனி இத்தாலிநாட்டை அடுத்த ஆல்ப்ஸ் மலைப்பகுதிக்கு அண்மையில் சிறிதுகாலம் தங்கியிருந்தார். அப்போது அவருக்கு வயது இருபது. அவர் அங்கே இருந்தபொழுது, ஒரு செய்தித்தாளில் அறிவியல் கட்டுரை ஒன்றைப் பார்த்தார். செருமானியநாட்டு அறிவியல் அறிஞர் ஒருவர் அதனை எழுதியிருந்தார். ‘வானவெளியில் ஆற்றல் மிக்க ஈர்ப்பு அலைகள் பரந்துள்ளன. அவ்வலைகள் ஒளிக்கதிர் அலைகளைப் போலக் கண்களைத் தாக்குவன அல்ல என்பதே அக்கட்டுரையின் சுருக்கம்.

6. வானவெளியில் ஆற்றல் மிக்க ஈர்ப்பு அலைகள் நிறைந்திருத்தல் கூடும் என்று மார்க்கோனி முன்னரே எண்ணியிருந்தார்; அக்கட்டுரையைப் படித்ததும் தாம்

எண்ணியது சரி என்பதை உணர்ந்தார்; அந்த ஈர்ப்பு அலைகளின் வழியாகச் செய்திகளை அனுப்புதல் கூடுமோ என்பதை ஆராயவேண்டும் என்று துணிந்தார்; ஒலி அலைகளை உண்டாக்கி, தந்தியின் மூலம் செய்திகளை அனுப்புதற்குரிய கருவியால் நெடுந்தொலைவிலுள்ள இடங்களுக்கும் செய்திகளை அனுப்பக்கூடும் என்று நம்பினார். அவர் அன்று முதல் அவ்வாராய்ச்சியில் ஈடு பட்டார்.

7. கேம்பிரிட்சுப் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவர் ஒரு கட்டுரை வரைந்தார்; 'மின் காந்த அலைகள் நம் பார்வைக்குப் புலப்படா. ஆயினும் அவை விண்ணில் நிரம்பியுள்ளன. அவை ஒரு மணித்துளிக்கு ஓர் இலட்சத்து எண்பத்து ஆறுயிரம் கல் தொலைவு விரைவில் செல்லுகின்றன,' என்பதை அக்கட்டுரையில் வெளியிட்டிருந்தார். இச்செய்தியை அடிப்படையாகக்கொண்டு செருமானிய நாட்டைச் சேர்ந்த எர்ட்ஸ் என்னும் அறிவியல் அறிஞர் பல ஆராய்ச்சிகளை நிகழ்த்தினர்; மின் பொறி எத்திசையிலும் செல்லும் ஆற்றல் உடையது என்னும் உண்மையைக் கண்டறிந்தார். மார்க்கோனி இந்த அறிஞர்களின் ஆராய்ச்சி முடிவுகளை நன்கு அறிந்தார்; அம்முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு தமது ஆராய்ச்சியை நிகழ்த்தலானர்.

8. மார்க்கோனி பல மாதங்கள் ஆய்ந்து ஆய்ந்து மின் விசைப் பொறியை உண்டாக்கும் வழிகளைக் கண்டறிந்தார்; இறுதியில் **ஒலி வாங்கிக் கருவி** ஒன்றைச் செய்து முடித்தார். **ஒலி அனுப்பும் கருவியையும்** செய்து முடித்தார்; ஒரு நாள் தம் முன்னேரான ஆல்போன்சைச் சிறிது தொலைவில் இருக்கும்படி கூறினர்; தாம் அமைத்த ஒலிவாங்கிக் கருவியை அவரிடம் வைத்தார்; தாம் இருந்த இடத்திலிருந்தே ஒலியை எழுப்பினர். அவ்வொலி அவர் தமையனுருக்கு நன்கு கேட்டது. தமது முயற்சி பயனளித்ததைக் கண்டு அவர் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லை இல்லை.

9. பின்பு மார்க்கோனி தம் வீட்டுக்கு அருகிலிருந்த மலையின் ஒரு பக்கத்தில் ஒலி அனுப்பும் கருவியை அமைத்தார்; அம்மலையின் மற்றொரு பக்கத்தில் ஒலி வாங்கும் கருவியை அமைத்தார்; தம் தமையனாரை ஒலிவாங்கும் கருவியின் பக்கத்தில் இருக்கச் செய்தார்; அவர் கையில் ஒரு துப்பாக்கியைக் கொடுத்தார்; தாம் அனுப்பும் ஒலி கேட்கிறது என்பதற்கு அறிகுறியாக ஒவ்வொரு முறையும் அத்துப்பாக்கியிலிருந்து வேட்டு எழுப்புமாறு வேண்டினார்; பின்பு மார்க்கோனி ஒலியனுப்பும் கருவியின் வாயிலாகச் செய்திகளை அனுப்பலானார். தமையனார் ஒவ்வொரு செய்திக்கும் வேட்டு எழுப்பிக்கொண்டே இருந்தார். இச்சோதனை மார்க்கோனிக்கு மட்டற்ற மகிழ்ச்சி அளித்தது. மார்க்கோனி ஒலி கேட்கும் தொலைவினை மிகுதிப்படுத்தினார்: அதற்கு ஏற்ப ஏரியலின் நீளத்தையும் படிப்படியாக மிகுதிப்படுத்திவந்தார். அவர் இவ்வாறு பல சோதனைகளைச் செய்து சிறந்த கருவிகளைச் செய்து முடித்தார்.

10. மார்க்கோனி நாட்டுப்பற்று உடையவர். தாம் கண்டறிந்த புதுமையை முதலில் தம் நாட்டிற்கு உரிமையாக்க விரும்பினார். ஆயின், இத்தாலிய அரசாங்கம் அவரை மதிக்கவில்லை; பொதுமக்களும் பொருட்படுத்தவில்லை. மார்க்கோனியின் அன்னையார் தம் மைந்தருக்கு ஆறுதல் கூறினார். அவ்வம்மையார் ஆராய்ச்சிக் கருவிகளோடு தம் மைந்தரை இங்கிலாந்துக்கு அழைத்துச் சென்றார்; தமக்குத் தெரிந்த பெரியோர்களுக்குத் தம் மைந்தரை அறிமுகப்படுத்தினார். அதன் பயனாகத் தொள்ளாயிரம் அடிகள் உயரம்கொண்ட அஞ்சல் நிலையக் கட்டடம் ஒன்றில் மார்க்கோனி தம் சோதனையை நிகழ்த்திக் காட்டினார்.

11. மார்க்கோனி கப்பல் அதிகாரிகளின் முன்னிலையில் தம் ஆராய்ச்சியை வெற்றியுடன் நிகழ்த்தினார்; பின்பு எட்டுக்கல் தொலைவுக்கு அப்பால் செய்தியை அனுப்பிக் காட்டினார். இவ்வியத்தகு சாதனையைக் கண்ட ஆங்கி

லேயர் இவரைப் பாராட்டினர். ஆங்கிலச் செய்தித்தாள்கள் இவரது சாதனையை வியந்து பாராட்டின. இச்செய்தி இத்தாலிநாட்டுக்கு எட்டியது. இத்தாலிநாட்டு மன்னரும் அறிவியல் அறிஞர்களும் மார்க்கோனிக்கு அழைப்பு விடுத்தனர். தாய்நாடு மீண்ட மார்க்கோனி தாம் கண்டறிந்த புதுமையை நிகழ்த்திக் காட்டினர்.

12. மார்க்கோனி இங்கிலாந்தில் ஒரு தொழிற்சாலையை நிறுவினர்; அங்குக் கம்பியில்லாத் தந்திக் கருவிகளைச் செய்ய முற்பட்டார்; மேலும் மேலும் ஆராய்ந்து சிறந்த கருவிகளை அமைத்தார்; உலகமே வியக்கும்படி அட்லாண்டிக் பெருங்கடலுக்கு அப்பால் செய்திகளை அனுப்புவதில் வெற்றிகண்டார். அவ்வரிய சாதனையைக் கண்டு உலகமே வியப்பில் ஆழ்ந்தது. அமெரிக்க அறிவியல் அறிஞரான தாமஸ் ஆல்வா எடிசனே மார்க்கோனியின் ஆராய்ச்சியைப் பாராட்டினர். உலகப் பெரும் பரிசாகிய '**நோபெல் பரிசு**' மார்க்கோனிக்குக் கிடைத்தது. இத்தாலிய அரசாங்கமும் ஆங்கில அரசாங்கமும் இவருக்குப் பட்டங்களை வழங்கின. இங்ஙனம் மார்க்கோனியும் உழைப்பால் உலகம் போற்றும் அறிவியல் அறிஞரானர். நாளும் வானொலி கேட்கும் நாமும் இப்பெரியாரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம் அல்லவா?*

### அருஞ்சொற்பொருள்

அறிவியல் - விஞ்ஞானம். அறிவியல் அறிஞர் - விஞ்ஞானி. விவிலிய நூல் - கிறித்துவ சமயநூல். நிகழ்த்த - நடத்த. இசைவு - சம்மதம். ஈர்ப்பு அலைகள் - இழுக்கும் அலைகள். பரந்துள்ளன - பரவியுள்ளன. கேம்பிரிட்சு - Cambridge. மணித்துளி - விநாடி. ஆய்ந்து ஆய்ந்து - அடுக்குத் தொடர். ஆய்ந்து - ஆராய்ந்து. பொறி - கருவி. அறிகுறி - அடையாளம். வாயிலாக - வழியாக. படிப்படியாக - இரட்டைக் கிளவி. வியத்தகு - ஆச்சரியப்படத்தக்க. உலகம் - உலகத்தவர். நோபெல் பரிசு - எட்டாயிரம் பவுன் மதிப்புள்ளது; சுவீடன் நாட்டு நோபெல் என்னும் பெரியாரால் ஏற்படுத்தப்பட்ட பரிசு.

---

* இப்பெரியார் 20-7-1937-இல் காலமானர்.

## கேள்விகள்

1. தாமஸ் ஆல்வா எடிசன் கண்டறிந்த புதுமைகள் யாவை?
2. மார்க்கோனி பிள்ளைப்பருவத்திலேயே ஆராய்ச்சியில் ஆர்வமுள்ளவர் என்பது எவ்வாறு தெரிகிறது?
3. மார்க்கோனியின் ஆராய்ச்சிக்கு அடிப்படையாக அமைந்தவை யாவை?
4. மார்க்கோனி எதனில் எங்ஙனம் வெற்றி கண்டார்?
5. மார்க்கோனி இங்கிலாந்தில் எங்கெங்குச் சோதனைகள் நிகழ்த்தினர்?
6. எடிசன் மார்க்கோனியைப் புகழக் காரணம் யாது?

## பயிற்சி

1. கீழ்வருவனவற்றை உச்சரித்துப் பொருள் கூறுக:—துரை—துறை, பரந்து—பறந்து, அரி—அறி, ஒலி—ஒளி—ஒழி, பல்லன்—பள்ளன், உயர்ச்சி—முயற்சி.

2. சேர்த்துக் கூறுக:—சாறு+ஐ, வயிறு+ஐ, கற்று+அறிந்தார், இசை+பயிற்சி, நெடுமை+தொலைவு, அ+முடிவு, துப்பாக்கியை+கொடு, நாடு+கு.

3. பிரித்துக் காட்டுக:—இசைத்தட்டு, அவ்வப்போது, இயற்கைப்பொருள், பெருமக்கள், தந்தியடிக்கும், ஈர்ப்பலைகள், வானவெளி, இச்செய்தி, மற்றொரு.


4. மார்க்கோனியே இப்பாடச் செய்தியைக் கூறுவதுபோலக் கூறுக.

5. எட்டாம் வேற்றுமைவிளி வேற்றுமை எனப்படும்; அதாவது, படர்க்கை இடத்துப் பொருளைத் தன்முகமாக அழைப்பது.

| முதல் வேற்றுமை | எட்டாம் வேற்றுமை |
|---|---|
| (1) அரசன் | அரச |
| (2) மகன் | மகனே |
| (3) தம்பி | தம்பி |
| (4) மக்கள் | மக்காள் |
| (5) அப்பன் | அப்பா |

# 15. இளைஞர் இயக்கங்கள்

1. ஒரு சமயத்தைச் சேர்ந்த இளைஞர்கள் ஒன்று கூடிப் பழகவும் பொழுதுபோக்கவும், கல்வி கற்கவும் **இளைஞர் இயக்கம்** முதலில் தோன்றியது. அங்ஙனம் தோன்றிய முதல் கழகம் **கிறித்துவ இளைஞர் கழகம்** ஆகும். அது **ஜார்ஜ் வில்லியம்** என்ற இளைஞரால் கி.பி. 1844இல் இலண்டன் மாநகரில் நிறுவப்பட்டது. கிறித்துவ சமயத்தின் அடிப்படையில் தொடங்கப்பெற்ற இக் கழகம், இன்று எல்லா நாடுகளிலும் பரவியுள்ளது. காலப்போக்கில் இக்கழகம் பிற சமயங்களைச் சேர்ந்த இளைஞர்களையும் கூட்டு உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொண்டது.



கிறித்துவ இளைஞர் கழகக் கட்டடம்
(Y. M. C. A., Madras).

2. கிறித்துவர் மிக்குள்ள ஒவ்வொருபெரிய நகரத்திலும் இக்கழகம் இருக்கின்றது. இக்கழகம் கல்வி, சமயப் பணி, சமூக முன்னேற்றம் ஆகிய மூன்று துறைகளிலும் இளைஞர்களைப் பழக்குகிறது; அவர்களுக்குத் தேவையான உடற்பயிற்சி விளையாட்டுக்களிலும் அவர்களை ஊக்குவிக்கிறது. இக்கழகக் கட்டடத்தில் நூல்நிலையம், படிப்பகம், சொற்பொழிவு மன்றம், உடற்பயிற்சிக் கூடம், உணவு விடுதி, விளையாட்டுக்குரிய இடங்கள் என்பன அமைந்துள்ளன. சென்னை போன்ற பெரிய நகரங்களில் உள்ள கழகக் கட்டடத்தில் இளைஞர்கள் நிலையாகத் தங்கியிருக்கவும், சில நாள் தங்கியிருக்கவும் பல அறைகள் உண்டு.


3. சென்னையில் உள்ள கிறித்துவ இளைஞர் கழகக் கட்டடம் சட்டக் கல்லூரிக்கு எதிரில் நான்கு அடுக்கு களுடன் திகழ்கிறது. முதல் அடுக்கில் உணவகமும் விளை யாடும் வெளியும் சிறப்பாக அமைந்துள்ளன. இரண்டாம் அடுக்கில் சொற்பொழிவு மன்றம் மிகப்பெரிய அளவில் விளங்குகின்றது. அவ்வடுக்கில் நூலகமும் படிப்பகமும் இருக்கின்றன. மூன்றும் அடுக்கிலும் நான்காம் அடுக் கிலும் உறுப்பினரும் பிறஊர்களிலிருந்து வருவோரும் தங்கத்தகும் அறைகள் உள்ளன. இளைஞர் காலை மாலை களில் அங்கு உடற்பயிற்சி செய்கின்றனர்; படிப்பகத்தில் வரும் பலவகைச் செய்தித்தாள்களைப் படிக்கின்றனர்; நூலகத்தில் இருந்து நூல்களைப் படிக்கின்றனர்.

4. பல நாடுகளிலிருந்து சென்னைக்கு வரும் அரசியல் தலைவர்கள், விஞ்ஞான மேதைகள் முதலிய பலதுறை அறிஞர்களும் அவ்வப்போது சொற்பொழிவு மன்றத்தில் சொற்பொழிவு ஆற்றுகின்றனர். அச்சொற்பொழிவுகள் இளைஞர்க்கேயன்றி முதியவர்க்கும் அறிவுவளர்ச்சியை உண்டாக்குகின்றன. பலதுறை அறிஞர்களின் சொற் பொழிவுகளைக் கேட்பதால் இளைஞர்கள் பலதுறை அறிவைப் பெறுகின்றனர். இங்ஙனம் அறிவு வளமும் மனவளமும் உடல் வளமும் பெறக் கிறித்துவ இளைஞர் கழகம் பெருந்துணை புரிகின்றது என்று கூறலாம். இங்ஙனமே ***இந்திய இளைஞர் கழகம்*** என்பதும் ஓரளவு பணி புரிகின்றது.

5. ***கிறித்துவப் பெண்கள் கழகம்*** என்பதும் கிறித்துவ இளைஞர் கழகத்தைப் போலவே எல்லாநாடு களிலும் நிறுவப்பட்டுள்ளது. அது பிற சமயத்தைச் சேர்ந்த பெண்களுக்கும் பயன்படுகிறது. அது சென்னையில் பூந்தமல்லிப் பெருவழியில் அமைந் துள்ளது. அக்கட்டடத்திற்கு முன்பு மிகப்பரந்த வெளி இருக்கிறது. கழக உறுப்பினராய் உள்ள பெண்கள் காலை யிலும் மாலையிலும் அவ்வெளியில் பூப்பந்தாட்டம் முதலிய ஆட்டங்களை ஆடுகின்றனர்; அடிக்கடி அறிஞர்களை வர

வழைத்துச் சிறந்த சொற்பொழிவுகளைக் கேட்டுப் பயன் பெறுகின்றனர்; ஓய்வு நேரங்களில் கிறித்துவ இளைஞர்களைப்போலவே சமூகப்பணியில் ஈடுபடுகின்றனர்; விடுமுறை நாட்களில் இன்பச் செலவை மேற்கொள்கின்றனர்.

6. ***செஞ்சிலுவைச் சங்கம்*** என்பது இளைஞர் இயக்கங்களுள் ஒன்றாகும். இச்சங்கம் போர்க்களத்தில் புண்பட்ட வீரர்களுக்கு மருந்து முதலியவற்றை உதவுவதற்காகவே முதலில் தோற்றுவிக்கப்பட்டது. இதனைத் தோற்றுவித்த பெரியார் ***ஹென்றி டுனண்ட்**** என்பவர். அவர் சுவிட்சர்லாந்து செல்வநிலைய முதலாளி. அவர்



செஞ்சிலுவைச் சங்கத்தார் தொண்டு


1859இல் இத்தாலியில் நடைபெற்ற கடும்போரைக் கண்ணுற்றவர்; அப்போரில் புண்பட்ட வீரரைக் கண்டு துடித்தவர்; அவர்களுக்கு நீர் கொடுத்தும் புண்களுக்கு மருந்திட்டுக் கட்டியும் உதவி செய்தவர்.

7. ஹென்றி டுனண்ட் தமது செல்வநிலைய வேலையை விட்டுச் செஞ்சிலுவைச் சங்கத்தைத் தோற்றுவித்தார்; அவரது இடைவிடா உழைப்பால் பல நாடுகளிலும் செஞ்சிலுவைச் சங்கம் தோன்றலாயிற்று. செஞ்சிலுவைச் சங்கம் அருளை அடிப்படையாகக் கொண்டது. அது போர்புரியும் இரு திறத்தாருக்கும் உதவி செய்கிறது; போர்க்களத்தில் புண்படுவோர்க்கும் சிறைப்படும் வீரர்க்கும் மருத்துவ வசதி அளிக்கிறது. இச்சங்கம் போர்

* Henry Dunant

இல்லாத காலங்களில் நாட்டு மக்களது சுகாதாரத்தைப் பேணுதல், கொடிய நோய்களைத் தடுத்தல், எதிர்பாராத விபத்துக்களால் துன்புறும் மக்களது துயரைப் போக்குதல் என்னும் மூன்று துறைகளிலும் அமைதியாகப் பணியாற்றி வருகிறது.

8. இச்சங்கத்தில் சேர்ந்துள்ள இளைஞர்கள் சாதி, சமய வேறுபாடுகளை மறந்துவிடுவர்; எந்நாட்டவர்க்கும் உதவுவதற்கு முந்துவர்; 'எல்லோரும் இறைவன் மக்கள், மக்கள் தொண்டே இறைவன் தொண்டு' என்னும் உண்மையை உணர்வர்; எல்லோரிடத்திலும் இனிய முகத்துடன் பேசிப்பழகுவர்; பிறர்க்குத் தொண்டு செய்



திருவிழாவில் சாரணர் உதவி

வதிலேயே பேரின்பத்தைக் காண்பர்; உள்ளத் தூய்மையுடன் உடல் தூய்மையையும் உடைத் தூய்மையையும் கவனிப்பர். அந்நன்மக்கள் தாம் நடந்துசெல்லும் பாதையில் கிடக்கும் ஆணி, இலாடம், கண்ணாடித் துண்டுகள் முதலியவற்றை அகற்றுவர்.

9. இளைஞர் இயக்கங்களுள் ***சாரணர் இயக்கமும்*** ஒன்றாகும். சிறுவர்களை எதிர்காலத்தில் பொறுப்புள்ள குடி

மக்களாக்கவே சாரணர் இயக்கம் தோன்றியது. இதனைத் தோற்றுவித்தவர் *பேடன் பவல்பிரபு** என்பவர். அவர் ஒரு படைவீரராய் இருந்து ஓய்வு பெற்றவர். 'தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்பது முதுமொழி; ஆதலால் இளைஞர் உள்ளங்களில் நற்பண்புகளை ஊட்டினால், அவை அவர்கள் உள்ளங்களில் வேரூன்றித் தழைத்து, அவர்தம் வாழ்நாள் முழுமையும் அவர்களை நல்லவராகவே விளங்கச் செய்யும். இந்த உண்மையை அடிப்படையாகக் கொண்டே இந்த இயக்கம் உண்டாக்கப்பட்டது.

10. சாரணர் கடவுளிடமும், அறத்திடமும் மதிப்புடையவர்; பொறுப்புள்ள குடிமக்களாக விளங்குபவர்; எதனையும் கூர்ந்து நோக்கும் பயிற்சி உடையவர்; தந்நம்பிக்கை பெற்று விளங்குபவர்; பிறர்நலத்தைப் பேணுபவர்; சாதி சமய வேறுபாடுகள் அற்று நாடு நலம்பெற அனைவருடனும் சேர்ந்து தொண்டு புரிபவர்; தேவை உண்டாயின் பிறர் நலத்துக்காகத் தந்நலத்தை விட்டுக் கொடுப்பவர். 'எம்கடன் பணிசெய்து கிடப்பதே' என்பதுவே அவர்தம் கொள்கை.

### அருஞ்சொற்பொருள்

சமயம்-மதம். கிறித்துவ இளைஞர்கழகம்-Young Men's Christian Association, (Y. M. C. A.). கிறித்துவப்பெண்கள் கழகம் - Young Women's Christian Assosiation. (Y. W. C. A.). இந்திய இளைஞர் கழகம்-Young Men's Indian Association. (Y. M. I. A.). நிறுவப்பெற்றது-அமைக்கப்பட்டது. உணவகம்-உண்டிச்சாலை, உணவு விடுதி. மேதை-அறிஞன். செல்வநிலையம்-பாங்கு, (Bank). கண்ணுற்றார்-பார்த்தார். பேணுதல்-பாதுகாத்தல். பெருவழி-நெடுஞ்சாலை (High road). பணி-தொண்டு.

### கேள்விகள்

1. கிறித்துவ இளைஞர் கழகம் செய்யும் தொண்டுகள் யாவை ?
2. செஞ்சிலுவைச் சங்கம் தோன்றக் காரணம் என்ன ?
3. செஞ்சிலுவைச் சங்கம் செய்யும் பணிகள் யாவை ?
4. சாரணர் இயக்கம் தோன்றக் காரணம் யாது ?
5. சாரணர் எப்படி நாட்டுக்குகந்த நன்மக்களாகின்றனர் ?
6. இளைஞர் இயக்கங்களால் உண்டாகும் நலன்கள் யாவை ?

---

* Lord Baden Powell

## பயிற்சி

1. கீழ்வருவனவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறுக:— தேவை, சொற்பொழிவு, நூலகம், படிப்பகம், அடிப்படை, அமைதி, வேறுபாடு, நற்பண்புகள்.

2. எதிர்ச்சொல் கூறுக:— இளைஞர், பெரிய, காலை, பகல், பலவகை, பெருவழி, செல்வம், வேறுபாடு, முந்துவர், இன்பம்.

3. உங்கள் ஊரில் உள்ள கிறித்துவ இளைஞர் கழகப் பணிகள் பற்றி அல்லது வேறு இளைஞர் கழகப் பணிகள் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

4. சாரணர் இயக்கம்பற்றி ஒரு கட்டுரை வரைக.

5. (1) வந்தான்—செயல் நடந்ததைத் தெரிவிக்கும் வினைமுற்று. ஆதலால் இது உடன்பாட்டு வினைமுற்று எனப்படும்.

(2) வந்திலன்—இது செயல் நடவாமையைக் குறிக்கும் வினைமுற்று. ஆதலால் இது எதிர்மறை வினைமுற்று எனப்படும்.

(3)

| உடன்பாடு | எதிர்மறை |
|---|---|
| நடந்தாள் | நடந்திலள் |
| போவான் | போகான் |
| வருவார் | வாரார் |
| செய்க | செய்யற்க |
| வருக | வாரற்க |
| செய் | செய்யேல் |
| வா | வாரேல் |

இவற்றை நினைவிற் கொள்க.

# 16. ஆதித்த சோழன்

1. சிதம்பரத்திற்கு வடக்கே ஏறத்தாழ ஐந்து கல் தொலேவில் வெள்ளாறு என்னும் ஆறு பாய்கின்றது. இது வடவெள்ளாறு எனப்படும். புதுக்கோட்டைக்கு அருகில் வெள்ளாறு என்னும் பெயரில் மற்ருேர் ஆறு பாய்கின்றது. அது தென்வெள்ளாறு எனப்படுகிறது. இந்த இரண்டு ஆறுகட்கும் இடைப்பட்ட நிலப்பகுதியே சங்க காலத்தில் ***சோழநாடு*** எனப்பட்டது. ***சோழர்*** என்ற மரபரசர் சோழ நாட்டை வழிவழியாக ஆண்டுவந்தனர். சங்க காலச் சோழர் வளவர், கிள்ளி என்று பல பெயர்களைப் பெற்றிருந் தனர். சங்ககாலச் சோழருள் ***கரிகாலன்*** மிகச் சிறந்தவன்; பெருவீரன்; தனது ஆட்சியை வடக்கிலும் தெற்கிலும் விரிவாக்கியவன்.

2. ஏறத்தாழக் கி.பி. 300இல் பல்லவர் என்ற புதிய மரபினர் தொண்டை நாட்டையும் சோழநாட்டின் பெரும் பகுதியையும் கைப்பற்றி ஆளத் தொடங்கினர். அவர்கள் ஏறத்தாழக் கி. பி. 875 வரையிலும் தமிழகத்தில் வலிமை பெற்றிருந்தனர். அக்காலத்தில் சோழர் பல்லவர்க்கு அடங்கிய சிற்றரசராய் இருந்தனர். குடந்தையை அடுத் துள்ள ***பழையாறை*** என்னும் நகரம் அவர்தம் கோநகர மாகும். அப்பெரு நகரம் இன்று பல சிற்றூர்களாய் அழ கிழந்து காணப்படுகின்றது. சோழர் ஒருபால் பல்லவருட னும் மற்ருெருபால் பாண்டியருடனும் மணவுறவு கொண் டிருந்தனர்; சமயத்திற்கு ஏற்ருற்போல் அரசியல் வாழ்வை மேற்கொண்டிருந்தனர்; அதாவது, ஒரு சமயம் பல்லவ ரோடு சேர்ந்து பாண்டியரை எதிர்த்தனர்; மற்ருெரு சமயம் பாண்டியருடன் கூடிப் பல்லவரை எதிர்த்தனர்.

3. ஏறத்தாழக் கி. பி. 850இல் ***விசயாலயன்*** என்ற பெயர் கொண்ட சோழன் பழையாறையில் வாழ்ந்து வந்தான். அவன் மகன் ***ஆதித்த சோழன்*** என்பவன். தந்தையும் மகனும் சோழப் பெருநாட்டை அமைக்க ஆர்வம் கொண்டனர்; இரவும் பகலும் அதே எண்ணத்

தில் திளைத்தனர். அப்பொழுது சந்திரலேகா என்னும் ஊரைத் தலைநகராகக்கொண்டு தஞ்சை நாட்டை **முத்தரையன்** ஒருவன் ஆண்டுவந்தான். விசயாலயன் முத்தரையனைப் போரில் வென்று தஞ்சாவூரைக் கைப் பற்றினன்; அங்கு ஓர் அரண்மனையைக் கட்டினன்; தனது படையைப் படிப்படியாகப் பெருக்கலானன்.

4. ஆதித்த சோழன் இளவரசனானன். அவன் உயர்ந்த முறையில் போர்ப் பயிற்சி பெற்றான்; பெரும் படையைச் செலுத்தும் பேராண்மை பெற்றான். அவன் அரசியல் அறிவிலும் சிறந்து விளங்கினன்; பல்லவப் பெருநாட்டைக் கவரத்தக்க நேரத்தை எதிர்பார்த்திருந் தான். ஆயினும் அதே நேரத்தில் பல்லவ அரசனாய் இருந்த *அபராசிதவர்மனுடன்* நட்பு முறையில் பழகி னன். அபராசிதன் சிறந்த தமிழ்ப் புலவன்; பல கலைகளில் வல்லவன்; ஆயின், போர்ப் பயிற்சியில் பட்டறிவு மிகுதி யும் இல்லாதவன். அக்காலத்தில் இரண்டாம் *வரகுணன்* என்பவன் பாண்டிய நாட்டை ஆண்டுவந்தான். அவன் பல்லவ நாட்டைக் கவரத் திட்டமிட்டான்; ஒரு பெரும் படையுடன் பல்லவ நாட்டின்மீது பாய்ந்தான்.


5. அபராசிதன் இளைஞன். அதனல் அவனுக்கு உதவியாக அவனது பாட்டனை கங்க அரசன் *பிருதிவீ பதி* என்பவன் வந்தான். முத்தரையன் பாண்டியருடன் சேர்ந்துகொண்டான். ஆதித்த சோழன் பல்லவனுக்கு உதவியாகச் சென்றான். ஒருபால் பல்லவர் படை, கங்கர் படை, சோழர் படை ஆகிய மூன்றும் அணிவகுத்து நின் றிருந்தன. மற்றொருபால் பாண்டியர் படையும் முத்தரை யன் படையும் அணிவகுத்து இருந்தன. இவ்விருதிறப் படைகளும் *திருப்புறம்பயம்* என்னும் இடத்தில் போர் புரியத் தொடங்கின. திருப்புறம்பயம் குடந்தைக்கு வட மேற்கில் ஏறத்தாழ ஆறு கல் தொலைவில் உள்ளது. அவ் வூரின் வடக்கில் கொள்ளிடம் என்னும் பேரியாறும், தெற்கில் மண்ணியாறும் பாய்கின்றன. அவ்வூரில் ஒரு சிறந்த சிவன் கோவில் உள்ளது. அது அப்பர், சம்பந்தர், சுந்தரர் என்னும் மூவராலும் பாடப்பெற்ற சிறப்புடையது.

6. இத்தகைய சிறப்பு வாய்ந்த திருப்புறம்பயத்தில் பல்லவனுக்கும் பாண்டியனுக்கும் பெரும்போர் நிகழ்ந்தது. கரிகள் கரிகளை எதிர்த்தன; பரிகள் பரிகளைத் தாக்கின; வீரர் வீரரொடு போரிட்டனர்; கரிகள் துதிக்கைகளை இழந்து ஓலமிட்டன; பரிகள் கால்களை இழந்து கதறின; உறுப்பிழந்த வீரர்கள் கூக்குரலிட்டனர்; மாண்ட கரிகளின் மீதும் பரிகளின்மீதும் வீரர்கள் நின்று போரிட்டனர்; போர்க்களத்தில் குருதியாறு பெருக்கெடுத்தது. யாண்டும் பிணக்குவியல்கள் காணப்பட்டன. கழுகுகள் போர்க் களத்தை வட்டமிட்டன. ஆதித்த சோழன் வாளேந்திக் கடும்போர் புரிந்தான். வயது முதிர்ந்த பிருதிவீபதியும் முன்னணியில் நின்று போரிட்டான். பகைவர் விட்ட அம்பு பிருதிவீபதியின் மார்பைத் துளைத்தது. அதனால் அம்முதியவன் மண்ணில் விழுந்து மாண்டான்.

7. தன் பாட்டனை பிருதிவீபதி மடிந்ததைக் கண்ட அபராசிதன் தன்னை மறந்து போரிடலானான். மன்னனே முன்னின்று போர்புரிவதைக் கண்ட வீரர்களும் உள்ளக் கிளர்ச்சி கொண்டு தம்மை மறந்து போரிட்டனர். ஆதித் தன், யானைக் கூட்டத்துள் சிங்கம் பாய்வதுபோலப் பகைவர் கூட்டத்துள் பாய்ந்து கடும்போர் புரிந்தான். அவனைப் பின்பற்றிச் சோழர் படைவீரரும் கடும்போர் புரிந்தனர். எதிரிகளான பாண்டிய நாட்டு மறவர்கள் இளைத்தவர்களா? அவர்களும் உயிரைத் துரும்பாக மதித்துப் போரிட்டனர். வரகுண பாண்டியனும் வாள் வீசினான். போர் நெடுநேரம் கடுமையாகவே நடைபெற்றது. நேரம் செல்லச் செல்லப் பாண்டியர் படை நிலை தளர்ந்தது. முத்தரையன் ஓட்டம் பிடித்தான். பாண்டியன் படையில் வலிமை குறைந்துகொண்டே வந்தது. இறுதியில் வரகுண பாண்டியன் தோல்வியுற்று ஓடினான்.

8. அபராசிதன் அகமிக மகிழ்ந்தான்; தன்னுடன் சேர்ந்து கடும்போர் புரிந்து தனது வெற்றிக்கு உதவிய ஆதித்தனை மார்புறத் தழுவினான்; மகிழ்ச்சிக் கண்ணீர் பெருக்கினான்; அவனுக்குப் பல பரிசில்கள் ஈந்து சிறப்பித்

தான். ஆதித்தன் மட்டற்ற மகிழ்ச்சியோடு தஞ்சைக்கு மீண்டான். ஆதித்தன் தஞ்சையில் வாளா இருக்கவில்லை; தனது படையை மேலும் பெருக்கினான்; அதற்குத் தக்க




ஆதித்தன் காலத்துத் தமிழ்நாடு

பயிற்சி அளித்தான்; போர்க் கருவிகளைப் புதுப்பித்தான்; அக்காலத்திலும் பல்லவனுடன் நட்பு முறையிலேயே

பழகி வந்தான். பின்பு ஆதித்தன் திடீரென்று பல்லவ நாட்டின்மீது படையெடுத்தான்; அபராசிதனைக் கொன்று பல்லவ நாட்டைக் கைப்பற்றினான்.

9. சோழர் பல்லாயிரம் ஆண்டுகளாகச் சோழ நாட்டைத் தாமே ஆண்டுவந்தனர்; பல்லவர் நுழைவால் தம் அரசினை இழந்தனர்; ஏறத்தாழ ஆறு நூற்றாண்டுக ளாகத் தம் உரிமை இழந்து துன்புற்றனர். ஆதித்த சோழன் அத்துன்ப நிலையை அகற்றிவிட்டான். ஆதித்த சோழன் வழியினர் அவனைத் தங்கள் மரபில் தோன்றிய பெருவீரனாகக் கருதிப் பாராட்டினர். புலவர்களும் ஆதித் தன் வீரச் செயல்களைப் போற்றிப் புகழ்ந்தனர்.

10. ஆதித்த சோழன் தன் நாட்டைப் பெருக்கும் வேலையில் முனைந்தான். அவன் காலத்தில் இன்றைய மைசூர் நாடு கங்க நாடு எனப்பட்டது. தழைக்காடு என்பது அதன் தலைநகரம். அது காவிரியின் கரையில் உள்ளது. ஆதித்தன் கங்க நாட்டைக் கைப்பற்றினான். சேலம், கோயம்புத்தூர், நீலகிரி மாவட்டங்கள் சேர்ந்த நிலப் பகுதி கொங்கு நாடாகும். ஆதித்தன் அந்நாட்டை யும் தனது பெருநாட்டில் சேர்த்துக்கொண்டான். ஆதித் தன் காலத்தில் தாணுரவி என்பவன் சேர வேந்தனாகத் திகழ்ந்தான். அவன் ஆதித்தனுக்கு நண்பன். ஆதித்தன் தன் மகனை பராந்தகனுக்கு அவன் மகளை மணமுடித் தான். இந்த மண உறவால் சேரநாடு தன்னாட்சி பெற்று விளங்கியது. பின்பு ஆதித்தன் கிருஷ்ணையாறு வரையில் தனது நாட்டை விரிவாக்கினான்.

11. ஆதித்த சோழன் சிறந்த சிவபக்தன். அவன் காலத்தில் பாடல் பெற்ற கோவில்கள் செங்கல், சுண்ணும்பு, மண், மரம் முதலியவற்றால் கட்டப்பட்டவை. அவை அப்பர், சம்பந்தர் முதலிய சிவனடியார்களால் பாடப்பெற்ற சிறப்புடையவை. ஆகையால் அவை என்றும் அழியாமல் இருக்க வேண்டும் என்றும் தமிழ் மக்களது சமய உணர்ச்சிக்கு நிலைக்களங்களாக விளங்க வேண்டும் என்றும் ஆதித்தன் கருதினான். அதனால் அப்

பெருமகன் காவிரியின் இருகரைகளிலுமுள்ள கோவில்களைக் கற்றளிகளாக மாற்ற முற்பட்டான். அவன் மேற்கொண்ட முயற்சி அவன் காலத்தில் முற்றுப்பெறவில்லை; அவனுக்குப் பின் வந்த சோழப் பேரரசர் பலரும் அம்முயற்சியில் ஈடுபட்டு முற்றுவித்தார்கள்.

12. ஆதித்த சோழன் ஏறத்தாழக் கி.பி. 880 முதல் 907 வரையில் அரசனாய் விளங்கினான். அவன் காளத்திக்கு அருகில் தொண்டைமான் ஆற்றூர் என்னுமிடத்தில் இறந்தான். ஆதித்தன் மகனான *பராந்தகன்* தன் தந்தை இறந்த இடத்தில் ஒருகோவிலைக் கட்டினான். அது ஆதித்தேசுவரம் எனப் பெயர் பெற்றது. ஆதித்தனுக்குக் கோதண்டராமன் என்னும் பெயருமுண்டு. அதனால் அக்கோவில் 'கோதண்டராமேசுவரம்' என்றும் வழங்கப்பட்டது. பராந்தகன் அக்கோவிலில் பூசையும் விழாக்களும் நடைபெற ஏற்பாடு செய்தான்.

### அருஞ்சொற்பொருள்

ஆதித்தன்-சூரியன். வளவர்-வளமான நாட்டை உடையவர். கிள்ளி-நிலத்தைக் கிள்ளுபவர் (உழுபவர்). குடந்தை-கும்பகோணம். கோநகரம்-தலைநகரம். சந்திரலேகா-தஞ்சாவூர் மாவட்டத்தில் திருக்காட்டுப்பள்ளிக்கு அருகில் இருக்கும் செந்தலை என்னும் ஊர். முத்தரையர்-இவர்கள் தமிழ்ப்பற்று மிக்கவர்கள்; நாலடியார் என்னும் நூல் முத்தரையரைப் பாராட்டுகிறது. படிப்படியாக-இரட்டைக்கிளவி. பட்டறிவு-அநுபவம். கொள்ளிடம் - காவிரியிலிருந்து பிரியும் முதல் ஆறு. அப்பர்-திருநாவுக்கரசர். யாண்டும்-எங்கும். முன்னணி-முன்வரிசை. கடும்போர் - கடுமை + போர். செல்லச்செல்ல-அடுக்குத்தொடர். மட்டு-அளவு. மட்டற்ற-அளவற்ற. வாளா-வறிதே, வீணாக. வழியினர்-பரம்பரையில் வந்தவர். புலவர்கள்-சயங்கொண்டார் கலிங்கத்துப்பரணியிலும், ஒட்டக்கூத்தர் மூவருலாவிலும், சேக்கிழார் பெரியபுராணத்திலும் ஆதித்தனைப் பாராட்டியுள்ளனர். முனைந்தான்-முற்பட்டான். திகழ்ந்தான்-விளங்கினான். தன்னாட்சி-சுயஆட்சி. கற்றளி-கல் + தளி, கற்கோவில்.

### கேள்விகள்

1. சோழர்,பல்லவர் காலத்தில் எத்தகைய நிலையில் இருந்தனர்?
2. சோழன் விசயாலயனைப்பற்றி யாது அறிவாய்?

3. திருப்புறம்பயப் போரைப்பற்றிய விவரங்கள் யாவை ?

4. சோழப் பெருநாடு அமையத் திருப்புறம்பயப் போர் அடிப் படையாய் அமைந்தது என்பது எவ்வாறு பொருந்தும் ?

5. ஆதித்தன் எங்ஙனம் சோழப்பெருநாட்டை அமைத்தான் ?

## பயிற்சி

1. குறிப்பு வரைக :— பழையாறை, முத்தரையன், தாணுரவி, ஆதித்தேசுவரம்.

2. பின்வருவனவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறுக :— ஏறத்தாழ, மணவுறவு, இரவும் பகலும், படிப்படியாக, நட்புமுறை, செல்லச் செல்ல, பின்பற்றி.

3. ஆதித்தன் போர்ச் செயல்களை விளக்கி இருபத்தைந்து வரிகளுள் ஒரு கட்டுரை வரைக.

4. ஆதித்த சோழனே இப்பாடச் செய்தியைக் கூறுவது போலக் கூறுக.

5. (1) முருகன் வந்தான்.—வந்தான் என்பது முருகன் தானே செய்த வினை ஆதலால் தன்வினை எனப்படும்.

(2) முருகன் கந்தனை வருவித்தான்.—இங்கு, வருவித்தான் என்பது முருகன் கந்தனை வரும்படி செய்தான் என்பது பொருள். எனவே, வருவித்தான் என்பது பிறவினை எனப்படும்.

இவற்றை நினைவில் வை :—

| தன்வினை | பிறவினை | தன்வினை | பிறவினை |
|---|---|---|---|
| வா | வருவி | பாய் | பாய்ச்சு |
| நட | நடப்பி | உருள் | உருட்டு |
| படி | படிப்பி | நட | நடத்து |
| தா | தருவி | எழு | எழுப்பு |
| செய் | செய்வி | ஆடு | ஆட்டு |
| போ | போக்கு | திருந்து | திருத்து |


இப்பாடத்தில் வந்துள்ள தன்வினை, பிறவினைகளைக் கூறுக.

# 17. கிழக்கு ஆப்பிரிக்கா

1. ஆப்பிரிக்காவின் உட்பகுதியைக் கண்டு அதன் விவரங்களை அறியப் பாடுபட்ட ஐரோப்பிய அறிஞர் பலராவர். அவர்கள் உழைப்புக்குப் பின்னரே ஐரோப்பியர் ஆப்பிரிக்காவிற் குடியேறி, நாட்டைத் திருத்தி வாழலாயினர். அவர்கள் குடியேறி வாழக் காரணமாக இருந்தவருள் முதல் இடம் பெறத்தக்கவர் *டேவிட் லிவிங்ஸ்டன்* என்பவர். அடுத்துக் குறிப்பிடத் தக்கவர் *ஜோசப் தாம்ஸன்* என்னும் அறிஞராவர். அவர் ஐந்து முறை ஆப்பிரிக்காவினுள் சென்று அதன் உள்நாட்டுப் பகுதிகளை அறிந்து வெளியிட்டார். அவர் செலவுகளிற் குறிப்பிடத் தக்கது மூன்றும் செலவாகும். 1882வரை கிழக்கு ஆப்பிரிக்காவைப்பற்றி உலகத்திற்கு ஒன்றுமே தெரியா திருந்தது. சான்ஸிபார், மொம்பஸா என்னும் கிழக்குக் கரையில் உள்ள இடங்கட்கும் விக்டோரியா ஏரிக்கும் இடையில் உள்ள நிலப்பகுதியை நன்கு ஆராய்ந்து, கூடுமாயின், நீர்வீழ்ச்சிக்கு நேரான பாதை ஒன்றைக் கண்டு பிடிக்குமாறு இங்கிலாந்தில் இருந்த நில ஆராய்ச்சிக் கழகத்தார் தாம்ஸனை அனுப்பினர்.

2. தாம்ஸன் 1892இல் தமது முயற்சியை மேற்கொண்டார். அவருக்கு உதவியாக ஆங்கில வீரர் பதின்மர் சென்றனர்; அவருடைய உடை முதலியவற்றைச் சுமந்துகொண்டு கிழக்காப்பிரிக்கச் சுதேசிகள் நூற்றிருபதின்மர் அவருக்கு முன் வழிகாட்டிச் சென்றனர்; அந்த வேலையாட்களுட் பெரும்பகுதியினர் திருடர்கள்; புதியவரைத் துன்பத்திற் செலுத்தி அவர்தம் பொருள்களைக் கவர்ந்து செல்லும் இயல்பினர். ஆயினும் என் செய்வது? அவர்களைக் கொண்டே உள்நாட்டுச் செலவை எவரும் மேற்கொள்ள வேண்டியவர் ஆயினர். ஜோசப் தாம்ஸன் வாக்கு நயம் உடையவர்; மலர்ந்த முகத்தோற்றம் உள்ளவர்; பொறுக்க இயலாத துன்பநிலையிலும் பொறுமையைக் கையாள்பவர். ஆதலால் அவர் சுதேசிகளைப் பக்குவமாய் நடத்திவரலானார்.

3. தாம்ஸன் சான்ஸிபார் தீவை விட்டு ஆப்பிரிக்காவிற்குள் நுழைந்து சென்றார்; கரையோரப் பகுதியைக் கடந்ததும் அகன்ற பெரிய பொட்டல் நிலத்தைக் கண்டார். அங்குச் செடி கொடி இனங்கள் இல்லை; அருந்த நல்ல தண்ணீர் இல்லை; அப்பொட்டலைக் கடக்க அவர் அரும்




கிழக்கு ஆப்பிரிக்கா

பாடுபட்டார். அடுத்துப் பெரிய காடு ஒன்று காட்சி அளித்தது. அக்காட்டுப் பகுதியில் வானளாவிய மரங்களும் நீர்நிலைகளும் ஆங்காங்குச் சிற்றூர்களும் காணப்பட்டன. தாம்ஸன் அந்நிலப்பகுதியை மகிழ்ச்சியோடு

பார்த்துக்கொண்டே சென்று ஒரு மலைத்தொடரை அடைந் தார். அத்தொடரில் உள்ள குறிக்கத்தக்க கொடுமுடி *கிலி மஞ்சரோ* என்பது. அது வெப்பநிலப் பகுதியில் இருப்பினும், அதன் உச்சியில் பனிப்படலங்கள் தலைப் பாகை போலக் காட்சி அளித்தன.

4. அந்த மலைத்தொடரை அடுத்திருந்தது *மசைநாடு* என்பது. அந்நாட்டு மக்கள் கொலை, திருட்டு முதலியவற் றுக்கு அஞ்சாதவர். அவர்களைப்பற்றிப் பயங்கரமான கதை கள் கூறப்பட்டன. அவற்றைக் கேட்ட தாம்ஸன் புன்னகை புரிந்து அஞ்சா நெஞ்சினராய்த் தம் செலவை மேற்கொண் டார்; பல சிற்றூர்களைக் கடந்து சென்றார்; தம்மைத் தாக்கவந்த மக்களிடமிருந்து பக்குவமாய்த் தப்பித்துக் கொண்டு மேலும் செல்லலானார். அப்பொழுது அவர் சென்ற பகுதி மிக்க வெப்பமுள்ள நிலப்பகுதி ஆகும். செவ்வனே சமைக்கப்படாத உணவு, பலவகைப் பூச்சி களின் துன்பம், அமைதியுடன் தூங்க வசதியற்ற நிலைமை, காய்ச்சல் புழுக்களைக் கொண்ட கெட்ட நீர் முதலிய துன் பங்கட்கு இடையே அவரது செலவு தடையின்றி நடந்தது.

5. தாம்ஸன் ஒரு சிற்றூரில் தங்கியபொழுது அவ் வூரார் அவருடைய பொருள்களில் பலவற்றைக் கவர்ந்து சென்றனர். தாம்ஸன் பொறுமையோடு வழிநடக்கலானார்; நடந்து, ஒரு சிற்றூரை அடைந்தார்; அங்கு ஒருவன் தன் ஈட்டியால் தாம்ஸனைத் தாக்க முயன்றான். அவர் புன் முறுவலுடன் ஈட்டிக் குறியினின்றும் விலகி நின்றார்; மழை யில் நனைந்துகொண்டு அன்றிரவே அயலூருக்கு நடந்தார்.

6. தாம்ஸன் தம் செலவைத் தொடங்கி ஐந்து மாதங் கள் ஆயின. ஆயினும் அவர் *விக்டோரியா* ஏரியைக் கண்டறியவில்லை. அவர் பட்ட இன்னல்களோ பல. உணவுப் பொருள்களும் துணிமணிகளும் களவு போயின. ஆதலின், அவர் தம்முடன் வந்தவர்களை ஒரு கிராமத்தில் தங்கச்செய்து, மொம்பஸாவுக்குத் திரும்பினார்; பின்னர்

அங்கிருந்து புதிய போர்வீரரையும் நம்பத்தக்க சுதேசிகளையும் தமக்குத் தேவையான பொருள்களையும் சேர்த்துக் கொண்டு வந்து, பழைய ஆட்களுடன் கலந்துகொண்டார். அவர் மொம்பஸாவுக்குப் போய் மீள ஐந்து மாதங்கள் ஆயின.

7. அவரது புதிய செலவு 1893ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் தொடக்கமாயிற்று. அவர் வழியில் ஒரு காட்டில் தங்கியிருந்த பொழுது **காண்டா மிருகங்கள்** வந்து தாக்கின. அவை, அவருடன் வந்த கோவேறு கழுதைகளைக் கொன்றன; பெருங்குழப்பத்தை உண்டாக்கி விட்டன. தாம்ஸன் அவற்றின் தாக்குதலிலிருந்து தப்பியது அரிதாயிற்று. அவர் எஞ்சிய ஆட்களுடனும் கோவேறு கழுதைகளுடனும் வழி நடந்தபொழுது **காட்டு எருமைகள்** வந்து வளைத்துக்கொண்டன. அக்கொடிய விலங்குகள் தம் கொம்புகளால் கோவேறு கழுதைகளைத் தூக்கி வானத்தில் எறிந்தன; சுதேசிகள் சிலரைக் குத்திக் கொன்றன; தாம்ஸனும் ஆங்கில வீரரும் துப்பாக்கி வெடி தீர்த்துத் தங்களைக் காத்துக்கொண்டனர். அவர்கள் இவ்வாறு பல துன்பங்களை அடைந்து காட்டைக் கடந்தனர்; பாலைவனத்தை அடைந்தனர்; அங்கு ஒட்டைச் **சிவிங்கிகளும் வரிக்குதிரைகளும்** கூட்டம் கூட்டமாக இருந்ததைக் கண்டனர்.

8. பாலைவனத்துக்கு அப்பால் சுதேசிகள் வாழ்ந்த ஊர்கள் இருந்தன. தாம்ஸன் ஓர் ஊரிற் சென்று தங்கினார். அவ்வூர் மக்கள் தாம்ஸன் முதலியோரை வளைத்துக் கொண்டனர். அவரவர் தத்தமக்குத் தேவையான பொருள்களைத் தாம்ஸனைக் கேளாமல் அவர் எதிரிலேயே எடுக்கலாயினர். அவர் எல்லாப் பெட்டிகளையும் பூட்டிக் காவலரை நியமித்து ஓய்வு கொண்டார். இரவு முழுமையும் கொடிய விலங்குகளின் ஓசை கேட்ட வண்ணம் இருந்தது. மறுநாள் தாம்ஸன் முதலியவர் புறப்பட்டு நடக்கலாயினர். அவர்கள் மசை நாட்டைக் கடந்து, வ-கிகுயூ என்னும் இனத்தவர் வாழ்ந்த நாட்டை அடைந்தனர்.

அந்நாட்டு மக்கள் போர்வீரர் அல்லராயினும் திருடுவதில் சமர்த்தர் எனப் பெயர் பெற்றவர்.

9. தாம்ஸன் முதலியோர் அச்சுதேசிகள் ஊர் ஒன்றில் தங்கினர். அன்றிரவு அவர்களைச் சிங்கங்கள் தாக்கத் தொடங்கின. அவை சில கோவேறு கழுதைகளைக் கொன்றன. தப்பிப் பிழைத்த கோவேறு கழுதைகள் காட்டினுள் ஓடிவிட்டன. ஆங்கில வீரரும் சுதேசிகளும் மரங்களில் ஏறிக்கொண்டனர். அவர்கள் இருட்டில் சிங்கங்கள் என்று கருதித் தம் கோவேறு கழுதைகளையே சுட்டுக் கொன்றனர். வெடியோசை கேட்டவுடன் சிங்கங்கள் மறைந்தன.

10. இவ்வாறு பல இன்னல்களுக்கு இடையில் பிரயாணம் செய்துகொண்டே தாம்ஸன் நாடோறும் தமது பிரயாணக் குறிப்பை எழுதி வந்தார்; தாம் பிரயாணம் செய்த நிலப்பகுதியின் படத்தை வரைந்தார்; தாம் சென்ற பாதைக்கு அருகில் இருந்த மலைகளின் மீது ஏறிக் கண்ணுக் கெட்டியவரை தாம் கண்ட காட்சிகளைக் குறித்துவந்தார். அவர் இங்ஙனம் ஊக்கம் தளராது நடந்து நடந்து இறுதியில் நைவஷா ஏரியைக் கண்டார்; அதனைச் சுற்றி யுள்ள நிலப்பகுதியையும் பார்வையிட்டார்.

11. தாம்ஸன் மேலும் வழிநடந்து பரிங்கோ என்னும் அழகிய சிறிய ஏரியைக் கண்டார். அந்த ஏரிக் கும் விக்டோரியா ஏரிக்கும் இடைப்பட்ட நிலப்பகுதி அஞ்சத்தக்கது என்று தாம்ஸனுடன் சென்ற சுதேசிகள் கூறினர். அஞ்சாமை மிகுந்த தாம்ஸன் ஆங்கில வீரருடன் அச்சமின்றி நடந்தார்; பல நாட்கள் நடந்தார். வழியில் ஒரு கெடுதியும் உண்டாகவில்லை. அவர் தமது செலவின் குறிக்கோளாகக் கொண்டிருந்த விக்டோரியா ஏரியை இறுதியிற் கண்டு மகிழ்ந்தார். முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் அல்லவா?

12. தாம்ஸனது முயற்சிக்குப் பிறகு ஆங்கிலேயர் கிழக்கு ஆப்பிரிக்காவிற் புகுந்து காடுகளை அழித்து நகரங்களையும் கிராமங்களையும் அமைத்தனர்; வயல்களையும்

தோட்டங்களையும் அமைத்துக்கொண்டனர். இன்று கிழக்கு ஆப்பிரிக்கா ஒரு குடியேற்ற நாடாக விளங்கி வருகிறது.

## அருஞ்சொற்பொருள்

*சான்ஸிபார்*-ஒரு தீவு. *மொம்பஸா*-கரையோர நகரம். *கொடுமுடி*-சிகரம். *வெப்பப்பகுதி*-உஷ்ணப்பிரதேசம். *பண்டமாற்று*-நாணயம் தந்து பண்டங்களை வாங்காமல், பண்டங்களைக் கொடுத்து வேறு பண்டங்களை வாங்குதல். *எஞ்சிய*-உயிர் பிழைத்திருந்த. *குறிக்கோள்*-இலட்சியம், நோக்கம்.

## கேள்விகள்

1. ஜோசப் தாம்ஸன் நல்லியல்புகள் எவை?
2. தாம்ஸன் 1892இல் எதனைக் கண்டறிய அனுப்பப்பட்டார்?
3. பொட்டலைக் கடந்த தாம்ஸன் கண்டவை யாவை?
4. தாம்ஸன் வெப்ப நிலப்பகுதியில் அடைந்த துன்பங்கள் எவை?
5. தாம்ஸன் ஏன் இடைவழியில் மொம்பஸாவுக்குத் திரும்பினார்?
6. தாம்ஸனுக்குக் காண்டாமிருகங்களும், காட்டு எருமைகளும் எவ்வாறு துன்பம் இழைத்தன?
7. வ-கிகுயூ என்னும் இனத்தவர் எப்படிப்பட்டவர்?
8. தாம்ஸன் கண்ட ஏரிகள் யாவை?
9. தாம்ஸன் தம் பிரயாணத்தின்போது தயாரித்தவை எவை?

## பயிற்சி

1. தாம்ஸன் பிரயாணத்தின்போது பட்ட துன்பங்களைப்பற்றி முப்பது வரிகளுள் ஒரு கட்டுரை வரைக.

2. தாம்ஸனுடைய பொறுமை, விடா முயற்சி, உழைப்பு என்பவற்றை விளக்கச் சான்றுகள் தருக.

3. டேவிட் லிவிங்ஸ்டன் அல்லது மங்கோபார்க் ஆப்பிரிக்காவில் செய்த ஆராய்ச்சிகளை விளக்கி ஒரு கட்டுரை வரைக. (தக்க நூலைப் படித்து இக்கட்டுரையை எழுதுக).

4. சிங்கம், காண்டாமிருகம், ஒட்டைச்சிவிங்கி என்பவை பற்றிக் குறிப்பு வரைக. (நூல்நிலையத்திலுள்ள நூல்களைக்கொண்டு எழுதுக.)

5. (1) 'முருகன் புலிபோலப் பாய்ந்தான்' என்னும் வாக்கியத்தில் உள்ள 'போல' என்பது உவமையுருபு எனப்படும்.

(2) பெயர்ச் சொற்களைச் சார்ந்து வரும் ஐ, ஆல், கு, இன், அது, கண் முதலியன வேற்றுமையுருபுகள் எனப்படும்.

(3) அ, இ, உ என்னும் சுட்டு எழுத்துக்களையும், எ, ஏ, ஆ, யா, ஓ என்னும் வினா எழுத்துக்களையும் நீங்கள் அறிவீர்கள். இவையாவும் பெயர்ச்சொல்லையேனும் வினைச்சொல்லையேனும் சார்ந்து வரும். அதனால் இவை இடைச்சொற்கள் எனப்படும்.

# 18. மேனாட்டுத் தமிழ்த் தொண்டர்

1. ஏறத்தாழக் கி. பி. ஆயிரத்து அறுநூறும் ஆண்டு முதல் ஐரோப்பிய நாடுகளிலிருந்து நமது தமிழகத்திற்கு வந்த கிறித்துவப் பெரியார் பலராவர். அவர் அமெரிக்கர், போர்ச்சுகீசியர், இத்தாலியர், செருமானியர், பிரெஞ்சுக் காரர் எனப் பல நாட்டினராவர். அவரனைவரும் தமிழகத் தில் கிறித்துவ சமயத்தைப் பரப்பவே வந்தனர். அவர்கள் தங்கள் சமய போதனையைத் தமிழ் மொழியில் செய்யின் தமிழர் கிறித்துவ சமயத்தையும் அதன் கொள்கைகளையும் புரிந்துகொள்ள முடியும்; புரிந்துகொண்டு அச்சமயத்தைத் தழுவுதல் கூடும். ஆதலால் தமிழகம் வந்த மேனாட்டுப் பாதிரிமார் முதலில் தமிழைக் கற்கலாயினர்.

2. அப்பாதிரிமார் தத்தம் மொழிகளில் வல்லுநர். ஆதலால் அவர்கள் தமிழ் நூல்களைக் கற்கும்போது, தமிழ் மொழியைத் தம்மொழியோடு ஒப்பிட்டுப் பார்த்தனர்; தமிழ்நூல்களைத் தங்கள் நூல்களுடன் ஒப்பிட்டு ஆராய்ந் தனர்; தமிழின் இனிமையை உணர்ந்து சுவைத்தனர்.

3. அக்காலத்தில் தமிழகத்தில் நூல்களை அச்சிட அச்சுப்பொறி இல்லை; செய்தித்தாள்கள் இல்லை; அகராதி நூல்கள் இல்லை. இக்குறைகளை நீக்கிய பெருமக்கள் மேனாட்டுத் தமிழறிஞரே யாவர். அவர்கள் திருக்குறள் போன்ற உயர்ந்த கருத்துக்களையுடைய தமிழ் நூல்களைத் தத்தம் மொழியில் மொழி பெயர்த்தனர்; தமிழ்மொழியின் சிறப்பை விளக்கிப் பல கட்டுரைகள் வரைந்தனர்; தமிழில் அகராதி நூல்களை உருவாக்கினர்; தமிழ் உரைநடை நூல்களை வரைந்தனர்; தங்கள் சமயக் கருத்துக்களையும் கதைகளையும் விளக்கிப் பல செய்யுள் நூல்களைச் செய்த னர்; தமிழுடன் தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய மொழிகளை ஒப்பிட்டுப் பார்த்தனர்; இத்தென்னாட்டு மொழிகளுடன் உலக மொழிகளையும் ஒப்பிட்டு ஆராய்ந் தனர்; தங்கள் ஆராய்ச்சி முடிவுகளைப் பல கட்டுரை களாகவும் நூல்களாகவும் வெளியிட்டனர்.

4. *இராபர்ட்-டி-நொபிலி* என்பவர் இத்தாலி நாட்டினர். இவர் கி. பி. ஆயிரத்து அறுநூற்று ஆறில் தமிழகத்துக்கு வந்தார்; மதுரையில் குடியேறினர்; சைவ உணவை உட்கொண்டார்; சிறந்த துறவியாக இருந்து சமயபோதனை செய்தார். இவர் நாற்பத்திரண்டு ஆண்டுகள் தமிழ்நாட்டின் பல பகுதிகளில் வாழ்ந்து சமய போதனை செய்தார். இப்பெரியார் தம் சமயத்தொடர்பான பல **உரைநடை நூல்கள்** எழுதினர்; தமிழ்-போர்ச்சுகீசிய *அகராதி* ஒன்றையும் எழுதி முடித்தார். இவரைத் தமிழ் மக்கள் 'தத்துவ போதக சுவாமிகள்' என்று அழைத்தனர்.


5. இவருக்குப் பின்பு தமிழகம் வந்த இத்தாலியர் *கான்ஸ்டன்டின் ஜோசப் பெஸ்கி* என்பவர். அவர் தைரிய நாதர் என்றும் *வீரமாமுனிவர்* என்றும் தமிழ் மக்களால் அழைக்கப்பட்டார். வீரமாமுனிவர் தெலுங்கு, வடமொழி, தமிழ் ஆகிய மூன்று மொழிகளையும் கற்றார். அவர் காலத்தில் தமிழ்நாட்டில் அரசியல் கொந்தளிப்பு மிகுந்திருந்தது. அதனால் அவர் அடைந்த இன்னல்கள் பல. ஆயினும் அவர் நாற்பத்து இரண்டு ஆண்டுகள் தமிழகத்திலிருந்து சமயத் தொண்டும் தமிழ்த்தொண்டும் செய்தார்.



வீரமாமுனிவர்

6. வீரமாமுனிவர் *சதுர்அகராதி* என்னும் பெயர் கொண்ட அகராதியைச் செய்தார்; இயேசுநாதரின் வளர்ப்புத் தந்தையான சூசையப்பர் வரலாற்றை ஒரு பெருங்காவியமாகப் பாடினர். அதன் பெயர் **தேம்பாவணி** என்பது. முனிவர் திருக்காவலூரைக் கொள்ளிடக் கரையில் அமைத்தார்; அங்கு அழகிய மாதாகோவிலைக் கட்டி

னார்; திருக்காவலூர்க் கலம்பகம் என்னும் நூலைப் பாடி னார்; அத்துடன் அடைக்கலமாலை, அன்னை அழுங்கல்



திருக்காவலூர் மாதா கோவில்

அந்தாதி, கித்தேரி அம்மாள் அம்மானை முதலிய செய்யுள் நூல்களையும் இயற்றினார்; வேதியர் ஒழுக்கம், வேதவிளக்

கம், பரமார்த்த குருகதை முதலிய உரைநடைநூல்களை எழுதினார். தமிழின் ஐந்து இலக்கணங்களையும் விளக்கித் 'தொன்னூல் விளக்கம்' என்னும் பெயரில் ஒரு தமிழ் இலக்கணநூலை வெளியிட்டார். ஐரோப்பியப் பாதிரிகள் தமிழிற் பேச உதவும் முறையில் இலத்தீன் மொழியில் ஓர் இலக்கணம் வரைந்தார். அதன் பெயர் 'கொடுந்தமிழ் இலக்கணம்' என்பது.


7. ***சீக்கன்பால்கு*** என்ற பாதிரியார் செருமனி நாட்டவர். இவர் பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழகத்தில் சமயத்தொண்டு செய்தவர். இவர் தரங்கம்பாடியில் தங்கித் தமிழைக் கற்றார்; பின்பு தம் சமயச் சொற்பொழிவுகள் செய்யத் தொடங்கினார்; தமிழில் ஓலைச் சுவடிகள் பலவற்றைச் சேர்த்தார். இவர் தரங்கம்பாடியில் கோவில்களைக் கட்டினார்; பலரைக் கிறித்துவராக்கினார்; அவர்தம் பிள்ளைகட்குப் பள்ளிகளை நிறுவினார்; கிறித்துவ சமய நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தார்; அவற்றை அச்சிட்டு வெளிப்படுத்தினார். இவரது முயற்சியால் தமிழ்நாட்டில் முதன் முதலில் அச்சடிக்கப்பட்ட தமிழ்நூல்கள் வெளிவந்தன.



*சீக்கன் பால்கு ஐயர்*


8. ***இரேனியுஸ்*** என்பவரும் செருமன் நாட்டவரே. இவர் கி. பி. 1814இல் தமிழகம் வந்து சமயத்தொண்டில் இறங்கினார். இவர் திருநெல்வேலி மாவட்டத்தில் பல ஊர்களில் சமயத் தொண்டாற்றினார். இவர் 'டோனா' என்னும் மேனாட்டுச் செல்வர் ஒருவரது பொருளுதவியால் திருநெல்வேலி மாவட்டத்தில் ஓரிடத்தை வாங்கினார்; அதற்கு 'டோனாவூர்' என்று பெயரிட்டார்; அங்குக் கிறித்துவர்களைக் குடியேற்றினார்; தருமசங்கம் ஒன்றை நிறுவினார்; அதன் வாயிலாகக் கோவில்கள், பள்ளிகள், வீடுகள் கட்டுவதற்கு நிலங்கள் முதலியவற்றை வாங்கி

னார். அச்சங்கத்தின் உதவியால் திருநெல்வேலியில் கிறித்துவக் கிராமங்கள் பன்னிரண்டு ஏற்பட்டன. இப்பெரியார் சிறந்த தமிழறிஞர். இவர் பிழையற்ற தமிழ்நடை எழுதுவதில் வல்லவர். இப்பாதிரியார் பல உரைநடை நூல்களை இயற்றியுள்ளார்.



போப்பையர்

9. *போப்பையர்* என்பவர் ஆங்கிலேயர். இவர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பாதியில் தமிழகத்தில் வாழ்ந்தவர். இவர் சிறந்த தமிழ்ப்புலமை உடையவர். இப்பெரியார் திருக்குறள், நாலடியார், திருவாசகம் ஆகிய தமிழ்நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்; புறநானூறு, புறப்பொருள் வெண்பாமாலை என்னும் நூல்களிலிருந்து சில பாக்களை ஆங்கிலத்தில் செய்யுள் வடிவில் மொழி பெயர்த்தார்; தமிழ் இலக்கிய நூல்களைப்பற்றி ஆங்கில இதழ்களில் கட்டுரைகள் எழுதினார்; சிறுவர்க்கு ஏற்ற முறையில் ஓர் இலக்கண நூலையும் வெளியிட்டார்.



கால்டுவெல் ஐயர்

10. *கால்டுவெல் ஐயர்* அயர்லாந்து நாட்டினர். இவர் 1838இல் சென்னைக்கு வந்தார்; திருநெல்வேலியில் உள்ள இடையன்குடி என்னும் ஊரில் தங்கி, ஐம்பது ஆண்டுகள் சமயத்தொண்டு புரிந்தார். இவரது உடல் இடையன்குடியில் இவரால் கட்டப்பட்ட கோவிலில் அடக்கம் செய்யப்பட்டது. இவர் சிறந்த ஆராய்ச்சி

அறிஞர். இவர் திருநெல்வேலி வரலாறு என்னும் ஆராய்ச்சிநூலை ஆங்கிலத்தில் எழுதினார்; ஏறத்தாழ நாற்பது ஆண்டுகள் உழைத்துத் ***திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்*** என்னும் அரிய ஆராய்ச்சிநூலை ஆங்கிலத்தில் எழுதி முடித்தார். அந்நூலினால் இவர் பெயரும் புகழும் உலகெலாம் பரவின. இவர் சில உரைநடைநூல்களையும் எழுதியுள்ளார்.

11. ***டாக்டர் ராட்லர்*** என்பவர் தமிழ் அகராதி ஒன்றைத் தொகுத்தார். அவருக்கு அடுத்தபடி ***டாக்டர் வின்ஸ்லோ*** என்பவர் முப்பதாயிரம் சொற்களைக் கொண்ட பெரிய அகராதி ஒன்றைத் தொகுத்து முடித்தார்.

12. இங்ஙனம் மேனாட்டுத் தமிழறிஞர் தமிழுக்குச் செய்த தொண்டுகள் பலவாகும். அப்பெருமக்களுக்கு நமது நன்றி உரியதாகுக.

### அருஞ்சொற்பொருள்

பொறி - இயந்திரம். மேனாடு = மேல்+நாடு - ஐரோப்பிய, அமெரிக்க நாடுகள். திருக்காவலூர் - இது தஞ்சை மாவட்டத்தில் ஐயம்பேட்டைக்கு அருகிலுள்ள ஒரு சிற்றூர்; கொள்ளிடத்தின் வடகரையில் உள்ளது. கித்தேரியம்மாள் அம்மானை - கி. பி. 180 ஆம் ஆண்டு போர்ச்சுகல் நாட்டில் பொம்மேரு என்னும் குன்றில் வேத சாட்சி முடிபெற்ற தூய கித்தேரியம்மாளின் தூய வரலாற்றைக் கூறுவது. அந்தாதி - ஒரு செய்யுளின் அந்தம் (கடைசி), மற்றொரு செய்யுளுக்கு ஆதியாக வருவது. இங்ஙனம் நூறு செய்யுட்கள் கொண்டநூல் 'அந்தாதி நூல்' எனப்படும். கலம்பகம் - பலவகைச் செய்யுட்களைக் கொண்ட சிறு நூல். அம்மானை - கழற்சிக் காய்கள் போன்றவற்றைக் கொண்டு மூன்று பெண்கள் பாடிக்கொண்டே ஆடும் ஆட்டம். ஒரு பெண் ஒரு செய்தி சொல்லி ஆடுவாள். இரண்டாம் பெண் அச்செய்திபற்றி ஒரு கேள்வி கேட்டுக்கொண்டே ஆடுவாள். மூன்றும் பெண் அக்கேள்விக்கு விடை கூறிக்கொண்டே ஆடுவாள். தரங்கம்பாடி - தஞ்சை மாவட்டத்துக் கடற்கரை ஊர். தரங்கம் - அலை. நாலடியார் - சமண முனிவர் பாடிய நானூறு செய்யுட்களைக் கொண்ட நீதி நூல்.

### கேள்விகள்

1. மேனாட்டுப் பாதிரிமார் ஏன் தமிழைக் கற்றனர்?
2. இராபர்ட்-டி-நொபிலி செய்த தமிழ்த் தொண்டு யாது?

3. வீரமாமுனிவர் செய்த தமிழ்ப் பணி யாது?

4. முதலில் தமிழ் நூல்களை அச்சிட்டு வெளிப்படுத்திய பெரியார் யாவர்?

5. இரேனியுஸ் ஐயர் செய்துள்ள சமயத் தொண்டு யாது?

6. "போப்பையர் தொண்டினால் தமிழ் நூல்களின் சிறப்பை உலகம் அறியலாயிற்று."—இக்கூற்று எங்ஙனம் பொருந்தும்?

7. கால்டுவெல் ஐயர் செய்த இணையற்ற தொண்டு யாது?

## பயிற்சி

1. பிரித்துக் காட்டுக:—அச்சமயம், மேனாட்டுப் பாதிரிமார், தமிழறிஞர், நாற்பத்திரண்டு, சமயச் சொற்பொழிவு.

2. சேர்த்துக் கூறுக:—ஓலை + சுவடி, தமிழை + கற்றார், தமிழில் + பேச, சமயம் + தொண்டு, இ + பெரியார், புறம் + பொருள், உலகு + எலாம்.


3. கீழ்வருவனவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறுக:—பெயரும் புகழும், தமிழறிஞர், சமயத்தொண்டு, வாயிலாக, கொந்தளிப்பு.

4. மேனாட்டறிஞரது தமிழ்த் தொண்டினைப் பாராட்டி முப்பது வரிகளுள் ஒரு கட்டுரை வரைக.

5. இப்பாடத்தில் பதின்மூன்று பகுதிகள் இருக்கின்றன. ஒவ்வொரு பகுதியும் ஒரு பத்தி (Para) எனப்படும். ஒரு கருத்தை விளக்கும் பல வாக்கியங்களின் தொகுப்பே பத்தி என்பது. இவ்வாறு பல பத்திகள் கொண்டதே ஒரு பாடம்.

இப்பாடத்தின் மூன்றும் பத்தியிலுள்ள வாக்கியங்களில் இருக்கும் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களைக் கூறுக.

# 19. டாக்டர் ஆல்பெர்ட் சுவெட்சர்



1. மக்களுக்காக உழைப்பதில் பேரார்வம் கொண்ட மேன்மக்கள் இன்றும் உலகில் உள்ளனர்; உலகின் பல பாகங்களிலும் வாழ்கின்றனர். அத்தகையோருள் **டாக்டர் ஆல்பெர்ட் சுவெட்சரும்** ஒருவர். இவரது வாழ்க்கை வரலாறு மாணவர்கள் படித்து அறிய வேண்டிய ஒன்றாகும்.

2. ஆல்பெர்ட் சுவெட்சர் 1875ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 14ஆம் தேதியன்று பிறந்தார். இவர் செருமானியர். இவர் தந்தையார் இவர் பிறந்த சில வாரங்களில் கன்ஸ்பாக் (Gunsbach) என்னும் ஊருக்குச் சென்றார்; அங்குப் பாதிரியாராக வேலை பார்த்தார். சுவெட்சர் அவ்வூரில் தம் இளமைப் பருவத்தைக் கழித்தார். இவருக்கு ஐந்தாம் வயது தொடங்கியதும் இவர் தந்தையார் இவருக்குப் பியானோ சங்கீதம் கற்றுக் கொடுத்தார்; ஏழாம் வயதில் இவர் பியானோவை இசைப்பதில் திறமை பெற்று விளங்கினார். இவர் 'ஆர்கன்' என்னும் இசைக் கருவியை எட்டாம் வயதில் வாசிக்கத் தொடங்கினார். இவருடைய முன்னோர் இசையில் சிறந்து

விளங்கினர். அவர்கள் வழியில் வந்த இவரும் இசைப் புலமையில் சிறந்து விளங்கினுர்.

3. இவர் இளமையிலேயே மக்களையும் பிறவுயிர் களையும் துன்புறுத்தலை வெறுத்தார்; பறவை விலங்கு முதலிய உயிரினங்களை வருத்தும் மற்றவர்களைத் தம் வழிக்குத் திருப்ப முயன்ருர்; ஒரு நாள் இவருடைய நண்பன் பறவைகளை வேட்டையாட இவரை அழைத் தான். இவர் அவனுடன் சென்ருர். ஆனுல் அங்குச் சென்றவுடன் பறவைகள்மேல் இரக்கம் கொண்டு, அவை களின்மேல் அம்பெய்யாமலிருக்கும் வண்ணம் நண்பனது வில்லைப் பிடித்துக்கொண்டார். அந்நேரத்தில் மாதா கோவில் மணி அடித்தது. இவர் உள்ளம் மேலும் உறுதிப் பட்டது. இவர் பறவைகளை நண்பன் வில்லிற்கு இலக்கா காதபடி வெருட்டிவிட்டு வீட்டிற்குச் சென்ருர். இந் நிகழ்ச்சி இவருடைய உள்ளத்தின் தன்மையைத் தெளிவாகக் காட்டுகின்றது அன்ருே?

4. ஆல்பெர்ட், கன்ஸ்பாக் பள்ளியில் 1884ஆம் ஆண்டுவரை பயின்ருர்; பின்னர் ஓராண்டு மன்ஸ்டர் பள்ளியில் பயின்றபோது இலத்தீன் மொழியைத் தனியாகக் கற்ருர்; 1885இல் முல்ஹாசன் என்னும் ஊரில் உள்ள உயர்நிலைப்பள்ளியிற் சேர்ந்தார். இவர் அங்குத் தம் பாட்ட ஞர் உதவி பெற்றுப் படித்து வந்தார். 1893இல் இவரது பள்ளிப் படிப்பு முடிந்துவிடவே, மீண்டும் கன்ஸ்பாக் சென் ருர். இவ்வாண்டில்தான் இவர் முதன்முதல் பாரிஸ் நகரம் சென்ருர். அங்கு இவர் சிறந்த இசைப் புலவரான சார்லஸ் விடார் என்பவருடன் தொடர்பு கொண்டார்.

5. இவர் தம் மேற்படிப்புக்காக 1893 அக்டோபரில் ஸ்ட்ராஸ்பர்க் (Strassburg) பல்கலைக் கழகத்தில் சேர்ந் தார்; எபிரேய மொழியைக் கற்றுத் தேர்வு எழுதி வெற்றி பெற்ருர்; பின்னர் ஓராண்டு கட்டாய இராணுவப் பயிற்சி யில் சேர்ந்து தொண்டாற்றினுர். இவர் தம் பாடங்களைச் செவ்வனே படித்து வந்தார்; இவற்றுடன் இசைப் பயிற்சி யையும் தொடர்ந்து மேற்கொண்டார்; பல விழாக்களில்

இசைக் கருவிகளை இசைத்தார். சிறந்த இசைப் புலவர்கள் இவரது இசைப் புலமையைப் பாராட்டினர். இவர் 1900 ஆம் ஆண்டில் பல்கலைக் கழகப் பட்டம் பெற்றார்; தாம் கற்ற பல்கலைக் கழகத்தில் சமய இயல் ஆசிரியராகப் பதவி ஏற்றார்.

6. இவ்வாறு தேர்வுகளில் வெற்றி பெற்று ஒரு பணியில் அமர்ந்த பின்னரும், இவர் தம் இசைப்பயிற்சியை விடவில்லை; அடிக்கடி பாரிஸ் சென்றார்; பல இசை அரங்குகளில் இசைக்கருவிகளை மீட்டினார். 1905இல் 'பாக்' என்னும் இசைக் கலைஞரைப்பற்றி இவர் பிரெஞ்சு மொழியில் எழுதிய நூல் வெளிவந்தது. இவ்வாறு பல் வேறு திசைகளில் தம் கருத்தைச் செலுத்தி வந்த இவர், தமது முப்பதாம் வயதிற்குப் பிறகு மக்களுக்காகத் தொண் டாற்றுவதில் தம் வாழ்நாளைக் கழிக்க வேண்டும் என்று உறுதிகொண்டார். இந்த உறுதி செயலாகும் வாய்ப்பு இவர்க்குக் கிடைத்தது.

7. இவர் ஒரு நாள் பாரிஸ் கிறித்துவப் பிரசார சங்கத் தின் செய்தித்தாள் ஒன்றைப் படித்தார்; அதனில் இருந்த "காங்கோ மிஷன் சங்கத்தின் தேவைகள்" என்ற தலைப் பில் அமைந்த கட்டுரையைப் படித்தார். அதனில் காங்கோ குடியேற்றத்தின் வடபகுதியில் பணிபுரிய ஊழி யர்கள் தேவை என்ற குறிப்புக் காணப்பட்டது. உடனே இவர் தாம் தொண்டு செய்வதற்கேற்பட்ட இடம் அதுவே யெனக் கொண்டார்; அங்குச் சென்று தாம் செய்ய வேண்டிய பணி 'பிணி தீர்க்கும் பணியே' என்பதை மனத்தில் கொண்டார்; 1905ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 13ஆம் நாள் பாரிஸிலிருந்து தம் பெற்றோர்க்கும் நண்பர்க்கும் இது குறித்துக் கடிதங்கள் வரைந்தார்.

8. இவர் கொண்ட முடிவினைக் கேட்ட நண்பர் களும் உறவினரும் நகைத்தனர்; பொருந்தாத கருத்து எனக் கூறினர். இருப்பினும், இவர் மனந்தளராமல், மற்றவர் கூற்றினையும் பொருட்படுத்தாமல், 1905ஆம் ஆண்டு மருத்துவ மாணவராகச் சேர்ந்தார்; 1911இல்

மருத்துவத் தேர்வு எழுதி வெற்றி பெற்ருர்; அடுத்த ஆண்டு மருத்துவ மனையில் பணி புரிந்துகொண்டே மருத்துவப் பட்டத்துக்கான ஆராய்ச்சிக் கட்டுரையை எழுதி முடித்தார்; பின்னர் ஆப்பிரிக்காவிற்குச் செல்ல உறுதி கொண்டார்.

9. இவர் 1912ஆம் ஆண்டு சூன் திங்கள் தம்மை நன்கு அறிந்திருந்த ஹெலன் பிரஸ்லோ என்னும் நங்கையை மணந்தார். அவர் தாதிக்குரிய பயிற்சி பெற்றிருந்தார். அவர் தம் கணவருடைய பணிகளில் பங்கேற்றுச் சிறந்த துணைவியாராக விளங்கினர். ஆல்பெர்ட் அதே ஆண்டில் பாரிஸ் நகரம் சென்று, வெப்ப நாடுகளுக்கேற்ற மருத்துவமுறை பயின்ருர்; மருந்துகள் முதலியவற்றை வாங்கிச் சேர்த்துக்கொண்டார்.

10. இவரையும் இவர் மனைவியரையும் ஏற்றிச் சென்ற 'ஐரோப்பா' என்ற கப்பல் பிரான்ஸிலிருந்து ஆப்பிரிக்காவிற்கு 1913ஆம் ஆண்டு மார்ச்சு 20ஆம் நாள் புறப்பட்டது. இவர் லாம்பரீனி என்னும் இடத்தில் முதன் முதலில் இறங்கினர். அங்குள்ள கிறித்துவ சங்க நிலையம் இவரை வரவேற்றது. அங்கு இவர் நாலரை ஆண்டுகள் பணியாற்றினர். இவர் தமக்கு அளிக்கப்பட்டிருந்த இடத்தில், முன்பு குடியிருந்த சமய போதகர் கோழிக்கூடாகப் பயன்படுத்திய அறையை மருத்துவம் செய்வதற்கெனப் பயன்படுத்திக்கொண்டனர்.

11. இவர் நாள்தோறும் காலை எட்டரை மணிக்கே நோயாளிகளைப் பார்க்கத் தொடங்குவார். நோயாளிகள் இவர் வீட்டு நிழலில் காத்திருப்பர். இவருடைய உதவி ஆட்களுள் ஒருவன் மருத்துவர் கட்டளைகளை அவர்களுக்குப் படித்துக் காட்டுவான். அவர்களும் அவற்றைக் கேட்டுக்கொள்வர். நடுப்பகல்வரை தொடர்ந்து மருத்துவம் பார்ப்பார். பின்னர் அவர் உணவருந்தச் செல்வார். நோயாளிகளும் தாங்கள் கொண்டுவந்திருந்த உணவை உண்பர். பின்னர் மறுபடியும் இரண்டு மணி முதல் ஆறு மணிவரை பரிசோதனை நடக்கும். அப்படியும்

பார்க்காமல் விடப்பட்ட நோயாளிகள் மறுநாள் கவனிக் கப்படுவர். இவ்வாறு இவர் தமது பணியைச் செய்து வந்தார்.

12. லாம்பரீனியில் உள்ள நீகிரோவர் கொடிய நோயால் துன்பப்பட்டனர். மருத்துவர், வயிற்றுக்கடுப்பு, தூங்குநோய் முதலிய பிணியுடையவர்களைத் தனித்தனியே தங்க வைப்பதற்காகவும், பிறநோயாளிகளைத் தனியாக வைப்பதற்காகவும் கட்டடம் கட்ட விரும்பினுர்; அவ்வாறே கட்டியும் முடித்தார். இவருக்கு உதவியாக இவர் மனைவியும் ஜோசப் என்பவனும் இருந்தனர். நோயாளிகள் பல இடங்களிலிருந்து வந்து மருந்து பெற்றுச் சென்றனர். சிலர் இதற்குப் பதிலாகத் தங்களுக்குக் கிடைத்த பணத்தையும் பொருள்களையும் அளித்தனர்.

13. ஐரோப்பாவிலிருந்து 1913ஆம் ஆண்டின் இறுதியில் மருந்துகள் வந்து சேர்ந்தன. அவைகளைக் கொண்டு மேலும் பலர்க்கு மருத்துவம் செய்ய வாய்ப்பு உண்டானது. இவரால் நோய் தீர்க்கப்பெற்ற சிலர் இவர் கட்டடம் கட்டும் பணியில் பங்கு கொண்டனர். அக் கட்டடங்களில் பிணியாளர்கள் தங்க வசதியேற்பட்டது. இவர் பைத்தியம் பிடித்தவர்களையும் நலமாக்கினுர்.

14. இரண்டு உலகப் போர்கள் நடந்த காலத்தும் இம்மருத்துவ மனைக்குக் கெடுதல் ஏற்படவில்லை. இவர் அடிக்கடி பாரிஸ், அமெரிக்கா போன்ற பல இடங்களுக் கும் சென்று இசைக்கருவிகளை இசைத்தும், சொற் பொழிவுகள் செய்தும் மிகுதியாகப் பொருள் திரட்டினுர். இவர் நண்பர்களும் இவரது பெயரில் சங்கமொன்று அமைத்து, அதன்மூலம் பணம் திரட்டி, இவர்க்கு உதவினர். இவர் இவ்வாறு பலவகையிலும் வந்த பணத்தை மருந்துகள் வாங்கவும், நோயாளிகள் வசதியாகத் தங்குவதற்குரிய மனைகள் கட்டவும், படுக்கைகள் தயாரிக்கவும் செலவிட்டார்; நீகிரோவர்க்கு மருத்துவம் மட்டுமன்றிச் சமய போதனையும் செய்தார்.

15. இங்ஙனம் கல்வியறிவற்ற நீகிரோ மக்களுக்குப் பலவகையிலும் நன்மை செய்த டாக்டர் ஆல்பெர்ட்

சுவெட்சரைப் பல நாடுகள் பாராட்டின. பரிசுகளும் சிறப்புக்களும் நல்கின. இவர் 1953இல் ***நோபெல் பரிசு*** பெற்றார். 1955இல் பிரிட்டிஷ் அரசியார் இவருக்குப் பட்டம் அளித்துப் பாராட்டினார். இவர் தாம் பெற்ற பரிசுகளையெல்லாம் மருத்துவ மனைகளின் வளர்ச்சிக்கே பயன்படுத்தினார்; தம் இடையறாத வேலைகளுக்கு இடையில் பல அரிய நூல்களையும் எழுதி வெளியிட்டார். "*என் கடன் பணி செய்து கிடப்பதே*" என்பதுவே இவரது வாழ்க்கையின் குறிக்கோள். இப்பெரியாரைப் போல மக்களுக்குத் தொண்டு செய்பவரே, 'உலகப் பெரியார்' என்று மதிக்கப்பெறுவர்.

### அருஞ்சொற்பொருள்

பேரார்வம் - பெருமை + ஆர்வம்; ஆர்வம் - ஆவல். பியானோ - மேல்நாட்டு இசைக் கருவிகளுள் ஒன்று. வெருட்டிவிட்டு - துரத்தி விட்டு. பாரிஸ் நகரம் - பிரான்ஸ் என்னும் நாட்டின் தலைநகரம். வாய்ப்பு - சந்தர்ப்பம். காங்கோ - ஆப்பிரிக்கா கண்டத்திலுள்ள நாடுகளுள் ஒன்று. பணி புரிய - தொண்டு செய்ய. நங்கை - பெண்களில் சிறந்தவள்; இங்கு இச்சொல் ஒரு பெண்மணியைக் குறிக்கிறது. தாதி - மருத்துவ மனையில் நோயாளிகளுக்கு உதவி புரியும் பெண்மணி (Nurse). நீகிரோவர் - ஆப்பிரிக்கா கண்டத்தில் வாழும் ஓர் இனத்தவர். இடையறாத - ஓய்வில்லாத. பணி - தொண்டு.

### கேள்விகள்

1. ஆல்பெர்ட் சுவெட்சரிடம் இளமையில் காணப்பட்ட இரக்கப் பண்பை எதனால் அறியலாம்?
2. சுவெட்சரின் மனைவியார் எத்தகையவர்?
3. சுவெட்சர் நீகிரோவர்க்கு எங்ஙனம் தொண்டு செய்தார்?
4. சுவெட்சரை 'உலகப் பெரியார்' என்று அழைப்பது எவ்வாறு பொருந்தும்?

### பயிற்சி

1. சுவெட்சரின் 'கல்விப் பருவம்' என்னும் தலைப்பில் இருபத்தைந்து வரிகளுள் ஒரு கட்டுரை வரைக.

2. சேர்த்துக் கூறுக:—இசை+புலமை, வில்லை+பிடித்து, பிடித்து+கொண்டார், இளமை + பருவம், தனியாக + கற்றார், இராணுவம்+பயிற்சி, இசை+கலைஞர்.

3. பிரித்துக் காட்டுக:—வடபகுதி, மனந்தளராமல், பொருட்படுத்து, மருத்துவப்பட்டம், சமய போதகர், உணவருந்த, நடுப்பகல்.

4. 'சுவெட்சர் ஆப்பிரிக்காவில் செய்த தொண்டு' என்னும் தலைப்பில் முப்பது வரிகளுள் ஒரு கட்டுரை வரைக.

5. இப்பாடத்தின் முதற்பத்தியிலுள்ள வினைமுற்றுக்களைக் கூறுக.

6. இரண்டாம் பத்தியிலுள்ள வாக்கியங்களிலிருக்கும் எ. ப. செ. கூறுக.

# 20. சிறுவர் குற்றம்

திரு. பொ. பரமகுரு, எம். ஏ., பி. எல்.,
மாவட்டக் காவல் அதிகாரி, கடலூர்.

1. ஒருவன் பெறும் பேறுகளுள் அறிவும் ஒழுக்கமும் உள்ள நல்ல புதல்வர்களைப் பெறுவதே மிகச் சிறந்தது. அதைத் தவிர மற்றொரு சிறப்பு இல்லை. ஒரு வீட்டின் அணிகலம் நன்மக்களே. அவர்களைப் பொறுத்துத்தான் அக்குடும்பத்தின் பெருமையும் புகழும் அமையும். அவர்கள்தாம் ஒரு குடும்பத்தின் வருங்காலத் தலைவர்கள்; நம் நாட்டின் நல்வாழ்வு காணும் ஆக்க வீரர்கள். அவர்கள் நெறிதவறாது, நேர்மை குன்றாது, கண்ணியத்தோடும் கட்டுப்பாட்டோடும் குற்றங்குறையின்றி வளர்ந்தோங்க வேண்டும். அப்பொழுதுதான் நம்மவர் வாழ்வும் வளம் பெறும்.

2. உலகில் எந்தக் குழந்தையும் குற்றக் குணத்தோடு பிறப்பதில்லை. ஆனால் ஒருசிலர் சந்தர்ப்பம், சூழ்நிலை, பழக்க வழக்கம், படிப்பின்மை, கூடாநட்பு, வறுமை போன்றவை காரணமாகக் குற்றவாளிகளாய் மாறுகின்றனர். பதினெட்டு வயதிற்கு உட்பட்டவர் சமுதாயத்திற்குத் தீங்கான, சட்ட விரோதமான செய்கை எது புரியினும், அது "சிறுவர் குற்றம்" எனப்படும். நம் நாட்டில் 1959 ஆம் ஆண்டில் சிறுவர் செய்யும் குற்றங்களின் எண்ணிக்கை முப்பதாயிரமாக இருந்தது; சென்ற ஆண்டில் நாற்பத்தெட்டாயிரமாக உயர்ந்துள்ளது. இவை பிச்சை எடுப்பு, சிறுதிருட்டு முதல் கொள்ளை கொலைவரையிற் பரவியுள்ளன. கடந்த ஆண்டில் கொலை அல்லது கொலை செய்ய முயற்சி என்பவற்றிற்காக அறுநூறு சிறுவர் கைது செய்யப்பட்டனர் என்பதை அறிய அதிர்ச்சி ஏற்படுகின்றது. இச்சிறுவர் குற்றம் ஒரு நாட்டின் முக்கியப் பிரச்சினைகளில் ஒன்றாகும். இது நாகரிக நாடுகள் அனைத்திற்கும் பொது. மேற்கு நாடுகளிலும் ஜப்பானிலும் கடந்த உலகப் போருக்குப்பின் சிறுவர் குற்றம் மிகுந்துள்ளது.

3. நம் நாட்டில் பெரும்பாலோர் எளிய நடுத்தர வகுப்பைச் சார்ந்தவர். அவ்வகுப்பின் சீரற்ற குடும்பங் களே சிறுவர் குற்றம் பெருக ஏதுவாயுள்ளன. கணவன் மனைவி மன வேறுபாட்டால் ஒருவரோடு ஒருவர் வீம்பு செலுத்தி மட்டமான குடும்ப வாழ்க்கை நடத்துவதால் அவர்களுடைய குழந்தைகள் கவனிப்பாரற்றுக் கட்டுமீறி வளர்ந்து குற்றவழிகளில் செல்லுகின்றனர். சிலர் சீர் கேடாய்த் தங்கள் குழந்தைகளின் எதிரிலேயே குடித்துச் சூதாடித் தவறான வழிகளில் நடந்து, பேசத்தகாதன பேசிக் குடும்பம் நடத்துவதால், சிறுவர்கள் கெட்டுக் குற்றக்குணம் பெறுகின்றனர். கணவன் மனைவி மன முடைந்து பிரிந்து வாழும் குடும்பங்களில் குழந்தைகள் கவனிப்பு, கண்டிப்பு எதுவுமின்றித் தீய வழிகளில் செல்கின்றனர். சிறுவர் குற்றத்தை இத்தகைய மட்டமான, சீர்கேடான, மனமுடைந்த குடும்பங்கள் பெரிதும் வளர்க் கின்றன. பெற்றோர், அளவுக்கு மேற்பட்ட அன்பாலும் சலுகையாலும் சிறுவர்களைத் தவறான வழியிற் செல்ல உதவுகின்றனர். குற்றம் கண்ட இடத்துத் தம் குழந்தை யைக் கண்டித்து வளர்த்தால், அது நல்ல வழியில் திருந்தி வளரும்; இல்லையேல் கெட்டு மடியும். இக்கருத்தினை விளக்கும் ஒரு சிறு கதையும் உண்டு. உங்களில் பலர் அதனை அறிந்துமிருப்பீர்கள்.

4. இளங்காளை ஒருவன் கொலைக்குற்றத்திற்காகத் தூக்குமேடையை எதிர்நோக்கியிருந்தான். அவனுக்குத் தந்தையில்லை; தாயுண்டு. அவன் தன் கடைசி வேண்டு கோளாய்த் தன்னருமைத் தாயைக் காண விரும்பினன். உடனே அவனது தாய் அழைத்துவரப்பட்டாள். "என் னருமைத் தாயே," என அன்னையைத் தழுவிய மகன், திடீரென அவள் மூக்கைக் கடித்தெடுத்தான். "அடபாவி! தூக்கு மேடைக்குச் செல்லும் போதுமா இக்கோரச் செயல் புரியவேண்டும்!" எனப் புலம்பினள் தாய். "நன்றாக அழு. என் காது குளிரக் கதறு. அப்போதுதான் என் மனம் மகிழும்; அமைதி அடையும். அன்றொருநாள் நான் ஓர் ஊசி திருடி வந்தபோது என்னைத் தட்டிச்

சொல்லிக் கண்டிக்காது மனம் மகிழ்ந்து என்னைப் பாராட்டினாய். அதன் பயன் நான் ஒரு திருடனாய், இறுதியில் கொலைகாரனாய் மாறினேன்; அதனால் இந்த இளம் வயதிலேயே என் உயிரிழக்கப் போகிறேன். அதற்குக் காரணம் நீ என்பதை உணர்த்தவே உன் மூக்கைக் கடித்து மூளி ஆக்கினேன். உன்னைப் பார்த்தாவது மற்ற பெற்றோர் தங்கள் பிள்ளைகளை இவ்விதம் தப்பான வழியில் வளர்க்காமல் இருக்கட்டும்,'' எனக் கூறித் தூக்கு மேடைக்குப் போனானாம். அத்தகைய பெற்றோரால் சிறுவர் குற்றம் பெருகத்தான் செய்யும்.

5. போராலும் உள்நாட்டுக் குழப்பத்தாலும் அமைதி குன்றிய நாட்டில் சிறுவர் குற்றம் மிகுவதற்கு வாய்ப்பு மிகுதி உண்டு. வறுமையும் தீயநட்பும் சிறுவர் குற்றத்திற்கு ஏற்றந் தரும் வாய்ப்புக்கள். ஒழுக்கக்குறைவு, கட்டுப்பாடின்மை, பெற்றோரை அவமதித்தல், எளிதில் பணந்தேட விரும்புதல் போன்ற நடத்தைகள் சிறுவர் குற்றத்திற்குத் தூண்டு கோல்களாகும். ஆபாசத் திரைப்படங்களும், பொல்லாத நூல்களும் ஓரளவு சிறுவர் குற்றத்திற்கு உதவிபுரிகின்றன. தமது ஓய்வு நேரங்களைக் கழிக்கப் போதிய பொழுது போக்கு வசதி இன்மையால் சோம்பல் வாழ்க்கையில் சிறுவர் ஈடுபடுகின்றனர். சோம்பல் தானாகவே பேய்க் குணத்தை உண்டுபண்ணுகிறது. பொதுவாய் இதுவரையிற் குறிப்பிட்ட காரணங்களின் விளைவே "சிறுவர் குற்றம்."

6. இவ்விதச் சூழ்நிலை வசத்தால் சிறுவர் குற்றக் குணம் படைத்து, நாளடைவில் கட்டுப்பாடின்றி வளர்ந்து பெருங் குற்றவாளிகளாய் மாறிவிடக் கூடாது. அதைப் பொதுநலம் பேணும் அரசாங்கமும், நாட்டின் நல்வாழ்வு நாடும் பொதுமக்களும், குடும்பத்தின் புகழ்தேடும் பெற்றோரும் கவனித்துத் தடுத்தல் வேண்டும். பொதுமக்கள் ***சமூகநலச் சங்கங்களை*** ஏற்படுத்திச் சிறுவர் நல்வழி தவறாது நடக்கக் கற்பிக்க வேண்டும். பெற்றோரும் தங்களது செல்வச் சிறார்களுக்குத் தக்க கல்வியும் பயிற்சியும் அளித்துவரல் வேண்டும்.

7. மக்களாட்சி அரசாங்கம் பல முறைகளைக் கையாண்டு சிறுவர் குற்றத்தைத் தடுத்துவருகின்றது; இதற்காகவே **சென்னைச் சிறுவர் சட்டம், சென்னைப் புதிய குற்றவாளிகள் சட்டம்** போன்ற சட்டதிட்டங்களை நிறைவேற்றியுள்ளது. இவற்றால் குற்றம் புரிந்த சிறுவர் அரசாங்க இசைவுபெற்ற பள்ளிகளில் சேர்க்கப்பட்டுத் தக்க படிப்பும் பயிற்சியும் அளிக்கப்படுகின்றனர். சிறிய கைத்தொழில்களும் அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கப் படுகின்றன. இவற்றின் பயனாய் இளங்குற்றவாளிகள் நன்மை அடைந்து நல்வாழ்வு பெறுகின்றனர்.

8. போலீசார் பிழைபுரியும் சிறுவர்களை அவர்களுக்கென நியமிக்கப்பட்டிருக்கும் நீதிமன்றத்தில் விசாரணை நடத்தி, அங்கே தீர்ப்பானபடி, அரசாங்க இசைவு பெற்ற பள்ளிகளில் சேர்த்துத் திருந்துவதற்கு உதவிபுரிகின்றனர். ஒரு சிறு குற்றம் புரிந்து அதன் காரணமாய் அப்பள்ளியில் பயின்றவர்கட்கு வாழ்வில் முன்னேற யாதொரு தடையுமில்லை. இத்தகைய பள்ளி ஒன்றிலிருந்து படித்து வெளிவந்த பங்களூரார் ஒருவர் தற்போது பட்டாளத்தில் "லெப்டினன்ட் கர்னல்" என்னும் பெரும் பதவியில் இருக்கிறார்.

9. பொதுவாய்க் கிராமங்களைவிட நகரங்களிலேயே சிறுவர் குற்றம் மிகுந்துள்ளது. எனவே, குற்றக்குணம் படைத்தவர்களும், சோம்பலாய்த் திரிபவர்களும், தீயவழியில் செல்லாது நல்ல பயிற்சியும் பொழுதுபோக்கும் பெற, நகரங்களில் '*சிறுவர் மன்றங்க*'ளைப் * போலீசார் நிறுவி வருகின்றனர். இவ்வித மன்றங்கள் இங்கிலாந்து, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, நியூ சவுத்வேல்ஸ் முதலிய நாடுகளில் பெருவெற்றி பெற்றுள்ளன. குறிப்பாக, நியூ சவுத்வேல்ஸ் என்னும் நாட்டில் இத்தகைய சிறுவர் மன்றங்களால் சிறுவர் குற்றம் நாற்பது சதவிகிதம் குறைந்திருப்பதாய் அறிவிக்கப்பட்டுள்ளது.

10. நம் நாட்டிலும் முதன் முதலில் இந்தச் சிறுவர் மன்றங்கள் இமாசலப் பிரதேசத்தில் நிறுவப்பட்டன.

---

* Boys' Clubs.

பின்னர் இம்முயற்சியை மற்ற மாகாணங்களும் பின் பற்றின. நமது சென்னை இராச்சியத்தில் ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் சிறுவர் மன்றம் நிறுவப்பட்டுள் ளது. அம்மன்றங்கள் அரும்பணி ஆற்றிவருகின்றன. வசதியற்ற சிறுவர்களுக்கு நல்ல வழியில் பொழுதுபோக்கு விளையாட்டுக் கருவிகளும், நூலகங்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. சிறுவர்கள் சோம்பல் இல்லாது சுறுசுறுப்பாய்த் தங்கள் ஓய்வு நேரத்தைக் கழிக்கின்றனர். இத்தகைய சிறந்த ஏற்பாடுகளைச் செய்து நல்வழி வகுத் துக் கொடுப்பதால், அச்சிறுவர்கள் யாவரும் திருந்திச் சிறப்புறுவதுடன், "உங்கள் நண்பரான" போலீசாரைத் தங்கள் நண்பராகவும் கருதுகின்றனர்.

## அருஞ்சொற்பொருள்

அணிகலம் - சிறப்பு, அழகு. சீர் - செம்மை, ஒழுங்கு. ஏது - காரணம். வீம்பு - பிடிவாதம். காளை-எருது ; எருது போன்ற இளைஞனை இங்குக் குறிக்கிறது. பேணும் - பாதுகாக்கும். பயின்ற வர் - படித்தவர்.

## கேள்விகள்

1. "அப்பொழுதுதான் நம் வாழ்வும் நம்மவர் வாழ்வும் வளம் பெறும்."—எப்பொழுது ?
2. சிறுவர் ஏன் குற்றவாளிகளாய் மாறுகின்றனர் ?
3. சிறுவர் பெற்றோரால் கெடுகின்றனர் என்பது எவ்வாறு பொருந்தும் ?
4. இளங்காளை ஏன் தன் தாயின் மூக்கைக் கடித்துவிட்டான்?
5. சிறுவர் குற்றத்திற்குத் தூண்டுகோல்கள் எவை ?
6. அரசாங்கம் குற்றம் புரியும் சிறுவர்களை எவ்வாறு திருத்தி வருகிறது ?
7. சிறுவர் மன்றங்கள் செய்துவரும் தொண்டு யாது ?

## பயிற்சி

1. கீழ்வருவனவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத் துக் கூறுக :— அதிர்ச்சி, நேர்மை, நல்வாழ்வு, சீர்கேடு, தூக்கு மேடை, போதிய, பொழுதுபோக்கு, நூலகம், இத்தகைய.

2. சிறுவர் எங்ஙனம் குற்றம் புரியும் நிலையை அடைகின்றனர் என்பதை விளக்கி ஒரு கட்டுரை எழுதுக.

3. குற்றம் புரியும் சிறுவரை நல்வழிப்படுத்த அரசாங்கம் மேற் கொண்டுள்ள வழிகளை விளக்கி ஒரு கட்டுரை வரைக.

4. நீ அறிந்துள்ள குற்றம் புரியும் சிறுவருள் ஒருவனைப் பற்றியோ, சிலரைப்பற்றியோ விளக்கி ஒரு கட்டுரை எழுதுக.

# 21. நள்ளியின் கொடைத்தன்மை

(நாடகக் காட்சி)



## முதற் காட்சி

[வன்பரணர் என்பவர் சங்ககாலப்புலவர். அவர், மனைவி, பிள்ளைகள் மூவர் ஆக ஐவரும் பழுமரத்தை நாடிச் செல்லும் பறவைகளைப் போல் பரிசில் அளிக்கும் வள்ளலை நாடி வழிநடந்தனர். சேய்மையில் வானுற ஓங்கிய மலையொன்று காணப்பட்டது. அதனை அடுத்துப் பெருங்காடொன்று அமைந்திருந்தது. புலவரும் அவர் குடும்பத்தினரும் அம்மலையை நோக்கிச் சென்றுகொண்டிருந்தனர்.]

***மூத்த மகன்:*** அப்பா, அம்மலைச்சரிவில் தண்ணீர் விழுவதுபோல் தெரிகிறதே! அது என்ன?

***வன்பரணர்:*** அது அருவி எனப்படும். அது மலையிலிருந்து கீழ்நோக்கி விழுகிறது; அங்ஙனம் கீழே விழுந்தவுடன் சிற்றாறுகவோ பேரியாறுகவோ நிலத்தில் பாயும்.

***இரண்டாம் மகன்:*** அப்பா, மலையடிவாரத்தில் சில குடில்கள் இருக்கின்றனவே. அவற்றில் யார் வாழ்கின்றனர்?

*வன்பரணர் :* அந்தக் குடில்களில் மலையையும் மலையை அடுத்த காட்டையும் காவல் புரியும் வேட்டுவர் வாழ்கின்றனர் என்று நினைக்கிறேன்.

*மூத்த மகன் :* அப்பா, மலைக்கும் காட்டுக்கும் காவல் தேவையா ?

*வன்பரணர் :* ஆம் ஆம். காவல் தேவைதான். காவல் இல்லையாயின், மலையிலும் காட்டிலும் உள்ள மரங் களைச் சிலர் வெட்டி எடுத்துச் செல்வர். மலையில் இருக்கும் தேன்கூடுகள் மக்களால் சிதைக்கப் படும். மலையில் விளையும் பழங்கள் முதலியவற்றை யும் சிலர் கவர்ந்து செல்வர்.

*மனைவி :* அருகில் ஊர் இருப்பதாகத் தெரியவில்லையே! எந்த வள்ளல் நமது வறுமையைத் தீர்ப்பானே, தெரியவில்லை.

*வன்பரணர் :* துயரப்படாதே, கடவுள் காப்பார்.

*மூத்த மகன் :* அப்பா, இக்காட்டில் வெயிலின் வெப்பமே தெரியவில்லையே !

*வன்பரணர் :* ஆம். இங்கு மரங்கள் நெருக்கமாக வளர்ந்துள்ளன. அதனால் மரங்களின் நிழல் மிகுதியாக இருக்கிறது. இத்தகைய காடு, மரங்கள் அடர்ந்த காடு எனப்படும்.

*மூன்றும் மகன் :* அம்மா, பசி வயிற்றைக் கிள்ளுகிறது. (அழுதல்.)

*தாயார் :* உன் பசியைப்பற்றி அப்பாவிடம் சொல்.

*வன்பரணர் :* அவன் சொன்னது காதில் விழுந்தது. (பையனைப்பார்த்து) தம்பி, எங்களுடன் நடந்துவா. விரைவில் உன் பசி தீரும் ; எங்கள் பசியும் தீரும். (மேலும் வழி நடத்தல்.)

*தாயார் :* அங்குப் பாருங்கள், எவனே ஒரு மனிதன் வருகிறுன்.

(*அந்த அம்மையார் காட்டிய திசையை எல்லோரும் பார்த்தல்.*)

**வன்பரணர் :** ஆம். அதோ ஒருவன் வருகிருன். அவன் கையில் வில்லும் அம்பும் இருக்கின்றன. அவனது தோற்றமும் உடையும் அவன் வேட்டுவன் என்பதை உணர்த்துகின்றன. அவன் இந்த மலைநாட்டினனே, அல்லது எந்நாட்டினனே தெரியவில்லை. அவன் நம் பசியைப் போக்கக் கடவுளால் அனுப்பப்பட்டவன் என்று நினைக்கிறேன்.

**தாயார் :** உங்கள் எண்ணப்படி நடப்பது நல்லது.

## இரண்டாம் காட்சி

[வில்லும் அம்பும் ஏந்தி வந்தவன் அம்மலைநாட்டுத் தலைவனை நள்ளி என்பவன். அவன் தோட்டிமலை நாட்டுத் தலைவன். அவன் புலவரையும் அவர் குடும்பத்தினரையும் கண்டு முகமலர்ச்சியோடு நெருங்குதல்.]

**நள்ளி :** ஐயா, நீங்கள் யார் ? எங்குச் செல்கின்றீர் ?

**புலவர் :** ஐயா, யான் ஒரு புலவன். இவள் என் மனைவி. இவர்கள் எம் மக்கள். எங்கள் வறுமையைத் தொலைக்கும் வள்ளலை நாடிச் செல்கின்ருேம்.

**நள்ளி :** (முகமலர்ச்சியுடன்) நீங்கள் புலவரா! மிக்க மகிழ்ச்சி. எல்லோரும் இம்மரத்தடியில் இருங்கள் ; பசியாறிச் செல்லலாம்.

[புலவர் குடும்பத்தினர் ஒரு மரத்தடியில் அமர்ந்தனர். நள்ளி எங்கோ சென்ருன் ; மான் இறைச்சியைக் கொண்டுவந்தான் ; தீக்கடை கோலால் தீயை உண்டாக்கினான் ; மான் இறைச்சியைத் தீயில் பதப்படுத்தினான் ; பதப்படுத்தப்பட்ட இறைச்சியைப் பலா இலையின்மீது வைத்துப் புலவர் குடும்பத்தாரை உண்ணும்படி வேண்டினான். அவன் தன்னிடமிருந்த பழங்களையும் உண்ணக் கொடுத்தான். புலவர் குடும்பத்தினர் இறைச்சியையும் பழங்களையும் உண்டனர் ; அருகிலிருந்த அருவிநீரைப் பருகினர். அவர்தம் முகங்கள் அன்று மலர்ந்த தாமரையெனப் பொலிவுற்றன.]

**வன்பரணர் :** ஐயா, நீங்கள் எமது பசியைப் போக்கக் கடவுளால் அனுப்பப்பட்டவர் என்பதை, உங்களைச் சேய்மையில் கண்டவுடனே, இவர்களிடம் கூறி

னேன். என் கூற்று உண்மையாயிற்று. உங்களுக்கு எங்கள் நன்றியை எவ்வாறு தெரிவிப்போம்!

***நள்ளி :*** புலவரே, நாம் இப்போது காட்டில் இருக்கிறோம். ஆதலால் உங்களுக்குச் சிறந்த உணவு கொடுக்க என்றால் இயலவில்லை. யான் தமிழ்ப்புலவர்களை மகிழ்விப்பதில் மகிழ்ச்சி காண்பவன். உங்களுக்குப் பெருஞ் செல்வத்தையும் விலையுயர்ந்த அணிகலன்களையும் கொடுக்க விரும்புகிறேன். ஆயின், அவை என்னிடம் இல்லை. யான் காட்டு நாட்டில் வாழ்பவன்; ஆதலால் என் முத்து வடங்களையும் கடகத்தையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

(நள்ளி கொடுத்தவற்றைப் புலவர் பெற்றுக்கொள்ளுதல்)

***வன்பரணர் :*** அண்ணலே, உங்களது நாடு எது?

(நள்ளி பதில் கூறுதிருத்தல்)

***வன்பரணர் :*** உங்கள் பெயர் யாது?

(நள்ளி பதில் உரையாதிருத்தல்)

***வன்பரணர் :*** நீங்கள் என் கேள்விகளுக்குப் பதில் கூறவில்லையே?

[நள்ளி முகமலர்ச்சியோடு புலவரை நோக்கிக் கைகுவித்து வணங்கிவிட்டுக் காட்டில் மறைந்துவிடுதல்]

***தாயார் :*** இந்த மனிதர் மிகவும் நல்லவர். ஆயினும் தாம் இன்னவர்-இன்ன நாட்டினர் என்றும் சொல்லாமல் சென்றுவிட்டனரே!

***வன்பரணர் :*** பண்புகளால் உயர்ந்தவர் தம் பெயரையும் நாட்டையும் பறை சாற்றார்.

***முதல் மகன் :*** நீங்கள் சொல்வதைப் பார்த்தால் இவர் ஒரு பெரிய மனிதர் என்றே கூறவேண்டும்போல் இருக்கிறதே!

***வன்பரணர் :*** இவர் உண்மையில் பெரியவரே.

## மூன்றாம் காட்சி

(வழியில் ஒரு வேடன் வருதல்)

***வன்பரணர் :*** (வேடனைப் பார்த்து) அப்பா, வில்லையும் அம்பையும் உடைய ஒரு தனி மனிதனைச் சற்று முன் வழியில் கண்டாயா?

***வேடன் :*** ஆம். கண்டேன்.

***வன்பரணர் :*** அப்பெருமகன் யார்?

***வேடன் :*** ஐயா, அவர் தாம் இக்காட்டு நாட்டுத் தலைவர். இந்தத் தோட்டிமலையும் அவருடையதே.

***வன்பரணர் :*** (வியப்புடன்) அப்படியா! அவர் பெயர் யாது?

***வேடன் :*** அவர் பெயர் ***கண்டீரக்கோப் பெருநள்ளி*** என்பது. அப்பெயர் ***நள்ளி*** என்று சுருக்கமாகவும் வழங்கப்பெறும்.

***தாயார் :*** அப்படியா! அவர் மிகவும் நல்லவர்.

***வேடன் :*** அம்மா, அவர் தாய்மொழிப் பற்று மிகுந்தவர்; தமிழ்ப்புலவர்களைத் தம் உயிர்போல் பாதுகாப்பவர்; அவர்களுக்கு எதையும் வழங்குபவர்; அறநெறி தவறாதவர்; ஆண்மையில் சிறந்தவர்; குடிமக்களாகிய நாங்கள் அவரை எங்கள் கண்கண்ட கடவுளாகக் கருதி வழிபடுகிறோம்.

***வன்பரணர் :*** (வேடனைப் பார்த்து) அப்பா, கடவுள் நம் போன்ற ஏழை மக்களைக் காக்கவே இத்தகைய நல்லவர்களைப் படைத்துள்ளார். நள்ளி என்னும் இப்பெருமகனது புகழ் தமிழ்மொழி உள்ளளவும் வாழும். இப்பெரியவர் எனக்குச் செய்த நன்மையைப் பாராட்டிப் பாடுவேன். என் பாடல்கள் இவருடைய பெயரையும் புகழையும் நிலைநிறுத்தும்.

***வேடன்:*** ஐயா, அப்படியே செய்யுங்கள். எங்கள் தலைவர் பெயர் நிலைத்திருப்பது போலவே உங்கள் பாடலால் உங்கள் பெயரும் நிலைத்திருக்கும் அல்லவா?

[வேடன் வணங்கிச் செல்லல். புலவரும் அவர் குடும்பத்தினரும் வழிநடத்தல்.]

*காட்சி முற்றிற்று.*

## அருஞ்சொற்பொருள்

குடில் - குடிசை. கவர்ந்து - அபகரித்து. வள்ளல் - கொடையாளி. அணிகலன் - நகை. அண்ணல் - பெருமைக்குணமுடையவன். பண்பு - குணம். பறைசாற்றுர் - பலரறிய வெளிப்படுத்தார். சற்று முன் - சிறிது நேரத்திற்குமுன். வன்பரணர் நள்ளியைப்பற்றிப் பாடிய பாடல்கள் புறநானூறு என்னும் சங்கநூலில் இருக்கின்றன.

## கேள்விகள்

1. நள்ளி எந்த மலைநாட்டுக்குத் தலைவன்?
2. நள்ளி புலவர் குடும்பத்ினரை எவ்வாறு உண்பித்தான்?
3. நள்ளி புலவர்க்கு ஈந்தவை யாவை?
4. புலவர் நள்ளியின் பெயரையும் புகழையும் எங்ஙனம் நிலைநிறுத்திஞர்?

## பயிற்சி

1. சேர்த்துக் கூறுக:—மலை + சரிவு, எடுத்து + செல்வர், வயிறு + ஐ, எ + நாடு, மலைக்கு + தலைவன், இறைச்சியை + கொண்டு, உண்ண + கொடுத்தான்.

2. பிரித்துக் காட்டுக:—நாட்டுத்தலைவர், தமிழ்ப்புலவர், முகமலர்ச்சி, மலையடிவாரம், நெருக்கமாக, இத்தகைய, உண்மையாயிற்று.

3. வன்பரணர் இப்பாடச் செய்தியைக் கூறுவதுபோலக் கூறுக.

4. நள்ளி இப்பாடச் செய்தியைச் சொல்லுவதுபோலச் சொல்லுக.

5. வன்பரணர், நள்ளி—இவர்களைப்பற்றிய உன் கருத்தைத் தனித்தனியே பதினைந்து வரிகளுள் எழுதுக.

# செய்யுள்

## I. வாழ்த்து

### தேவாரம்

1. கோடி தீர்த்தங் கலந்து குளித்தவை
ஆடி னாலும் அரனுக்கன் பில்லையேல்
ஓடு நீரினை ஓட்டைக் குடத்தட்டி
மூடி வைத்திட்ட மூர்க்கனோ டொக்கும்.

### நாலாயிர திவ்வியப் பிரபந்தம்

2. வேங்கடமும் விண்ணகரும் வெஃகாவும், அஃகாத
பூங்கிடங்கில் நீள்கோவல் பொன்னகரும்,—
நான்கிடத்தும்
நின்றா னிருந்தான் கிடந்தான் நடந்தானே,
என்றால் கெடுமா மிடர்.

### திருமதினக் கலம்பகம்

3. மாக்கட் கறிவளித்த மாக்கருணைத் தாய்போல்வாய்
ஆக்கத் துடைமதினத் தண்ணல்பால்—ஏக்கற்று
வேண்டும் பயன்கிடைப்பான் வேண்டற்
யாண்டுந் தயையோ டருள். [கருள்வாக்கை

### தேம்பாவணி

4. தந்தை நோக நுணர்வின்றித்
தவறு நின்ற பிள்ளைகள்தம்
சிந்தை நோகப் பணிந்தடுத்தாற்
சினந்த தாதை யகற்றுவனோ
நிந்தை யாகப் பிழைத்தெனினும்
நினக்கோர் பிள்ளை யாயவெமக்(கு)
எந்தை யாக நீயென்றும்
இரங்கா முனிவ தாங்கொல்லோ.

## அருஞ்சொற்பொருள்

1. தேவாரம்—தே+ஆரம்=தேவனுக்குரிய பாமாலை. 'கோடி தீர்த்தம்' என்று தொடங்கும் பாடலைப் பாடியவர் திருநாவுக்கரசர். இவர் காலம் கி. பி. 7-ஆம் நூற்றாண்டு. தீர்த்தம் - புண்ணிய ஆறுகளும், குளங்களும், கடல்களும். அரன் - சிவபெருமான். அட்டி - அடைத்து. மூர்க்கன் - அறிவிலி.

2. நாலாயிர திவ்வியப் பிரபந்தம் : ஆழ்வார் பன்னிருவர் திருமால் பற்றிப் பாடிய நாலாயிரம் பாக்கள் கொண்ட நூல். இங்குள்ள பாடல் பொய்கையாழ்வார் பாடியது. இவர் காலம் கி. பி. 7-ஆம் நூற்றாண்டு என்னலாம். வேங்கடம்-திருப்பதி. விண்ணகர்-வைகுந்தம். வெஃகா-காஞ்சியிலுள்ள திருவெஃகா என்னும் பெருமாள் கோவில். அஃகாத-குறையாத. கிடங்கில் - அகழி. கோவல்-திருக்கோவல். பொன்னகர்-திருக்கோவலூரில் உள்ள திருமால் கோவில். திருமால் திருப்பதி மலைமீது நின்றான்; வைகுந்தத்தில் இருந்தான்; திருவெஃகாவில் கிடந்தான்; கோவல் பொன்னகரில் நடந்தான். இவை திருமாலுக்குரிய நான்கு திருக்கோலங்கள். கிடந்தான் - படுத்தான். இடர் - துன்பம்.

3. மதீனம் : அரேபியாவிலுள்ள மதீனா நகரம். முகமது நபி நாயகம் மக்கா, மதீனா முதலிய நகரங்களில் சமய அறவுரைகள் ஆற்றினார். ஆதலால் இந்நகரங்கள் முஸ்லிம்களால் சிறந்த நகரங்களாகக் கருதப்படுகின்றன. கலம்பகம் - பலவகைப் பாடல்கள் நூறு கொண்ட சிறு நூல். இதனைப் பாடியவர் திரிசிரபுரம் ஆ. க. பிச்சை இபுராஹிம் புலவர் என்பவர். இவர் காலம் கி. பி. 20-ஆம் நூற்றாண்டு. மாக்கள் - ஐயறிவினர்; ஆறும் அறிவைப் பயன்படுத்தாத மக்கள் எனினும் பொருந்தும். மா - சிறந்த. கருணை - இரக்கம். போல்வாய் - போன்றவனே. ஆக்கம் - செல்வம், வளர்ச்சி. அண்ணல் - முகமது நபி. ஏக்கற்று - தாழ்ந்து. கிடைப்பான் - கிடைப்பதற்கு.

4. தேம்பாவணி : தேம்பா+அணி=வாடாத பாமாலை. இது இயேசுநாதரின் வளர்ப்புத் தந்தையான சூசையப்பரது வரலாற்றைக் கூறும் பெரும் நூல். இதனைப் பாடியவர் வீரமாமுனிவர் என்னும் மேனாட்டுப் பாதிரியார். இவர் காலம் கி. பி. 17-ஆம் நூற்றாண்டின் இறுதியும் 18-ஆம் நூற்றாண்டின் முற்பாதியும் ஆகும். இங்குள்ள பாடல், சூசையப்பர் இறைவனை நோக்கிப் பாடுவதாக அமைந்துள்ளது. உணர்வு இன்றி - உணர்ச்சி இல்லாமல். தவறு நின்ற - பிழை செய்த. அடுத்தால் - தந்தை அடியில் வீழ்ந்தால். அகற்றுவனோ - தள்ளுவானோ. நிந்தையாக - உன்னை நிந்தித்து. பிழைத்து - குற்றம் செய்து. முனிவது - கோபப்படுவது.

### கேள்விகள்

1. திருநாவுக்கரசர் தமது பாடலில் மூர்க்கனைப்பற்றி ஏன் குறிப்பிடுகிறார் ?

2. பொய்கையாழ்வார் நமது இடர் கெடுவதற்குக் கூறும் அறிவுரை யாது ?

3. பிச்சை இபுராஹிம் புலவர் இறைவனை வேண்டுவது யாது?

4. சூசையப்பர் இறைவனை நோக்கி யாது கூறுகிறார் ?

### பயிற்சி

1. பிரித்துக் காட்டுக :—குளித்தவை, அன்பில்லை, குடத்தட்டி, நான்கிடத்தும், அறிவளித்த, உணர்வின்றி, நினக்கோர்.

2. சேர்த்துக் கூறுக :—விண் + நகர், பூ + கிடங்கில், மதீனம் + கலம்பகம், மா + கருணை, மதினத்து + அண்ணல், வேண்டற்கு + அருள், வைத்து + இட்ட, மூர்க்கனொடு + ஒக்கும், பொன் + நகர்.

3. திருவேங்கடம் அல்லது திருக்கோவலூர் பற்றி (நூல்களைப் படித்தோ, ஆசிரியரைக் கேட்டோ, விவரம் அறிந்து) ஒரு கட்டுரை வரைக.

4. மதினத்தண்ணல் வரலாற்றை ஒரு கட்டுரையாக எழுதுக.

# II. அறவுரை

## 1. திரிகடுகம்

### எல்லார்க்கும் துன்பம் தருவன

1. ஆசை பிறன்கட் படுதலும் பாசம்
பசிப்ப மடியைக் கொளலும்—கதித்தொருவன்
கல்லானென் றெள்ளப் படுதலும் இம்மூன்றும்
எல்லார்க்கும் இன்னா தன.

### தூயவர் செய்கை

2. உண்பொழுது நீராடி யுண்டலும் என்பெறினும்
பால்பற்றிச் சொல்லா விடுதலும்—தோல்வற்றிச்
சாயினுஞ் சான்றாண்மை குன்றாமை இம்மூன்றும்
தூஉய மென்பார் தொழில்.

### பயனற்றவற்றைச் செய்பவர்

3. வெல்வது வேண்டி வெகுண்டுரைக்கு நோன்பிலியும்
இல்லது காமுற் றிருப்பானும்—கல்விச்
செவிக்குற்றம் பார்த்திருப் பானுமிம் மூவர்
உமிக்குற்றிக் கைவருந்து வார்.

### என்றும் புகழுடையவர்

4. தன்னச்சிச் சென்றாரை யெள்ளா வொருவனும்
மன்னிய செல்வத்துப் பொச்சாப்பு நீத்தானும்
என்றும் அழுக்கா றிகந்தானும் இம்மூவர்
நின்ற புகழுடை யார்.

### தலையாய பண்புகள்

5. பல்லவையுள் நல்லவை கற்றலும் பாத்துண்டாங்(கு)
இல்லற முட்டா தியற்றலும்—வல்லிதில்
தாளி னொருபொருள் ஆக்கலும் இம்மூன்றும்
கேள்வியுள் எல்லாந் தலை.

## அருஞ்சொற்பொருள்

திரிகடுகம் :—சுக்கு, மிளகு, திப்பிலி என்னும் மூன்றும் கொண்டு செய்யப்பட்ட பொடி. இது உடம்பிற்கு நலத்தைச் செய்யும். அது போலவே மும்மூன்று நீதிகளைக் கொண்ட ஒவ்வொரு வெண்பாவும் மனித வாழ்வுக்குப் பயன்படுவது. ஆதலால் இந்நூல் திரிகடுகம் எனப் பட்டது. இந்நூலில் 102 செய்யுட்கள் உள்ளன. இதன் ஆசிரியர் நல்லாதனர் என்பவர். இவர் காலம் கி. பி. 6 அல்லது 7-ஆம் நூற்றுண்டு என்னலாம்.

1. பிறன்கண் - வேருருவரிடம் உள்ள பணத்துக்கு. பாசம் - சுற்றத்தார். மடி - சோம்பல். கதித்து - வெகுண்டு, கோபித்து.

2. என் பெறினும் - எப்பயனைப் பெறினும். பால் - ஒரு சார்பு. தோல் - உடம்பு. சான்றுண்மை – நற்பண்புகளை ஆளும் தன்மை. தூஉயம் - தூய்மை உடையோம்; தன்மைப்பன்மை வினைமுற்று. தூஉயம் - அளபெடை.

3. நோன்பிலி - தவமில்லாதவன். இல்லது - தனக்கு உரிமை யில்லாதது.

4. நச்சி - விரும்பி. எள்ளா - இகழாத. மன்னிய - பொருந்திய. பொச்சாப்பு - செல்வத்தைப் பாதுகாத்தல். நீத்தான் - விட்டான். அழுக்காறு - பொருமை. இகந்தான் - விட்டான். நின்ற - நிலைத்த.

5. பல்லவை=பல்+அவை – பல சபைகள். நல்லவை - நல்ல நூல்கள். பாத்து - பகுத்து. முட்டாது - தடையில்லாமல். தாள் - முயற்சி. கேள்வியுள்–தான் கேட்ட நற்பண்புகளுள். தலை–சிறந்தவை.

### கேள்விகள்

1. எல்லார்க்கும் இன்னுதன யாவை?
2. தூய்மையுடையார் தொழில்கள் யாவை?
3. உமிக் குற்றுக் கைவருந்துவார் யார்?
4. நின்ற புகழுடையார் எவர்?
5. "கேள்வியுள் எல்லாம் தலை"—யாவை?

### பயிற்சி

1. கீழ்வருவனவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறுக :—மடி, எள்ளப்படுதல், சான்றுண்மை, வெகுண்டு, பொச்சாப்பு, அழுக்காறு, முட்டாது, தாள்.

2. கீழ்வருவனவற்றை உச்சரித்து அவற்றுக்குப் பொருள் கூறுக :—எல்லா—எள்ளா, செரு—செறு, பலம்—பழம், கோல்—கோள், உன் புத்தகம்—சோற்றை உண், என் பெறினும்—எண், தோல்—தோள், வேல்—வேள், கல்லி—கள்ளி, புகல்—புகழ்.

3. பிரித்துக் காட்டுக :—கதித்தொருவன், தூஉயமென்பார், வெகுண்டுரைக்கும், நோன்பிலி, செவிக்குற்றம், இம்மூவர், பல்லவை, நல்லவை, முட்டாதியற்றல்.

4. மேல் வந்துள்ள ஐந்து செய்யுட்களின் திரண்ட பொருளைக் கூறுக.

## 2. பழமொழி நானூறு

### கல்வி

1. ஆற்றும் இளமைக்கண் கற்கலான் மூப்பின்கண்
போற்றும் எனவும் புணருமோ—ஆற்றச்
சுரம்போக்கி உல்குகொண்டார் இல்லையே இல்லை
மரம்போக்கிக் கூலி கொண்டார்.

### ஒழுக்கம்

2. கெடுவல் எனப்பட்ட கண்ணும் தனக்கோர்
வடுவல்ல செய்தலே வேண்டும்—நெடுவரை
முற்றுநீர் ஆழி வரையகத்து ஈண்டிய
கல்தேயும் தேயாது சொல்.

### இன்னா செய்யாமை

3. தோற்றத்தால் பொல்லார் துணையில்லார் நல்கூர்ந்தார்
மாற்றத்தால் செற்றார் எனவலியார் ஆட்டியக்கால்
ஆற்றா தவரழுத கண்ணீர் அவைஅவர்க்குக்
கூற்றமாய் வீழ்ந்து விடும்.

### சான்றோர் இயல்பு

4. கற்றதொன் றின்றி விடினும் குடிப்பிறந்தார்
மற்றொன் றறிவாரின் மாணமிக நல்லரால்
பொற்ப உரைப்பான் புகவேண்டா கொற்சேரித்
துன்னூசி விற்பவர் இல்.

5. தெற்றப் பகைவர் இடர்ப்பாடு கண்டக்கால்
மற்றுங்கண் ணோடுவர் மேன்மக்கள்—தெற்ற
நவைக்கப் படுந்தன்மைத் தாயினும் சான்றோர்
அவைப்படின் சாவாது பாம்பு.

## அருஞ்சொற்பொருள்

பழமொழி நானூறு :—இது நானூறு பாக்களைக் கொண்ட நூல். ஒவ்வொரு பாவிலும் ஒரு பழமொழி இடம் பெற்றுள்ளது. அப் பழமொழியை நிலைநாட்ட அச்செய்யுளில் விளக்கம் தரப்பட்டுள்ளது. இதன் ஆசிரியர் முன்றுறை அரையனார் என்பவர். இவர் காலம் கி. பி. ஆறு அல்லது ஏழாம் நூற்றாண்டு என்னலாம்.

1. ஆற்றும் - கல்வியைக் கற்பதற்குரிய. கற்கலான் - கல்லாதவன். மூப்பு - முதுமை. போற்றும் - கற்பான். புணருமோ - சொல்லுதல் கூடுமோ. ஆற்ற – மிகவும். சுரம் - வழி. போக்கி - கடக்கவிட்டு. உல்கு - சுங்கம், தீர்வைப் பொருள். மரம் - ஓடம். போக்கி - செலுத்தி நிறுத்திய பின்.

2. கெடுவல் - யான் கெடுவேன் ; தன்மை ஒருமை வினைமுற்று. கண் - இடம். வடு - குற்றம். வரை - மலை. முற்றும் - சூழப்பட்ட. ஆழி - கடல். வரையகம் - வரையறுக்கப்பட்ட நிலத்தில். ஈண்டிய கல் - நெருங்கிய கல்.

3. தோற்றம் - குடிப்பிறப்பு. பொல்லார் - தீய செயல்களைச் செய்பவர். நல்கூர்ந்தார் – வறுமையுடையார். மாற்றம் – சொல். செற்றார்- பகைவரை ஒத்தவர். என - என்று நினைத்து. வலியார் - உயர்ந்த குடிப்பிறப்பு, துணை, செல்வம் முதலிய வலிமையுடையவர்.

4. ஒன்று - கல்வி. மாண - நற்குணங்களில் மாட்சிமைப்பட. பொற்ப - அழகுபட. உரைப்பான் - எடுத்துக்கூற. கொல் - கொல்லர். சேரி – வாழ்விடம். துன் ஊசி - தையல் ஊசி. துன் - தை.

5. தெற்ற - தெளிவாக அறியப்பட்ட. கண்ணோடுவர் - இரக்கம் காட்டுவர். நவை - குற்றம், துயரம்.

### கேள்விகள்

1. இளமையில் கல்வி கற்பதே முறை என்பதை விளக்கும் பழமொழிகள் எவை?
2. " கல் தேயும் தேயாது சொல் " என்னும் பழமொழி எதனை விளக்க வந்தது ?
3. " தோற்றத்தால் " என்று தொடங்கும் செய்யுளின் கருத்து யாது ? அதில் அமைந்துள்ள பழமொழி யாது ?
4. " கொற்சேரி துன்னூசி விற்பவர் "—இப்பழமொழியின் பொருள் யாது ? இது ஏன் கூறப்பெற்றது ?
5. மேன்மக்களின் இயல்பு யாது ?

### பயிற்சி

1. பொருள் கூறுக:—உல்கு, அறம், வடு, ஆழி, ஈண்டிய, செற்ருர், கூற்றம், குடிப்பிறந்தார், கொற்சேரி, துன்னூசி, சான்ருேர்.

2. கீழ்வருவனவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறுக :—இளமைக்கண், நெடுவரை, நல்கூர்ந்தார், குடிப்பிறந்தார், இடர்ப்பாடு, மேன்மக்கள், சான்ருேர்.

3. இவ்வைந்து பாடல்களிலுமுள்ள பழமொழிகளைக் கூறுக.

4. இவ்வைந்து செய்யுட்களின் திரண்ட பொருளினை எழுதிக் காட்டுக.

## 3. நாலடியார்

### பொறையுடைமை

1. வேற்றுமை யின்றிக் கலந்திருவர் நட்டக்கால்
தேற்ரு ஒழுக்கம் ஒருவன்கண் உண்டாயின்
ஆற்றுந் துணையும் பொறுக்க பொறுனுயின்
தூற்ருதே தூர விடல்.

### தீவினையச்சம்

2. பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்
வரிசை வரிசையா நந்தும் ;—வரிசையால்
வானூர் மதியம்போல் வைகலும் தேயுமே
தானே சிறியார் தொடர்பு.

### கல்வியின் சிறப்பு

3. இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்ருல்
தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்ருல்
எம்மை யுலகத்தும் யாங்காணேம் கல்வியோல்
மம்மர் அறுக்கும் மருந்து.

### குடிப்பிறப்பு

4. இனநன்மை இன்சொல்ஒன் றீதல்மற் றேனை
மனநன்மை என்றிவை யெல்லாம்—கனமணி
முத்தோ டிமைக்கு முழங்குவரித் தண்சேர்ப்ப!
இற்பிறந்தார் கண்ணே யுள.

## நல்லினம் சேர்தல்

5. அறிமின் அறநெறி; அஞ்சுமின் கூற்றம்;
பொறுமின் பிறர்கடுஞ்சொல்; போற்றுமின் வஞ்சம்;
வெறுமின் வினைதீயார் கேண்மை; எஞ் ஞான்றும்
பெறுமின் பெரியார்வாய்ச் சொல்.

## அருஞ்சொற்பொருள்

நாலடியார் - நான்கு அடிகளைக் கொண்ட நானூறு பாக்களை உடைய நூல். இது சிறந்த நீதிநூலாதலால் மரியாதைக்குரிய 'ஆர்' விகுதி கொடுக்கப்பட்டது. இந்நூல் சமண முனிவரால் பாடப்பட்டது. இதன் காலம் கி. பி. 6 அல்லது 7 ஆம் நூற்ருண்டு என்னலாம்.

1. நட்டக்கால் - நேசித்தால். நள் - பகுதி. தேற்ரு ஒழுக்கம் - தெளியப்படாத தவருன ஒழுக்கம். ஆற்றுந்துணை - பொறுக்கும் அளவு. தூரவிடல் -அவனது நட்பை நெடுந்தொலைவில் விட்டுவிடுக.

2. கேண்மை - நட்பு. நந்தும் - வளரும். பெரியவர் - கல்வி கேள்விகளில் சிறந்தவர். வைகலும் - ஒவ்வொருநாளும். வானூர் மதியம்-வானத்தில் திகழும் முழுத்திங்கள். தொடர்பு - நட்பு.

3. இம்மை - இம்மைப்பயன். இம்மை - இப்பிறப்பு. இன்று - இல்லை; இது ஒன்றன்பால் வினைமுற்று. தம்மை விளக்கும் - படித்த வரை அறிவாலும் புகழாலும் விளங்கச்செய்யும். காணேம் - தன்மைப் பன்மை வினைமுற்று. மம்மர் - மயக்கம், அறியாமை.

4. இனநன்மை - நல்லவர் கூட்டுறவு. மன நன்மை - மனத் தூய்மை. கனமணி - சிறப்புடைய மாணிக்கம் முதலிய மணிகள். உவரி - கடல். தண் - குளிர்ச்சியான. சேர்ப்ப - துறைவனே. இல் - நற்குடி. கண்ணே - இடமே, ஏழாம் வேற்றுமை உருபு. உள- அமைந்திருக்கின்றன.

5. அறிமின் - அறிந்து ஒழுகுங்கள், முன்னிலைப் பன்மை வினை முற்று. கூற்றம் - எமன். போற்றுமின் - காத்துக்கொள்ளுங்கள். எஞ் ஞான்றும் - எக்காலத்திலும்.

## கேள்விகள்

1. நண்பனிடம் தேற்ரு ஒழுக்கம் காணப்படின் நாம் என்ன செய்யவேண்டும்?
2. பெரியவர் கேண்மைக்கும் சிறியார் தொடர்புக்கும் கூறப்பட்டுள்ள உவமைகள் யாவை?

3. கல்வியின் சிறப்பு எங்ஙனம் விளக்கப்பட்டுள்ளது ?
4. நற்குடியில் பிறந்தவரிடம் இருப்பவை யாவை ?
5. 'நல்லினம் சேர்தல்' என்னும் தலைப்பின்கீழ் வந்துள்ள செய்யுளில் கூறப்பட்டுள்ள அறிவுரை யாது ?

### பயிற்சி

1. பிரித்துக் காட்டுக :—கலந்திருவர், பொருளுயின், குறைவின்ருல், கேடின்று, இன்சொல், முழங்குவரி, இற்பிறந்தார், கடுஞ்சொல்.

2. வரிசை வரிசை - அடுக்குத்தொடர். இதுபோன்ற அடுக்குத் தொடர்கள் ஆறினைக் கூறுக.

3. இச்செய்யுட்களிலுள்ள வினைமுற்றுக்களைக் கூறுக.

4. இவ்வைந்து செய்யுட்களின் திரண்ட பொருள்களை எழுதுக.

## 4. திருக்குறள்

### கடவுள் வாழ்த்து

1. அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

2. கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்.

### நீத்தார் பெருமை

3. செயற்கரிய செய்வர் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

4. நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

### அறன் வலியுறுத்தல்

5. சிறப்பீனுஞ் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்
காக்கம் எவனோ வுயிர்க்கு.

6. மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற.

### இல்வாழ்க்கை

7. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

8. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப் படும்.

வாழ்க்கைத் துணைநலம்

9. மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.

10. மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு.

புதல்வரைப் பெறுதல்

11. தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்.

12. மகன்தந்தைக் காற்றும் உதவி யிவன்தந்தை
யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல்.

அன்புடைமை

13. அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.

14. அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்(கு)
என்புதோல் போர்த்த வுடம்பு.

விருந்தோம்பல்

15. இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.

16. விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.

இனியவை கூறல்

17. பணிவுடையன் இன்சொல னாதல் ஒருவற்(கு)
அணியல்ல மற்றுப் பிற.

18. இனிய வுளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

செய்ந்நன்றியறிதல்

19. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல(து)
அன்றே மறப்பது நன்று.

20. எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

## அருஞ்சொற்பொருள்

திருக்குறள்—அழகிய குறள் பாக்களால் ஆன நூல். குறள்—குட்டை. திருக்குறள் 1330 பாக்களையுடையது. இதன் ஆசிரியர் திருவள்ளுவர். இவர் காலம் கி.மு. முதல் நூற்றாண்டு எனலாம்.

1. அகரம் - அ என்ற எழுத்து. ஆதிபகவன் - கடவுள்.

2. என் - யாது. வாலறிவன் - மெய்யுணர்வினை உடையவன், கடவுள்.

3. செயற்கரிய - பிறரால் செய்வதற்கரிய செயல்கள். பெரியர் × சிறியர்.

4. நிறைமொழி - அறிவு நிறைந்த மொழி. நிறைமொழி மாந்தர்- உண்மைத் துறவிகள். மறைமொழி - மந்திரங்கள்.

5. அறன் வலியுறுத்தல் - அறத்தின் சிறப்பை வற்புறுத்தல். சிறப்பு - வீட்டின்பம். ஊங்கு - மிக்க. ஆக்கம் - மேலும் மேலும் உயர்தல்.

6. அனைத்து - அவ்வளவே. பிற - சொல்லும் வேடமும். ஆகுலம் - ஆரவாரம். நீர - தன்மையன.

7. அன்பு - மனைவிமேல் வைக்கும் அன்பு. அறன் - பிறர்க்குப் பகுத்து உண்ணுதலாகிய அறம். அது - அவ்வுடைமை. அன்பு - பண்பாகும். அறம் - பயனாகும்.

8. வையம் - நிலவுலகம். வாழ்வாங்கு - வாழவேண்டும் முறைப்படி. உறையும் - வாழும். தெய்வம் - தேவர். வைக்கப்படும் - ஒருவனாக வைத்து நன்கு மதிக்கப்படுவான்.

9. வாழ்க்கைத்துணை - ஒருவனது வாழ்க்கைக்குத் துணையாகிய மனைவி. நலம் - மனைவியினது நன்மை. மனைத்தக்க - மனை அறத்திற்குத் தகுந்த. மாண்பு - நற்குண நற்செயல்கள். கொண்டான் - மனைவியாகக் கொண்டான். வளத்தக்காள் - வருவாய்க்குத் தக்க வாழ்க்கையுடையவள்.

10. மங்கலம் - நன்மை. மனைமாட்சி - மனைவியின் நற்குண நற்செயல்கள். நன்கலம் - நல்ல நகைகள். பேறு - பெறுதல்.

11. நன்றி - நன்மை. அவை - கற்றவர் அவை. முந்தி - அவரினும் கல்வியில் மிகுந்து. இருப்ப - இருக்கும்படி. செயல் - செய்வது.

12. என்னோற்றான் - இவனைப் பெறுவதற்கு என்ன தவம் செய்தான்.

13. எல்லாம் - எல்லாப் பொருள்களும். என்பும் - பொருள்களாலே அன்றித் தம் உடம்பாலும்.

14. அஃது - அன்பு.

15. இல் இருந்து - மனைவியோடு இல்லத்தில் இருந்து. ஓம்பி - பொருள்களைப் பாதுகாத்து. வேளாண்மை - உபகாரம், உதவி.

16. விருந்து - விருந்தினர். புறத்ததா - வெளியில் இருக்க. சாவா மருந்து - அமிர்தம். வேண்டற்பாற்று - விரும்பத்தக்கது.

17. அணி - அழகு. பணிவு - தாழ்ச்சி. இன்சொலன் - எல்லோரிடத்தும் இனிய சொற்களைப் பேசுபவன். பிற - உடம்பில் அணியப் படும் நகைகள்.

18. இனிய - நன்மை பயக்கும் இனிய சொற்கள். இன்னாத - துன்பம் தரும் சொற்கள். கவர்ந்தற்று - நுகர்ந்ததனோடு ஒப்பாகும். இனிய × இன்னாத. கனி × காய்.

19. நன்றி - உதவி. நன்றல்லது-ஒருவன் செய்த தீமை. அன்றே- செய்த பொழுதே.

20. எந்நன்றி - எத்தகைய பெரிய அறங்கள். உய்வு - பாவத்திலிருந்து நீங்கும் வழி. செய்ந்நன்றி - ஒருவன் செய்த உதவி.

## கேள்விகள்

1. திருவள்ளுவர் 'கடவுள் வாழ்த்து' என்னும் தலைப்பில் கூறுவது யாது?
2. வள்ளுவர் நீத்தார் பெருமையை எப்படி விளக்குகிறார்?
3. அறம் என்பது யாது? அதன் பயன் என்ன?
4. இல்வாழ்க்கை எங்ஙனம் அமைதல் வேண்டும்?
5. எவள் சிறந்த வாழ்க்கைத்துணைவி யாவாள்?
6. தந்தை, மகன்—இவர்தம் கடமை என்ன?
7. வள்ளுவர் அன்புடைமையை எவ்வாறு வற்புறுத்துகிறார்?
8. இனியவை கூறலின் சிறப்பு யாது?
9. செய்ந்நன்றியறிதல் எங்ஙனம் வற்புறுத்தப்படுகிறது?

## பயிற்சி

1. கடவுள் வாழ்த்து, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல் என்னும் தலைப்புக்களில் வந்துள்ள பாக்களின் கருத்தைக் கூறுக.

2. இல்வாழ்க்கை, வாழ்க்கைத்துணை நலம், புதல்வரைப் பெறுதல் என்னும் தலைப்புக்களில் வள்ளுவர் கூறுவன யாவை?

3. அன்புடைமை, விருந்தோம்பல், இனியவை கூறல் என்னும் தலைப்புக்களில் வந்துள்ள பாடல்களின் கருத்தினைப் புலப்படுத்துக.

# III. கதை

## 1. பெரிய புராணம்

### *கண்ணப்ப நாயனார் புராணம்*

[கடப்பை மாவட்டத்தில் உடுப்பூர் என்பது ஒரு சிற்றூர். அவ்வூரில் வேடர்கள் வாழ்ந்தனர். நாகன் என்பவன் அவர்களுக்குத் தலைவன். அவனுக்குப் பிறந்த மைந்தரே திண்ணனார் என்பவர். அவருக்குத் தலைமைப் பட்டம் கட்டப்பெற்றது. அவர் ஒருநாள் நாகன், காடன் என்ற இருவருடன் வேட்டையாடச் சென்றார்; காட்டில் ஒரு பன்றியை விரட்டிக்கொண்டு, காளத்தி மலைவரையில் சென்றார்; அங்கு அப்பன்றியைக் கொன்றார்; காடன் அப்பன்றி இறைச்சியைப் பக்குவப்படுத்திக்கொண்டிருந்தான். திண்ணனார் காளத்தி மலைமீது ஏறினார். நாகனும் பின் தொடர்ந்தான்.

திண்ணனார், மலைமீது கோவில் கொண்டிருந்த சிவபெருமானை (சிவலிங்கத்தை)க் கண்டு தம்மை மறந்தார்; தாயைத் தழுவும் சேயைப்போல இலிங்கத்தைத் தழுவினார்; பொன் முகரி ஆற்றுக்குச் சென்று தம் வாயால் நீரை நிரப்பிக்கொண்டார். மலர்களைத் தம் தலைமுடியிற் செருகிக்கொண்டார்; பதப்படுத்தப்பட்ட இறைச்சியைக் கையில் எடுத்துக்கொண்டார்; தம் வாய் நீரால் இலிங்கத்தை நீராட்டினார்; மலர்களைத் தூவினார்; இறைச்சியைப் படைத்தார்; "உண்ணும், உண்ணும்" என்று ஊட்டினார்; இலிங்கத்திற்கு மக்களாலும் விலங்குகளாலும் தீங்கு நேராதபடி இரவும் பகலும் அருகில் நின்று காவல் காத்தார். அவரை அழைத்துச் செல்லவந்த பெற்றோர் வருத்தத்துடன் மீண்டனர்.

சிவகோசரியார் என்பவர் ஒரு முனிவர். அவர் ஒவ்வொரு நாளும் காலையில் வந்து சிவலிங்கத்தை நீராட்டிப் பூசிப்பது வழக்கம். திண்ணனார் வேட்டைக்குச் சென்றபோது முனிவர் வந்தார். இறைவன் திரு முன்பு இறைச்சித் துண்டுகளும் எலும்புகளும் இருப்பதைக் கண்டு வருந்தினார்; சிவபெருமானிடம் முறையிட்டார்.

இறைவன் அவரது கனவில் தோன்றித் திண்ணனாரது இறைப் பற்றினை விளக்கினார்; அவரது உண்மை அன்பினை மறுநாள் வந்து மறைந்திருந்து பார்க்கும்படி கூறினார். சிவகோசரியார் மறுநாள் காலையில் வழக்கம்போல் பூசை செய்தார்; பின்பு ஓரிடத்தில் மறைந்திருந்து நடக்கும் நிகழ்ச்சிகளைக் கவனிக்கலானார். சிவபெருமான் திண்ணனாரது அன்பை முனிவருக்குக் காட்ட விரும்பித் தம் கண்களுள் ஒன்றிலிருந்து குருதி வடியும்படி செய்தார்.]

### திண்ணனுர் ஓடிவருதல்

1. அண்ணலார் திருக்கா ளத்தி
அடிகளார் முனிவ னுர்க்குத்
திண்ணனுர் பரிவு காட்டத்
திருநய னத்தில் ஒன்று
துண்ணென உதிரம் பாய
இருந்தனர் தூரத் தேஅவ்
வண்ணவெஞ் சிலையார் கண்டு
வல்விரைந் தோடி வந்தார்.

### திண்ணனுர் பதைப்பு

2. வந்தவர் குருதி கண்டார்
மயங்கினுர் வாயில் நன்னீர்
சிந்திடக் கையில் ஊனுஞ்
சிலையுடன் சிதறி வீழக்
கொந்தலர் பள்ளித் தாமம்
குஞ்சிநின் றலைந்து சோரப்
பைந்தழை அலங்கல் மார்பர்
நிலத்திடைப் பதைத்து வீழ்ந்தார்.

3. விழுந்தவர் எழுந்து சென்று
துடைத்தனர் குருதி வீழ்வ(து)
ஒழிந்திடக் காணுர் செய்வ
தறிந்திலர் உயிர்த்து மீள
அழிந்துபோய் வீழ்ந்தார் தேறி
"யாரிது செய்தார்" என்ளு
எழுந்தனர் திசைகள் எங்கும்
பார்த்தனர் எடுத்தார் வில்லும்.

4. வேடரைக் காணுர் தீய
விலங்குகள் மருங்கும் எங்கும்
நாடியுங் காணுர் மீண்டும்
நாயனுர் தம்பால் வந்து

நீடிய சோகத் தோடு
நிறைமலர்ப் பாதம் பற்றி
மாடுறக் கட்டிக் கொண்டு
கதறினர் கண்ணீர் வார.

மருத்துவம் செய்தல்

5. நினைத்தனர் வேறு வேறு
நெருங்கிய வனங்கள் எங்கும்
சினத்திடைப் பிரிந்த செங்கண்
ஏறென வெருக்கொண் டெய்திப்
புனத்திடைப் பறித்துக் கொண்டு
பூதநா யகன்பால் வைத்த
மனத்தினும் கடிது வந்தம்
மருந்துகள் பிசைந்து வார்த்தார்.

6. மற்றவர் பிசைந்து வார்த்த
மருந்தினல் திருக்கா ளத்திக்
கொற்றவர் கண்ணிற் புண்ணீர்
குறைபடா திழியக் கண்டும்
இற்றையின் நிலைமைக் கென்னே
இனிச்செயல் என்று பார்ப்பார்
உற்றநோய் தீர்ப்ப தூனுக்
கூனெனும் உரைமுன் கண்டார்.

கண்ணை அப்புதல்

7. இதற்கினி என்கண் அம்பால்
இடந்தப்பின் எந்தை யார்கண்
அதற்கிது மருந்தாய்ப் புண்ணீர்
நிற்கவும் அடுக்கும் என்று
மதர்த்தெழும் உள்ளத் தோடு
மகிழ்ந்துமுன் னிருந்து தங்கண்
முதற்சரம் எடுத்து வாங்கி
முதல்வர்தங் கண்ணில் அப்ப,

8. நின்றசெங் குருதி கண்டார்
நிலத்தினின் றேறப் பாய்ந்தார்

குன்றென வளர்ந்த தோள்கள்
கொட்டினார் கூத்தும் ஆடி
நன்றுநான் செய்த இந்த
மதியென நகையுந் தோன்ற
ஒன்றிய களிப்பி னாலே
உன்மத்தர் போல மிக்கார்.

9. வலத்திருக் கண்ணில் தங்கண்
அப்பிய வள்ள லார்தம்
நலத்தினைப் பின்னுங் காட்ட
நாயனார் மற்றைக் கண்ணில்
உலப்பில்செங் குருதி பாயக்
கண்டனர் உலகில் வேடர்
குலப்பெருந் தவத்தால் வந்து
கொள்கையின் உம்பர் மேலார்.

10. கண்டபின், "கெட்டேன் எங்கள்
காளத்தி யார்கண் ஒன்று
புண்தரு குருதி நிற்க
மற்றைக்கண் குருதி பொங்கி
மண்டுமற் றிதனுக் கஞ்சேன்
மருந்துகை கண்டேன் இன்னும்
உண்டொரு கண் அக் கண்ணை
இடந்தப்பி ஒழிப்பேன்" என்று,

11. கண்ணுதல் கண்ணில் தங்கண்
இடந்தப்பின் காணும் நேர்பா(டு)
எண்ணுவார் தம்பி ரான்தன்
திருக்கண்ணில் இடக்கால் ஊன்றி,
உள்நிறை விருப்பி னோடும்
ஒருதனிப் பகழி கொண்டு
திண்ணனார் கண்ணில் ஊன்றத்
தரித்திலர் தேவ தேவர்.

12. செங்கண்வெள் விடையின் பாகர்
திண்ணனார் தம்மை யாண்ட

அங்கணர் திருக்கா ளத்தி
அற்புதர் திருக்கை அன்பர்
தங்கண்முன் இடக்குங் கையைத்
தடுக்கமுன் றடுக்கு நாக
கங்கணர் அமுத வாக்குக்
"**கண்ணப்ப நிற்க**" என்ற.

பேறு பெறுதல்

13. கானவர் பெருமா னார்தங்
கண்ணிடந் தப்பும் போதும்
ஊனமு துகந்த ஐயர்
உற்றுமுன் பிடிக்கும் போதும்
ஞானமா முனிவர் கண்டார்
நான்முகன் முதலா யுள்ள
வானவர் வளர்பூ மாரி
பொழிந்தனர் மறைகள் ஆர்ப்ப.

14. பேறினி இதன்மேல் உண்டோ
பிரான்திருக் கண்ணில் வந்த
ஊறுகண் டஞ்சித் தங்கண்
இடந்தப்ப உதவுங் கையை
ஏறுயர்த் தவர்தங் கையால்
பிடித்துக்கொண் "டென் வலத்தில்
மாறிலாய்! நிற்க" என்று
மன்னுபே ரருள்பு ரிந்தார்.

அருஞ்சொற்பொருள்

பெரியபுராணம் - செயற்கரிய செய்த சைவப் பெரியார்களைப் பற்றிய பழைய வரலாறு. இதனைப் பாடியவர் சேக்கிழார். அவர் காலம் கி. பி. 12ஆம் நூற்றுண்டின் முற்பகுதி.

1. அண்ணலார் - பெருமை பொருந்தியவர், சிவபெருமான். முனிவனூர் - சிவகோசரியார். பரிவு - அன்பு. நயனம் - கண். துண்ணென-திடீரென்று. வண்ணம்-அழகு. வெஞ்சிலை-வெம்மை + சிலை, கொடிய வில். வல்விரைந்து - மிகவும் விரைந்து.

2. நன்னீர் - நன்மை + நீர். ஊன் - இறைச்சி. கொந்து-கொத்து. அலர் - மலர்கின்ற. பள்ளித்தாமம் - பூக்களும் இலைகளும். குஞ்சி - ஆண்களின் தலைமுடி. பைந்தழை - பசுமை + தழை = பசிய தழைகள். அலங்கல் - மாலை.

3. உயிர்த்து - பெருமூச்சு விட்டு. அழிந்து - செய்வது அறியாது வருந்தி. இது - குருதி வருதல்.

4. நாயனுர் - சிவபெருமான். மலர்ப்பாதம் - மலர் போன்ற பாதம். மாடு உற - பக்கம் பொருந்த. வார - பெருக.

5. வேறு வேறு - அடுக்குத்தொடர். வெருக்கொண்டு - வெருண்டு, மருட்சியடைந்து. வெருவுதல்-அஞ்சுதல். ஏறு-எருது. பூதநாயகன் - பூதங்களுக்குத் தலைவன், சிவபெருமான். பிசைந்து வார்த்தார் - மருந்து இலைகளைப் பிழிந்து சிவபெருமான் கண்ணில் வார்த்தனர்.

6. கொற்றவர் - வெற்றியை உடையவர், சிவபெருமான். இழிய-வடிய. 'ஊனுக்கு ஊன்' என்பது பழமொழி.

7. இடந்து - பெயர்த்து. எந்தையார் - எம் அப்பனுர், சிவ பெருமான். மதர்த்து - களித்து. சரம் - அம்பு.

8. செங்குருதி - செம்மை + குருதி. மதி - யோசனை. ஒன்றிய-பொருந்திய. உன்மத்தர் - மதம் மிக்கவர்.

9. வள்ளலார் - கண்ணப்ப நாயனுர்; கண்ணை வழங்கியதால் வள்ளல் எனப்பட்டார். நலத்தினை - நல்ல தன்மையை. உலப்பு இல் - இடைவிடாது. கொள்கை - கொள்ளப்பட்டது; இங்கு அன்பு குறித்தது. உம்பர் - தேவர்.

10. காளத்தியார் - திருக்காளத்தியில் எழுந்தருளியுள்ள சிவ பெருமான். இதனுக்கு - இங்ஙனம் நிற்காமல் குருதி வருவதற்கு.

11. கண்ணுதல் - நெற்றியில் கண்ணை உடைய சிவபெருமான். நேர்ப்பாடு - கண்ணுக்குக் கண் நேர்ப்பட்டு அமையும் பொருத்தம். தம்பிரான் - தம் + பிரான் - தங்கள் பிரான், சிவபெருமான். பிரான் × பிராட்டி. உள் நிறை - மனத்தில் நுழைந்து எழுந்த. ஒரு -ஒப்பற்ற. பகழி - அம்பு. தரித்திலர் - பொறுத்திலர். தேவதேவர் - சிவ பெருமான்.

12. செங்கண் - செம்மை + கண். விடை - எருது. அங்கணர் - அருள் உடையவர். என்ற - என்றன.

13. கானவர் - வேடர். கான் - காடு. ஐயர் - சிவபெருமான். உற்று - பொருந்தி. ஞானமாமுனிவர் - சிவகோசரியார். மறைகள்-வேதங்கள்.

14. பேறு - பயன். ஊறு - குருதி ஊற்று. ஏறு உயர்த்தவர் எருதுக்கொடியை உயர்த்தியவர், சிவபெருமான். மாறு இலாய் ஒப்பு, உயர்வு அற்றவனே. வலத்தில் - வலப்பக்கத்தில். நிற்க நிற்பாயாக! பேரருள் - பெரிய திருவருள்.

### கேள்விகள்

1. சிவபெருமான் ஏன் தம் கண்களுள் ஒன்றிலிருந்து குருதி சோரும்படி செய்தார் ?
2. சிவபெருமான் கண்ணிலிருந்து குருதி வெளிப்படுவதைக் கண்ட திண்ணனுர் யாது செய்தார் ?
3. திண்ணனுர் குருதியை நிறுத்த மேற்கொண்ட முதல் முயற்சி யாது ?
4. திண்ணனுர் குருதியை எவ்வாறு நிறுத்தினுர் ?
5. திண்ணனுர் சிவபெருமானது இரண்டாம் கண்ணிலிருந்து வெளிப்பட்ட குருதியைக் கண்டு என்ன சொன்னுர் ? என்ன செய்தார் ?
6. "கண்ணப்ப நிற்க"—இது யார் கூற்று ? இங்ஙனம் கூறக் காரணம் யாது ?

### பயிற்சி

1. இப்பாடப் பகுதியில் வந்துள்ள சிவபெருமானைக் குறிக்கும் சொற்களையும் தொடர்களையும் சொல்லுக.

2. இப்பாடப் பகுதியில் திண்ணனுரைக் குறிக்க வந்துள்ள சொற்களையும் தொடர்களையும் கூறுக.

3. இப்பாடப் பொருளைச் சுருக்கி 30 வரிகளுள் ஒரு கட்டுரை எழுதுக.

4. சிவகோசரியாரே இப்பாடச் செய்தியைக் கூறுவதுபோலக் கூறுக.

5. சிவபெருமானே இப்பாடச் செய்தியைச் சொல்வதுபோலச் சொல்லுக.

6. திண்ணனுரே இப்பாடச் செய்தியை மொழிவதுபோல மொழிக.

## 2. கம்பராமாயணம்

### *இராமன் நகர் நீங்குதல்*

[தசரதன் அயோத்தி நாட்டுக்கு அரசன். அவனுக்கு மனைவியர் மூவர். கோசலை, சுமித்திரை, கைகேயி என்பன அவர்தம் பெயர்கள். கோசலைக்கு இராமனும் கைகேயிக்குப் பரதனும், சுமித்திரைக்கு இலக்குவனும் சத்துருக்கனனும் பிள்ளைகள். தசரதன் தன் மூத்த மகன் இராமனுக்குப் பட்டம் கட்ட விரும்பினுன். கைகேயி தன் மகன் பரதனுக்கே பட்டம் கட்ட வேண்டும், இராமன் பதினுன்கு ஆண்டுகள் காடுசெல்ல வேண்டும் என்று வற்புறுத்தினுள். அவற்

றைக்கேட்ட தசரதன் மயங்கி விழுந்தான். அப்பொழுது கைகேயி இராமனை அழைத்துப் பரதன் நாடாள வேண்டும் என்பதும் இராமன் பதினான்கு ஆண்டுகள் காடேக வேண்டும் என்பதும் அரசனது விருப்பம் என்றாள். அதுகேட்டு மகிழ்ந்த இராமன்,]

### இராமன் கூற்று

1. மன்னவன் பணியன் றாகில்
நும்பணி மறுப்ப னோஎன்
பின்னவன் பெற்ற செல்வம்
அடியனேன் பெற்ற தன்றோ
என்இதின் உறுதி அப்பால்
இப்பணி தலைமேற் கொண்டேன்
மின்னொளிர் கானம் இன்றே
போகின்றேன் விடையும் கொண்டேன்.

[இராமன் தலையில் முடியில்லாததைக் கண்ட கோசலை, "முடிபுனைதற்கு இடையூறு உண்டோ !" என்று கேட்டாள்.]

### இராமன் கோசலையிடம் கூறுதல்

2. மங்கை யம்மொழி கூறலும் மானவன்
செங்கை கூப்பிநின் காதற் றிருமகன்
பங்க மில்குணத்(து) எம்பி பரதனே
துங்க மாமுடி சூடுகின் றான்என்றான்.

### கோசலையின் கூற்று

3. முறைமை யன்றென்ப தொன்றுண்ட தல்லது
நிறைகு ணத்தவன் நின்னினு நல்லனால்
குறைவி லன்னெனக் கூறினாள் நால்வர்க்கு
மறுவி லன்பினில் வேற்றுமை மாற்றினாள்.

### இராமன் காடு செல்வதை அறிந்து மக்களும் பிறவுயிர்களும் வருந்துதல்

4. கிள்ளையொடு பூவை யழுத கிளர்மாடத்
துள்ளுறையும் பூசை யழுத வுருவறியாப்
பிள்ளை யழுத பெரியோரை யென்சொல்ல
வள்ளல் வனம்புகுவான் என்றுரைத்த மாற்றத்தால்.

### இலக்குவன் சீற்றம்

5. சிங்கக் குருளைக் கிடுதீஞ்சுவை ஊனை நாயின்
வெங்கட் கடுங்குட் டியையூட்ட விரும்பி னுளே
நங்கைக் கறிவின்திறம் நன்றிது நன்றி தென்னுக்
கங்கைக் கிறைவன் கடகக்கை புடைத்து நக்கான்.

6. விண்ணுட்டவர் மண்ணவர் விஞ்சையர் நாகர் மற்றும்
எண்ணுட்டவர் யாவரும் நிற்கவொர் மூவ ராகி
மண்ணுட்டுநர் காட்டுநர் வீட்டுநர் வந்த போதும்
பெண்ணுட்டம் ஒட்டேன் இனிப்பேருல கத்துள்
[என்றுன்.*

### இராமன் இலக்குவனை அமைதிப்படுத்துதல்

7. நதியின் பிழையன்று நறும்புனல் இன்மை அற்றே
பதியின் பிழையன்று பயந்து நமைப்பு ரந்தாள்
மதியின் பிழையன்று மகன்பிழை யன்று மைந்த
விதியின் பிழைநீ இதற்கென்னை வெகுண்ட தென்றுன்.

[இலக்குவன் இராமனுடன் காடுசெல்லத் துணிந்தான். பின்பு இருவரும் சுமித்திரையைக் கண்டனர்.]

### சுமித்திரை இலக்குவனுக்கு அறிவுரை கூறுதல்

8. ஆகாத தன்றுலுனக்(கு) அவ்வனம் இவ்வ யோத்தி
மாகாதல் இராமனம் மன்னவன் வையம் ஈந்தும்
போகா வுயிர்த்தாயர் நம்பூங்குழற் சீதை யென்றே
யேகாய் இனியிவ்வயின் நிற்றலும் ஏதம் என்றுள்.

9. பின்னும் பகர்வாள் மகனேயிவன் பின்செல் தம்பி
யென்னும் படியன்(று) அடியாரினில் ஏவல் செய்தி
மன்னுந் நகர்க்கே யிவன்வந்தி டின்வாவ தன்றேல்
முன்னம் முடியென்றனள் வார்விழி சோர நின்றுள்.

[இராமன் நிகழ்ந்ததைச் சீதையிடம் கூறித் தான் காடு செல்வதாகவும் அவள் தன்னுடன் வரவேண்டா என்றும் கூறினுன். அப்பொழுது,]

---

* இடையில் பல பாக்கள் விடப்பட்டமை கருதி, 'என்னு' என்பது 'என்றுன்' என்று மாற்றப்பெற்றது.

### சீதை வருந்திக் கூறுதல்

10. அன்ன தன்மையள் ஐயனும் அன்னையுஞ்
சொன்ன செய்யத் துணிந்தது தூயதே
என்னை என்னை இருத்திஎன் றுய்எனு
உன்ன உன்ன வுயிருமி ழாநின்றுள்.

11. பரிவி கந்த மனத்தொடு பற்றிலா(து)
ஒருவு கின்றனை ஊழி யருக்கனும்
எரியும் என்பது யாண்டைய தீண்டுநின்
பிரிவி னுஞ்சுடு மோபெருங் காடென்றுள்.

[சீதை தன்னைவிட்டுப் பிரிந்திராள் என்பதையறிந்த இராமன் அவளை அழைத்துக்கொண்டு இலக்குவனுடன் காடு சென்றுன்.]

### அருஞ்சொற்பொருள்

கம்பராமாயணம் - கம்பரால் பாடப்பெற்ற இராமாயணம். கம்பர் கி. பி. 12ஆம் நூற்றுண்டின் பிற்பாதியில் வாழ்ந்தவர்.

1. பணி - கட்டளை. பின்னவன் - தம்பி, பரதன். இதின் - இதனினும் மேலான. உறுதி-நன்மை. அப்பால்-பின்பு. மின்னெளிர்-மின்னல் போன்ற வெயில் விளங்குகின்ற.

2. மங்கை - கோசலை. மானவன் - மநு மரபில் பிறந்தவன்; இராமன். செங்கை - செம்மை+கை. காதல் - அன்பிற்குரிய. பங்கம்-குற்றம். எம்பி - எம் பின்னவன்; தம்பி. துங்க - தூய, உயர்வாகிய.

3. முறைமையன்று-மூத்தவன் இருக்க இளையவன் அரசாளுதல் அரசநீதியன்று. அது-முறைமையன்று என்பது. மறு-குற்றம். கோசலை நான்கு பிள்ளைகளிடத்திலும் ஒத்த அன்புடையவள்.

4. கிள்ளை - கிளி. பூவை - நாகணவாய்ப் பறவை. கிளர் - விளங்குகின்ற. மாடம்-இல்லம். உறையும்-வாழும். பூசை-பூனை. வள்ளல் - இராமன்.

5. குருளை – குட்டி. தீஞ்சுவை - தீம்+சுவை = இனியசுவை. நங்கை - பெண்களிற் சிறந்தவள்; கைகேயி. நம்பி – ஆண்களிற் சிறந்தவன். நன்றிது நன்றிது-அடுக்குத்தொடர். என்னு - என்று. கங்கைக்கு இறைவன் - இலக்குவன். புடைத்து-கொட்டி. நக்கான்-சிரித்தான்; நகு – பகுதி.

6. விண்ணுட்டவர் – தேவர். விஞ்சையர் - வித்தியாதரர். நாகர் - பாதாள உலகத்தவர். எண்நாட்டவர் - எண்ணத்தக்க பல நாட்டவர். மண்நாட்டுநர் - நிலத்தைப் படைப்பவர், பிரமன்.

காட்டுநர் - காப்பவர், திருமால். வீட்டுநர் - அழிப்பவர், சிவன். ஓர்மூவர் - ஒப்பற்ற மும்மூர்த்திகள். ஆகி-ஒன்ருகி. பெண்நாட்டம்- பெண்களின் நோக்கத்திற்கு. ஒட்டேன் - இடம் கொடேன்.

7. நறும்புனல் – நல்லநீர். பதி - தந்தை, தசரதன். பயந்து - பெற்று. புரந்தாள் - பாதுகாத்தவள், கைகேயி. மதி - அறிவு. மகன் - பரதன். மைந்த - இளையவனே. என்னை - என்.

8. ஆகாதது - சொல்லத்தகாதது. வையம் ஈந்தும் - இராமன் நாட்டைப் பரதனுக்குக் கொடுத்துக் காட்டிற்குச் சென்ற பின்பும். தாயர் - தாய். ஏகாய் - இராமனுடன் செல்வாயாக. ஏதம் - குற்றம்.

9. பகர்வாள் - சொல்லுவாள். முன்னம் முடி – ஏதேனும் கேடு வருமென்று தெரியின் இராமனுக்கு முன்பே உயிரை விட்டுவிடு. வார் - நீண்ட.

10. அன்ன தன்மையள் – (திருமால் இராமனுக வந்தபோது அவனைவிட்டுப் பிரிய மனமில்லாது திருமகள் சீதையாகப் பிறந்தாள்.) அத்தன்மையுடைய சீதை. ஐயன்-தந்தை. என்னை-எக்காரணத்தால். இருத்தி-இருப்பாயாக. எனு -என்றுகூறி. உன்ன உன்ன -(இராமன் கூறியதை) நினைக்க நினைக்க, அடுக்குத்தொடர். உயிர் உமிழா நின்ருள் - பெருமூச்சு விடலானுள்.

11. பரிவு - இரக்கம். இகந்த-நீங்கிய. பற்று - விருப்பம். ஒருவுகின்றனை – (என்னைவிட்டு) நீங்குகின்ருய். ஊழி அருக்கன் - உலகம் அழியும் காலத்துப் பகலவன். யாண்டையது - (உனது பிரிவுத் துயரால் உண்டாகும் வெப்பத்திற்கு முன்) எத்தன்மையது.

### கேள்விகள்

1. கைகேயி இராமனை நோக்கிக் கூறியது யாது?
2. கைகேயி கூறியது கேட்ட இராமன் யாது கூறினுன்?
3. இராமன் கோசலையிடம் கூறியது யாது?
4. பரதன் முடிசூடுகிருன் என்று இராமன் கூறக்கேட்ட கோசலை யாது கூறினுள்?
5. இராமன் காடு செல்வதை அறிந்து வருந்திய உயிர்கள் யாவை?
6. இலக்குவன் சீற்றம் கொண்டு கூறியவை யாவை?
7. இராமன் இலக்குவனை எப்படி அமைதிப்படுத்தினுன்?
8. சுமித்திரை இலக்குவனுக்குக் கூறிய அறிவுரை யாது?
9. தன்னைக் காட்டிற்கு வரவேண்டா என்று கூறிய இராமனை நோக்கிச் சீதை வருந்திக் கூறியது யாது?

### பயிற்சி

1. பிரித்துக்காட்டுக :—மின்னொளிர், இப்பணி, செங்கை, காதற்றிருமகன், உள்ளுறையும், பின்னவன், அன்றலர்ந்த, விண்ணாட்டவர், பிழையன்று·

2. சேர்த்துக் கூறுக :—மேல்+கொண்டு, அ+மொழி, அன்று+என்பது, அன்று+ஆகில், மின்+ஒளிர், காதல்+திருமகன், உறு+அறியா.

3. இப்பாடச் செய்தியை முப்பது வரிகளுள் ஒரு கட்டுரையாக எழுதுக.

4. இராமனே இப்பாடச் செய்தியைக் கூறுவதுபோலக் கூறுக.

# 3. நளவெண்பா

## *சுயம்வர காண்டம்*

[அன்னப்பறவை தமயந்தியின் பேரழகையும் நற்பண்புகளையும் நளனிடம் எடுத்துக் கூறியது. பின்பு நளன் அதனைத் தன் பொருட்டுத் தமயந்தியிடம் தூது செல்ல வேண்டினன். அது உடனே தமயந்தி இருந்த நகரை நோக்கிப் பறந்தது.]

### அன்னம் தமயந்தியை அடைதல்

1. மன்னன் விடுத்த வடிவில் திகழ்கின்ற
அன்னம்போய்க் கன்னி அருகணைய—நன்னுதலும்
தன்ஆடல் விட்டுத் தனியிடம்சேர்ந்(து)
என்நாடல் சொல்என்றாள் ஈங்கு. [ஆங்கதனை

### அன்னம் நளனது பெருமை கூறல்

2. செம்மனத்தான் தண்ணளியான் செங்கோலான் [மங்கையர்கள்
தம்மனத்தை வாங்குந் தடந்தோளான்—மெய்ம்மை
நளனென்பான் மேனிலத்தும் நானிலத்தும்
உளனென்பான் வேந்தன் உனக்கு. [மிக்கான்

3. "அறங்கிடந்த நெஞ்சும் அருள்ஒழுகு கண்ணும்
மறங்கிடந்த திண்தோள் வலியும்—திறங்கிடந்த
செங்கண்மால் அல்லனேல் தேர்வேந்தர் ஒப்பரோ
அங்கண்மா ஞாலத்(து) அவற்கு!"

### தமயந்தி அன்னத்தை வேண்டுதல்

4. "வாவி உறையும் மடஅனமே! என்னுடைய
ஆவி உவந்தளித்தாய் ஆதியால்—காவினிடைத்
தேர்வேந்தற்(கு) என் நிலைமை சென்றுரைத்தி
[என்றுரைத்தாள்
பார்வேந்தன் பாவை பதைத்து.

[சுயம்வர நாளில் மன்னர் பலரும் தேவரும் நளனும் மண்டபத்தில் கூடியிருந்தனர்.]

### தமயந்தி மண மண்டபத்திற்கு வருதல்

5. மன்னர் விழித்தா மரைபூத்த மண்டபத்தே
பொன்னின் மடப்பாவை போய்ப்புக்காள்—
[மின்னிறத்துச்
செய்யதாள் வெள்ளைச் சிறைஅன்னம் செங்கமலப்
பொய்கைவாய்ப் போவதே போன்று.

6. மன்னர் குலமும் பெயரும் வளநாடும்
இன்ன பரிசென்(று) இயல்அணங்கு—முன்னின்று
தார்வேந்தன் பெற்ற தனிக்கொடிக்குக் காட்டினாள்
தேர்வேந்தர் தம்மைத் தெரிந்து.

### தமயந்தி திகைத்தல்

7. காவலரைத் தன்சேடி காட்டக்கண்(டு) ஈரிருவர்
தேவர் நளன்உருவாச் சென்றிருந்தார்—பூவரைந்த
மாசிலாப் பூங்குழலாள் மற்றவரைக் காணநின்(று)
ஊசலா டுற்றாள் உளம்.

### தெய்வத்தை வேண்டல்

8. மின்னுந்தார் வீமன்தன் மெய்ம்மரபில் செம்மைசேர்
கன்னியான் ஆகில் கடிமாலை—அன்னந்தான்
சொன்னவனைச் சூட்ட அருளென்றாள் சூழ்விதியின்
மன்னவனைத் தன்மனத்தே வைத்து.

### நளனை அறிதல்

9. கண்இமைத்த லால்அடிகள் காசினியில்
[தோய்தலால்
வண்ண மலர்மாலை வாடுதலால்—எண்ணி

நறுந்தா மரைவிரும்பும் நன்னுதலே அன்னாள்
அறிந்தாள் நளன்தன்னை ஆங்கு.

### மணமாலை சூட்டல்

10. விண்ணரசர் எல்லோரும் வெள்கி மனம்சுளிப்பக்
கண்ணகல் ஞாலம் களிகூர—மண்ணரசர்
வன்மாலை தம்மனத்தே சூட, வயவேந்தைப்
பொன்மாலை சூட்டினாள் பொன்.

### அருஞ்சொற்பொருள்

நளவெண்பா = நளன் + வெண்பா ; நளனது வரலாற்றை வெண்பாவிற் கூறும் நூல் ஆதலின் 'நளவெண்பா' என்று பெயர் பெற்றது. இந்நூல் (1) சுயம்வர காண்டம், (2) கலிதொடர் காண்டம், (3) கலி நீங்கு காண்டம் என்னும் மூன்று பிரிவுகளைக் கொண்டது ; 424 வெண்பாக்களைக் கொண்டது. இந்நூலை இயற்றியவர் புகழேந்திப் புலவர் ; கி. பி. 13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.

1. நன்னுதல் - நல்ல நெற்றி ; இங்குத் தமயந்தியைக் குறித்தது. நாடல் - விரும்பிவந்த காரணம்.

2. வாங்கும் - வளைக்கும் (கவரும்). நானிலம் - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் கொண்ட நிலம்.

3. மறம் - வீரம். திறம் - மேன்மை. அவற்கு=அவன் + கு.

4. அனம் - அன்னம். உரைத்தி - சொல்வாய், முன்னிலை ஒருமை வினைமுற்று. பாவை - பதுமை, தமயந்திக்கு உவமையாகி வந்தது.

5. விழித்தாமரை - விழியாகிய தாமரை. மடம் - இளமை. செய்ய - சிவந்த.

6. பரிசு - விதம். இயல் அணங்கு - அழகிய தெய்வப் பெண் போன்ற தோழி. கொடி - கொடிபோன்ற தமயந்தி.

7. காணா - கண்டு. காவலர் - குடிகளைக் காப்பவர், அரசர். வரைந்த - முடிக்கப்பெற்ற. மாசிலா = மாசு + இலா. காணா - கண்டு. உளம் ஊசலாடுற்றாள் - மனத்தடுமாற்றம் அடைந்தாள்.

8. கடிமாலை - மணமாலை. சூழ்விதியின் மன்னவன் - உயிர்களைச் சூழும் ஊழ்வினைக்குத் தலைவனாகிய கடவுள்.

9. காசினி - நிலவுலகம். தோய்தல் - படிதல். நறுந்தாமரை விரும்பும் நன்னுதல் - திருமகள், இலக்குமி.

10. வெள்கி - வெட்கம் அடைந்து, வினையெச்சம். சுளிக்க - சினம் கொள்ள. கண்ணகல் = கண் + அகல் - இடமகன்ற. ஞாலம் - ஞாலத்தார். வன்மாலை - வலிமையுடைய மயக்கம். வயம் - வெற்றி. பொன் - இலக்குமி.

## கேள்விகள்

1. அன்னம் நளனது சிறப்பைத் தமயந்திக்கு எவ்வாறு எடுத்துக் கூறியது ?
2. தமயந்தி மணமண்டபத்திற் போய்ப் புகுந்தது எதுபோன்றிருந்தது ?
3. தமயந்தி நளனை எவ்வாறு அறிந்தாள் ?
4. தமயந்தி நளனுக்கு மணமாலை சூட்டியதைக் கவி எங்ஙனம் கூறியுள்ளார் ?

## பயிற்சி

1. மேற்கண்ட செய்யுட்களில் வந்துள்ள உவமைகளைக் கூறி அவற்றை உவமேயங்களோடு பொருத்திக் காட்டுக.

2. மேற்செய்யுட்களில் வந்துள்ள நளனைக் குறிக்கும் தொடர்களைக் கூறி, அவற்றின் பொருளை விளக்குக.

3. பிரித்துக்காட்டுக:—விண்ணரசர், வயவேந்து, நறுந்தாமரை, நன்னுதல், மெய்ம்மரபு, மாசிலா, பூங்குழலாள், தனிக்கொடி, மடப்பாவை, விழித்தாமரை, மின்னிறம், அருகணைய, ஆங்கதனை.

4. இப்பத்துப் பாடற் செய்திகளையும் நளன் நமக்குக் கூறுவது போல முப்பது வரிகளில் எழுதிக் காட்டுக.

# IV. பலசுவை

## மாரிவாயில்

### 1. வேங்கடமலைச் சிறப்பு

1. தொண்டையின் எல்லை யெய்தத்
 தூயநல் லமுதை வென்ற
பண்டைநற் றமிழிற் பண்ணார்
 பாசுரம் பயில்வ தோடும்
அண்டையிற் சாமம் பாட
 அழகனாய் அமர்ந்தான் செய்ய
இண்டைநல் விழியன் நின்ற
 எழுமலை நிவந்து தோன்றும்.

2. வடுகினில் முரலும் வண்டும்
 தமிழ்தரும் குயிலும் வந்து
நெடுமலைச் சாரல் தோறும்
 நித்தமும் இசைப்பக் கேட்டுக்
கொடுநுதிக் கொவ்வைச் செவ்வாய்க்
 கிஞ்சுகங் கொஞ்சும் கோல
அடுசுவைப் பாலின் இன்சொல்
 அரம்பையர் விரும்ப வம்மா.

### 2. தஞ்சைப் பெருவுடையார் உலா

பேதையின் வினாக்களும் தாய்மார் விடைகளும்

1. வலங்கையினில் ஓங்கு மழுவையென்னி தென்றாள்
இலங்கி யிடும்பரசி தென்றார்—நலங்கொளிடம்

2. தன்னில் வளருமுழை தன்னையிது என்னென்றாள்
கன்னி யிதுகலைமான் கன்றென்றார்—இன்னதனை

3. வாங்கியெனக் கிப்போது வண்பாவை தன்னுடனே
தாங்கிவிளை யாடத் தருகென்றாள்—ஆங்கவரும்

4. மாங்குயிலே யிம்மான் வனமான் இனமல்ல
ஓங்கு முனிவரர்கள் ஓமத்தில்—ஆங்கெழுந்து

5. தேனையுற்ற பூங்கொன்றை வேணிச் சிவபெரு
மானையன்று பாய்வதற்கு வந்ததுகாண்—ஆனநெடு

6. வன்கண்மை யுள்ளதிவர் மாமலர்க்கை போலவே
நின்கை யினிலடங்கி நிற்குமோ—என்குறித்தாய்

7. வாங்கி யளித்தவுடன் மன்னு முனையுமுன்றன்
பாங்குறுபொற் பாவையையும் பாய்ந்திடுங்காண்—
[நாங்களினி

8. வானத் தெழுந்து வருங்கலைமா னைப்பிடித்துத்
தானிற்றை நாளே தருகின்றேம்—தேனேவா

9. என்ன எடுத்தார் இவளிருகண் முத்துதிர்த்தாள்
அன்னவரும் இன்சொலால் ஆற்றினர்.

## 3. திருக்குற்றலக் குறவஞ்சி

### குறத்தி மலைவளம் கூறல்

1. கொல்லிமலை யெனக்கிளைய செல்லிமலை யம்மே
கொழுநனுக்குக் காணிமலை பழநிமலை யம்மே
எல்லுலவும் விந்தைமலை யெந்தைமலை யம்மே
இமயமலை யென்னுடைய தமயன்மலை யம்மே
சொல்லரிய சாமிமலை மாமிமலை யம்மே
தோழிமலை நாஞ்சிநாட்டு வேள்விமலை யம்மே
செல்லினங்கள் முழவுகொட்ட மயிலினங்க ளாடுந்
திரிகூட மலையெங்கள் செல்வமலை யம்மே.

2. ஒருகுலத்திற் பெண்கள்கொடோம் ஒருகுலத்திற்
[கொள்ளோம்
உறவுபிடித் தாலும்விடோங் குறவர்குலம் நாங்கள்
வெருவிவருந் தினைப்புனத்திற் பெருமிருகம் விலக்கி
வேங்கையாய் வெயில்மறைத்த பாங்குதனைக் குறித்தே

அருளிலஞ்சி வேலர்தமக் கொருபெண்ணைக் கொடுத்தோம்
ஆதினத்து மலைகளெல்லாஞ் சீதனமாக் கொடுத்தோம்
பரிதிமதி சூழ்மலையைத் துருவனுக்குக் கொடுத்தோம்
பரமர்திரி கூடமலை பழையமலை யம்மே.

## அருஞ்சொற்பொருள்

**1.** மாரிவாயில் - மேகத்தைத் தூது அனுப்புதல். மாரி - மேகம். வாயில் - தூது. பாண்டியன் மகளை மணந்த அருச்சுனன், அவளைப் பாண்டிய நாட்டில் விட்டுவிட்டு அத்தினபுரம் சென்றுவிட்டான். பாண்டியன் மகள் மேகத்தை அவனிடம் தூது விடுப்பதாக இந்நூல் பாடப்பட்டுள்ளது. மேகம் தெற்கே கன்னியாகுமரியிலிருந்து வடக்கிலுள்ள அத்தினபுரம் நோக்கிச் செல்லும் வழியில் தமிழ்நாட்டின் வட எல்லையாக வேங்கட மலை காணப்படும். பாண்டியன் மகள் அம்மலையின் சிறப்பை மேகத்திற்கு எடுத்துக் கூறினாள்.

இந்நூலைப் பாடியவர் நாவலர் டாக்டர் சோமசுந்தர பாரதியார். இவர் 20ஆம் நூற்றாண்டினர்.

(1) தொண்டை - தொண்டை நாடு. பண்ணார் - இராகம் பொருந்திய. பாசுரம்-திருமால்மீது ஆழ்வார்கள் பாடியுள்ள பாக்கள். பயில்வது - சொல்வது, பாடுவது. அண்டை - பக்கம். சாமம் - சாம கானம், சாம வேதத்திலுள்ள தெய்வப் பாடல்கள். இண்டை - தாமரை. நின்ற - திருப்பதி மலைமீது திருமால் நின்ற திருக்கோலத்தில் நிற்கிறார். எழுமலை - ஏழுமலை.

(2) வடுகு - தெலுங்கு மொழி. முரலும் - ஒலிக்கும். கிஞ்சுகம் - கிளிகள். கொடுநுதி - வளைந்த முனை. கொவ்வை - கொவ்வைப்பழம் போன்ற. செவ்வாய் - சிவந்த அலகு. கொஞ்சும் - மழலை பேசும். அடு - சமைக்கின்ற. அரம்பையர் - அரம்பை என்ற தேவமாதை ஒத்த அழகிய பெண்கள்.

**2.** தஞ்சைப் பெருவுடையார்—தஞ்சைப் பெரிய கோவில் சிவபெருமான். இவ்வுலா நூலைப் பாடியவர் கொட்டையூர்—சிவக் கொழுந்து தேசிகர்; 19ஆம் நூற்றாண்டினர்.

(1) மழு - கோடரி.

(2) உழை - மான். இடந்தனில் - இடப்பக்கத்தில். கன்னி - பெண்ணே.

(3) பாவை - பொம்மை. வண்பாவை - வளம் பொருந்திய (அழகிய) பொம்மை.

(4) மாங்குயிலே - பெண்ணை அழைத்தபடி. வனமான்-காட்டில் திரிகின்ற மான். முனிவரர்கள் - தாருகாவனத்து முனிவர்கள். ஓமம் - யாகம்.

(5) வேணி - சடை. ஆன - அத்தகைய.

(6) என்குறித்தாய் - என்ன நினைத்தாய்.

(7) அளித்தவுடன் - கொடுத்தவுடன்.

(8) கலைமானை - சந்திரனிடமுள்ள மானை. இற்றை நாளே - இன்றைக்கே. தேனே - தேன் போன்றவளே.

(9) முத்து-முத்துப் போன்ற கண்ணீர். ஆற்றினர்-தேற்றினர்.

3. திருக்குற்றாலம் - திருநெல்வேலி மாவட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையடிவாரத்திலுள்ள ஒரு சிவத்தலம். குறவஞ்சி - குறத்திப் பாட்டு. இதனைப் பாடியவர் திரிகூட ராசப்பக் கவிராயர் என்பவர். இவர் காலம் 18ஆம் நூற்றாண்டின் முற்பகுதி எனலாம்.

(1) கொழுநன் - கணவன், முருகன். காணிமலை - உரிமை உடைய மலை. எல் - வெளிச்சம், ஒளி. விந்தைமலை - விந்தியமலை. எந்தை - என் அப்பன், தந்தை. தமையன் = தம் + ஐயன்-அண்ணன். நாஞ்சிநாடு - நாஞ்சில் நாடு - நாகர்கோவில் பகுதி. செல் - மேகம். முழவு கொட்ட - மிருதங்கம்போல ஒலிக்க.

(2) வெருவி-(நாங்கள்) பயந்து. பெரு மிருகம்-யானை. வேங்கையாய் - வேங்கை மரமாகி. பாங்கு - (உதவியாகிய) அழகு. இலஞ்சி - குற்றாலமலைக்கு அருகிலுள்ள வளம் மிகுந்த ஊர். அங்கு முருகனுக்குக் கோவில் இருக்கின்றது. ஒரு பெண் - ஒப்பற்ற பெண், வள்ளி. ஆதீனம் - எங்கள் இடம். பரிதி - சூரியன். மதி - சந்திரன். பரிதி மதி சூழ்மலை - சூரிய சந்திரர் சுற்றி வரும் மகா மேருமலை. பரமர் - சிவபெருமான்.

## கேள்விகள்

1. வேங்கடமலையின் சிறப்பு யாது?
2. தஞ்சைப் பெருவுடையாரைக் கண்ட பேதை தாய்மாரை நோக்கிக் கேட்ட கேள்விகள் யாவை?
3. குறவர் தம் பெண்ணை வேலனுக்கு ஏன் கொடுத்தனர்?

## பயிற்சி

1. வேங்கடமலையின் சிறப்பினை உன் சொந்த வாக்கியங்களில் விளக்கி எழுதுக.

2. பேதையின் கேள்விகளையும் தாய்மாரின் விடைகளையும் உன் சொந்த நடையில் வரைக.

3. திருக்குற்றால மலைவளத்தை விளக்கி உன் சொந்த நடையில் எழுதுக.

# BIBLIOGRAPHY

1. கலை (6ஆம் பாடம்) — "அறிவியல் கட்டுரைகள்" ப. ராமநாதன், எம். ஏ.

2. பழியர் (10ஆம் பாடம்) — ஆசிரியர் C. அன்னகாமு அவர்கள், (தலைமை ஆசிரியர், காந்தி கிராமம்), எழுதி வெளியிட்டுள்ள "மேல் மலைமக்கள்" என்னும் நூலைத் தழுவி எழுதப்பட்டது.

3. சிறுவர் குற்றம் (20ஆம் பாடம்) — தென்னார்க்காடு மாவட்டக் காவல்துறை அதிகாரி, திரு. பொ. பரமகுரு, எம். ஏ., பி. எல்., அவர்கள் எழுதிய தனிக் கட்டுரை.

4. எஞ்சிய எல்லாப் பாடங்களும் இந்நூலாசிரியர் எழுதியவை.

## THE NEW VII STANDARD TAMIL READER

*( In accordance with the latest Mysore Primary School Syllabus )*


| | | |
|---|---|---|
| 1. The title of the book | ... | **Malligai Vachakam-VII** |
| 2. The price | ... | **Rs. 2** |
| 3. Author | ... | **Dr. M. Rajamanikkanar,** **M.A., L.T., M.O.L. Ph.D.** |
| 4. Publishers | ... | **The National Publishing Co. Bangalore-1** |
| 5. Year of publication | ... | **1961** |
| 6. No. of copies printed | ... | **1,000** |
| 7. Paper used | ... | **34 lbs. Double Demy White Printing** |
| 8. Manufacture of the paper | ... | **Indian** |